-5 SEP 1998

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 20 சனிக்கிழமை [05 - 09 - 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்: 15

## வடக்கு-கிழக்கில் வதை முகாம்கள்!

### புளொட், ரெலோ அமைப்புகளை சாடுகின்றது மன்னிப்புச் சபை

லண்டன், செப்டெம்பர் 5

இலங்கையின் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் புளொட், ரெலோ அமைப்புகளினால் சித்திரவதை முகாம்கள் நடத்தப்படுவதாகவும்—

அவற்றை மூடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்—

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை தனது பிந்திய அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இத்தகைய மூன்று சித்திர வதை முகாம்கள் இயங்குவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முகாம்கள் இருபது வரை இருக்கக்கூடும்.

இந்த முகாம்களை மூடவும்—

அவை குறித்து பாரபட்ச மற்ற விசாரணை நடத்தவும்—

ஸ்ரீலங்கா அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கு எதி

( 7 ஆம் பக்கம் பார்க்க)

## வதை முகாம் விவகாரத்தை மறுக்கிறார் மாணிக்கதாஸன்

லண்டன், செப்: 5

புளொட், ரெலோ ஆகியவை சட்டவிரோத வதை முகாம்கள் நடத்துவதாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட கருத்தை புளொட் அமைப்பின் உப தலைவர் எஸ். மாணிக்க தாஸன் அடியோடு மறுத்திருக்கிறார்.

புளொட்டிடமோ, ரெலோ விடமோ — சட்ட விரோத தடுப்பு முகாம்களோ, சித்திர வதை முகாம்களோ — நாட்டின் எந்தப் பகுதியிலும்- கிடையாது என திட்டவட்டமாக மறுப்பு வெளியிட்டார் அவர்.

தமது இயக்க ஒழுங்கு விதிகளை மீறுபவர்களை தடுத்து வைத்து விசாரிப்பது தங்கள் வழக்கம் என்றும் —

பண மோசடிக்காக இவ்வாறு தடுத்துவைத்து விசாரிக்கப்பட்ட தமது இயக்க உறுப்பினர் ஒருவரே கடந்த 31 ஆம் திகதி தமது அலுவலகத்தில் இருந்து தப்பியோடியதாகவும் —

இதனைவைத்துக்கொண்டு சித்திரவதை முகாம் இருப்பதாகக் கூறுவது தவறு எனவும் —

அவர் மேலும் தெரிவித்

( 7 ஆம் பக்கம் பார்க்க)

### சுவரொட்டிகளால் அம்பாறையில் பதற்றம்

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் ஒட்டப்பட்டு வரும் அநாமேதய சுவரொட்டிகளினால் தமிழ்—முஸ்லிம் சமூகங்களிடையே பதற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

"தமிழ்த்தொழிலாளர்கள் முஸ்லிம் பிரதேசத்துக்குள் வரக்கூடாது" என்று பி.எல்.ஓ—ஸ்ரீலங்கா' என்ற அமைப்பாலும்—

தமிழ்த் தொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை முஸ்லிம் பிரதேசங்களுக்குள் செல்லக் கூடாது. முஸ்லிம்களுக்கு சலவை, சவரத் தொழில்கள் செய்யக் கூடாது. முஸ்லிம் வர்த்தகர்களிடம் பொருள்கள் வாங்கக் கூடாது." — என்று ஏ. டி. ரி. எஸ். என்ற அமைப்பின் பெயராலும் —

சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் சுவரொட்டிகளால் இரு சமூகங்களையும்சேர்ந்த அன்றாட உழைப்பாளிகள் பாதிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-21)

### தடம் புரண்ட ரயில்!

கொழும்பு, செப். 5

பொல்காவலையிலிருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த சரக்கு ரயில் ஒன்று நேற்று அதிகாலை பலன்னவுக்கும் — கடுகண்ணாவைக்கும் இடையில் தடம் புரண்டது. (உ-7)

### உ. த. பரீட்சையின்

## வினாத்தாள்கள் 'அவுட்'! ஒன்பது பேர் கைது!!

கொழும்பு, செப்: 5

அண்மையில் நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் கணக்கியல் பகுதி I, பகுதி II வினாத்தாள்கள் கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றில் முன்கூட்டியே வெளியான சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலீஸார் நேற்று 9 பேரைக் கைது செய்துள்ளனர்.

இந்த வினாத்தாள்கள் கொழும்பில் ஒரு லட்சம் ரூபாவுக்கு பெறப்பட்டுள்ளன என்றும் —

அவை அக்கரைப்பற்றில் 10 ஆயிரம் ரூபா வீதம் விற்கப்பட்டுள்ளன என்றும் —

விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரியவந்துள்ளது என்றும் —

ஓரிரு நாள்களில் முக்கிய நபர்கள் கைதாகலாம் என்றும் — பொலீஸார் தெரிவித்தனர். (உ-3)

### கிளைமோர் மீட்பு!

கொழும்பு, செப். 5

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் அம்பகாமம் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதலின்போது ஒரு கிளைமோர் கண்ணி மற்றும் 10மிதி வெடிகள் ஆகியவற்றைக் கைப்பற்றியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு விடுதலைப் புலி உறுப்பினர்கள் சினைப்பர் தாக்குதலில் உயிரிழந்ததாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

### பாதுகாப்புக் கருதி

## கோப்ரல் சோமரத்ன கண்டிச் சிறைக்கு?

கொழும்பு, செப். 5

கிருஷாந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியும், செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளதாகத் தகவல் வெளியிட்டவருமான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தம்மை கண்டிச் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு சிறைச்சாலை அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதைக் காட்டியே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்று அவர் விரைவில் கண்டிச் சிறைச்சாலைக்கு மாற்றப்படவிருக்கிறார்.

## முல்லையில் தொடர்ந்து உண்ணாவிரதப் போர்!

வவுனியா, செப். 5

நிவாரண வெட்டை ரத்துச் செய்யக் கோரி முல்லைத்தீவு செயலகம் முன்பாக மூன்றாவது நாளாக நேற்றும் உண்ணாவிரதம் இடம்பெற்றது.

நிவாரணம் வெட்டப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள— இடம் பெயர்ந்தவர்களில்— 300பேர் நேற்றைய உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர். இன்றும் உண்ணாவிரதம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 23 நாள்களாக முல்லைச் செயலகம் மறியற் போராட்டம் காரணமாகச் செயல் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆலய முன்றலில் நின்ற பெண் சூட்டுக்குப் பலி!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, செப். 5

மட்டக்களப்பு கொண்டையன்கேணி ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ள வந்திருந்த சடாட்சரம் அஞ்சலிதேவி (வயது 22) என்ற இளம் பெண் நேற்றுமுன்தினம் இரவு ஆலய முன்றலில் அமர்ந்திருந்த சமயம் ஆலயத்தின் மேற்குப் பக்கத்திலிருந்து வந்ததாகக் கூறப்படும் திடீர் துப்பாக்கி வேட்டினால் உயிரிழந்தார்.

வேட்டு அவரது நெஞ்சைத் துளைத்துள்ளது-இச்சம்பவத்தில் ஏழுவயதுச் சிறுவன் ஒருவனும் காயமுற்றான். அச்சிறுவன் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (உ-21)

### கட்டுநாயக்காவில் வைத்து

## வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் கைது!

கொழும்பு, செப். 5

நெதர்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளராகப் பதவி ஏற்பதற்காகப் புறப்பட்டுச் சென்ற சமயம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைதான வெளிவிவகார அமைச்சு அதிகாரியை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் உத்தரவிட்டார்.

வெளிவிவகார அமைச்சின் பொருளாதார விவகாரப் பிரிவில் பணியாற்றி வந்த அந்த அதிகாரி நெதர்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இரண்டாவது செயலாளராகப் பதவியேற்பதற்காகச் சென்ற சமயம், அவரது பொதியில் இரு தமிழரின் பாஸ்போட்டுகள் இருப்பதாகத் தெரிவித்து அவரை இரகசியப் பொலீஸார் கைது செய்தனர்.

அவர் விசாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

அந்த அதிகாரியும், கைதான இருவரும் நீர்கொழும்பு நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சமயம் இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (உ-3-10-21)

## தெற்கில் 19 டாக்டர்கள் வசமாக மாட்டினர்!

கொழும்பு, செப். 5

தென்னிலங்கையில் சேவை நேரத்தில் தனியார் வைத்தியசாலையில் பணியாற்றிய 19 டாக்டர்கள் வகையாக மாட்டிக்கொண்டதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் டாக்டர்கள் கடமை நேரத்தில் தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றுவதாகக் கிடைத்த தகவலையடுத்து சுகாதார அமைச்சு விசேட குழு ஒன்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டது.

அக் குழுவின் நடவடிக்கையிலேயே இந்த டாக்டர்கள் மாட்டிக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சீனியர் தியாகராசா

(உரிமையாளர், எஸ். ரி. ஆர். பான்ஸி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

6-9-98 ஞாயிறு நடைபெறவிருந்த நல்லடக்கம் 8-9-98 செவ்வாய் பிற்பகல் 1.00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறுமென்பதை தயவுடன் அறிவிக்கின்றேன். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெயசிங்கம்
(கட்டடப் பொருள் கூட்டுத்தாபனம்)

46/11, ஆசீர்வாதப்பர் வீதி,
யாழ்ப்பாணம். (58960)

## கு. கோபாலகிருஷ்ணன்

(பிரபல நாதஸ்வர வித்துவான்—நெல்லியடி)

நெல்லியடி பிரபல நாதஸ்வர வித்துவான் கு.கோபாலகிருஷ்ணன் 04-09-1998 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-9-1998) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
ஜெயசீலன்
(மருமகன்) (சி/4775)

கரவெட்டி: நெல்லியடி.

## சின்னத்தம்பி மதியாபரணம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மதியாபரணம நேற்றுக் காலை காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவராவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பகல் 12 மணிக்கு நடைபெற்று வில்லூன்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K. T பாலசுப்பிரமணியம்,
(கட்டுவன்- மயிலிட்டி தெற்கு)
ஸ்ரீலங்கா ரெலிகொம்.

120, வேம்படி றோட்,
யாழ்ப்பாணம். (சி/4771)

## ஆறுமுகம் இலகுப்பிள்ளை

வேலணையைத் தமது பிறப்பிடமாகவும் திருநெல்வேலி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இலகுப்பிள்ளை 04.09.98 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், தவமணிதேவி, கந்தசாமி (கொக்குவில்), அருட்செல்வம் (கொழும்பு), பஞ்சலிங்கம் (கொழும்பு), காந்திமலர், சண்முகநாதன் (சுண்டுக்குளி), வசந்தாதேவி, அருளானந்தம் (திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க தவரூபன் [பேரன்]

(58959)

## முருகேசர் நிருபசிங்கம்

(Retd Forest Officer)

மல்லாகம், நீலியம்பனையைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசர் தங்கமுத்து தம்பதிகளின் மகன் நிருபசிங்கம் 29-08-98 அன்று கனடாவில் காலமானார்.

இவர் புனிசவதியின் (முன்னாள் உபதபால் அதிபர், நீராவியடி) அருமைக் கணவரும், கனடாவில் வசிப்பவர்களான அசோக்குமார், ரேவதி, சுமதி ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான திருமதிகள் இராசம்மா, செல்லம்மா, பவளம்மா ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5.9.98இல் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. மகேந்திரன்
(மருமகன்)

(58961)

## ஆறுமுகம் அருளம்பலம்

(தறுமர்)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சி வனகாம்பிகைக் குளத்தில் வசித்தவருமாகிய ஆறுமுகம் அருளம்பலம் (தறுமர்) தற்போது மல்லாவியில் 01.09.98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் தியாகேஸ்வரன், விக்கினேஸ்வரன், அருளேஸ்வரன், ரேணுகா ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி பொன்னம்மாவின் (காரைநகர், தங்கோடை) மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2.9.98 புதன்கிழமை மல்லாவியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கந்தசாமி பத்மநாதன்
(மைத்துனன்)

தங்கோடை,
காரைநகர். (58942)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்.மருத்துவசங்க நூலக நிதிக்காக யாழ். மருத்துவபீட மாணவர்கள் வழங்கும் "இன்னிசை அருவி'' இசை நிகழ்ச்சி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகலில் நடைபெறவுள்ளது. (ஐ-ரி)

## முன்பள்ளி விளையாட்டு விழா

வலிகாமம்தெற்கு, செப். 5

சுன்னாகம் பனை—தென்னைவள அ.கூ.ச.ஆதரவில் ஏழாலை ஸ்ரீ முருகன் ச.ச. நிலையம், ஸ்ரீமுருகன் கி.அ. சங்கம், ஞானமுருகன் வி. கழகம், யாழ்.சர்வோதய இயக்கம் ஆகியன இணைந்து நடத்தும் மயிலங்காடு ஸ்ரீ முருகன் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத் தலைவர் க. நாகராசாவின் தலைமையில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய மைதானத்தில் விழா இடம்பெறும்.

வலிகாமம்தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராசா, சுன்னாகம் பனை—தென்னைவள அ. கூ. ச. பொது முகாமையாளர் ஜே. பி. குணரத்தினம் ஆகியோர் இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். (ஐ-152)


**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
இன்று முதல்
கமல் [ இரு வேடம் ]
சுகன்யா, கவுண்டமணி
செந்தில் நடித்த
**இந்தியன்**
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீலிஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58964



**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று மட்டும்
ரகுவரன் - சங்கீதா
நடித்த
**கள்வன்**
நாளை முதல்
அர்ஜுன்-சிம்ரான்
நடித்த
**தாயின் மணிக்கொடி**
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228
(58891)



**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா
சரத்பாபு, செந்தில்
நடித்த
**முத்து**
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

**ராஜா 'B' திரை**
யாழ்ப்பாணம்.
இன்று முதல்
முரளி, தேவயானி
பிரகாஸ்ராஜ்,
மனோரமா நடித்த
**மணி**
(சி/4737)


## நன்றி நவிலல்

க. பொ. த. உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணியில் பங்கு கொள்வதற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திய யாழ். கல்வி வலயம் 1 ஐச் சேர்ந்த அனைவருக்கும், பரீட்சைத் திணைக்களத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-- ஆசிரியர்கள்

(58963)


**புதுக்கடைத் திறப்பு விழா**

வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் இன்று (5-9-98) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல. 51 நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்

***************** *****************
**முத்துக்குமரன் ரெக்ஸ்ரைல்ஸ்**
***************** *****************

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்.

இல. 51, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். (58962)


## தவறிவிட்டது

காங்கேசு நவரத்தினம் ஆகிய எனது கைப்பை (Hand Bag) யாழ்ப்பாணத்துக்கும் — உடுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பஸ் நிலையம், Royal கூல்பாரில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(58955)


**திறப்பு விழா**



**அஜி**
தொலைத் தொடர்பு
சேவை

இன்று நண்பகல் 12.00 மணி வரையிலுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது.
உள்நாட்டு. வெளிநாட்டுத் தொலைத் தொடர்பு
இரவு பகல் சேவை
தொலைபேசி இல:- 070-212314
**ஜெயந்தி மில்ஸ்**
பிரதான வீதி, சுழிபுரம். (58956)


# மரண அறிவித்தல்

## கதிரித்தம்பி வாரித்தம்பி

(அரச மரக் கூட்டுத்தாபன ஒப்பந்தகாரர்)

அல்லிப்பளையைச் சேர்ந்த கதிரித்தம்பி வாரித்தம்பி 4-9-98 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், குமாரசுவாமி (இளைப்பாறிய கிராம சேவையாளர், உசன்), காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு சகோதரரும், கிருஷ்ணபிள்ளை (அழகு), கணேசலிங்கம் (குணம்), மகேந்திரம் (நவம்), யோகலட்சுமி (இத்தாலி), லிங்கநாதன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, ஈஸ்வரநாயகி, தேவராணி, குகதாஸ் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், றூபன் (ஜேர்மனி) மதி, றேகா, நிரோசன், நிசாந்தன், சஜீசன், பிரதாப், றஜீதாப், நிரோஜா, ஜெயந்தன், சரணி(இத்தாலி) ஆகியோரின் அன்பு பாட்டனாரும், இராசம்மா, கந்தசாமி(V.M T.) செல்லத்துரை, கனகரட்ணம், தர்மலிங்கம், தியாகராசா (நல்லூர்), இராசேந்திரம் (முருகன் லொறி உரிமையாளர், பளை), வேலாயுதபிள்ளை (சிவம்-கொழும்பு), சுந்தரலிங்கம் (இத்தாலி), இராசரட்ணம் (இளைப்பாறிய உத்தியோகத்தர் இ. போ. ச.) இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தம்பிமுத்து (இளைப்பாறிய தபால் ஊழியர்) அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (6-9-88) ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10 மணியளவில் பளை வி. எம். ரி. இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி செல்லம்மாவும்,
பிள்ளைகளும்!

வி. எம். ரி. இல்லம்,
கண்டி வீதி, பளை. (சி/4774)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்

## தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

## நல்லருள் தரும் நாயகன்

அரசகேசரி விநாயகனைத் தொழ அழிந்து போகும் தொடர்ந்த வினைகளே!

முதற்பூசைக்குரிய தெய்வமாகப் போற்றப்படுவர் விநாயகர். தனக்குமேலான தலைவர் இல்லாதவர். தன்னிகரில்லாத தெய்வம். தன்னை வணங்குவோருக்கு எல்லாம் நல்லருள் செய்பவர். பிள்ளையார் என்றும் விநாயகர் என்றும் கணேசன் என்றும் பல நாமங்களால் துதிக்கப்படுபவர்.

ஐந்தொழில் புரிய காரணனாகி ஐங்கரங் கொண்டே ஆன்மாக்கள் உய்ய உருவமேனி கொண்டு அருள் தருபவன் விநாயகப் பெருமான். அழித்தல் தத்துவமாக அமைவது தேர்த்திருவிழாவாகும். ஆன்மாக்களின் ஆணவத்தை நீக்கி அருள் தரும் பணியாகவே ஆனைமுகன் அழகிய தேரில் அகன்ற வீதியில் அசைந்து வருகிறான்.

எமது உள்ளம் என்ற தேரில் உண்மையான இறைவனை ஏற்றி, பக்தி என்ற வடம் பிடித்து அருள் என்ற இருப்பைஅடைந்தால் ஆன்ம ஈடேற்றம் தான்.

இன்று சித்திரத் தேரில் வரும் அரசகேசரி விநாயகனை தூய மனத்துடன் வழிபட்டு இம்மை, மறுமை இன்பங்களைப் பெறுவோமாக!

செம்பாட்டுப் பிள்ளையாரை செம்மையாய் தொழுதால் நன்மையாய் முடியும் நாடிய செயல்களே.

சிவஸ்ரீ
சா. சோமதேவக்குருக்கள்
(பிரதமகுரு)

### நீர்வையூரின் நம்பிக்கை

அழகுரத பவனிவரும்
அரசகேசரி விநாயகனார்
அண்டினோர் குறைதீர்க்கும்
அற்புத மூர்த்தியன்றோ
நம்பினோர் குறைதீர்க்கும்
தும்பிக்கை முகனாக
நாடி வருவோர் வினை தீர்க்கும்
நாயகன் எம் விநாயகனே
நீர்வையூரின் நிறைசெல்வம்
நிலைப்பதற்கு என்றும்
எங்கள் தும்பிக்கையானின்
நம்பிக்கையே துணை

சர்மா,
நீர்வேலி.

## அழகுரத பவனிவரும் அரசகேசரி விநாயகர்

ஐந்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்திய உண்மைகளை மக்களுக்குப் புலப்படுத்துகின்ற விழாக்களில்



தேர்த்திருவிழா எனப்படும் இரதோற்சவம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

'தேர்' என்பது ஓர் அண்டத்தை எமக்கு உணர்த்துவதாயுள்ளது. பூமிக்கு மேலே உள்ள உலககங்களையும், கீழே உள்ள உலகங்களையும் தேரின் மேற்பாகமும் தேரின் கீழ்ப்பாகமும் கொண்டதாகவும் தேரின் அடித்தட்டுப் பூவுலகமாகவும் அப்பூவுலகத்தில் எழுந்தருளி வலம் வந்து இறைவன் ஆன்மாக்களை இரட்சிப்பதாகவும் தேர்த்திருவிழாவாகிய இரதோற்சவம் நமக்கு உணர்த்துகின்றது.

நீர்வையூரின் மத்தியில் பல்வளங்களும் நிறைவுறப் பெற்றுச் சரித்திர வரலாற்று நாயகனாக விளங்கும் அரசகேசரி விநாயகப் பெருமானின் இரதோற்சவம் நடைபெறும் இந்நாளிலே முதற்பிள்ளையாக, மூத்த பிள்ளையாக, உலக முதல் நாயகனாக விளங்கும் விநாயகப் பெருமானை இரதோற்சவ பவனியிற்கண்டு விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனே! எம்வினைகளெல்லாவற்றையும் வேரறுத்து நல்லருள் புரிவீராக என இரு கரங் கூப்பித்தொழுவோமாக!

- மணிஐயா, நீர்வை

**வினோ நகைப் பூங்கா**
இல. 185, யாழ். கஸ்தூரியார் வீதி,
Telephone No. 021-2824
**சோபனா ஆடையகம்**
இல. 16, யாழ். பெரியகடை வீதி.

**கஜமுகா ரேட் சென்ரர்**
இல. 281, யாழ் K. K. S. வீதி,
Telephone No 021 2049.
**பவானி களஞ்சியம்**
இராசவீதி, நீர்வேலி.

**சாரங்கா நகைமாடம்**
இல. 177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்.
**அருள் முருகன் நகையகம்**
இல.96/1, யாழ். கஸ்தூரியார் வீதி.

**ஹரன் ஜுவல்லர்ஸ்**
இல. 50, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4767)

சாவகச்சேரி
அருள்மிகு செருக்கல்பதி

## ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## தேர், தீர்த்த விழாக்கள்

தேர்த் திருவிழா: 05 – 09 – 98 சனி
காலை 8-50 மணி

தீர்த்தத் திருவிழா: 06–09-98 ஞாயிறு
காலை 10 மணி

விழா மகோற்சவ குரு:
சிவாகமவிற்பத்ஜோதி பண்டிதர்
ஜெயஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
(புன்னாலைக் கட்டுவன்)

ஆலய குரு: பிரம்மஸ்ரீ இ. சுரேஸ்வரசர்மா
நுணாவில்

இ. கருணாகரன்
தர்மகர்த்தா

விழாச் சிறப்புற வாழ்த்துபவர்:
**முருகன் நகை மாளிகை**
தங்க வைர நகை வியாபாரம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
(சி/4766)

**ஈசன் கல்வி நிலையம்**
கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.
**கணக்கீடு A/L 99**
கிரயக் கணக்கு
திரு. பாலவாசன்
ஆரம்பம்:- 05 - 09 - 98 (சனி) 9-00 A.M.
(58936)

## சமூக, விஞ்ஞான படிப்பு வட்ட கலந்துரையாடல்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நடத்திவரும் கலந்துரையாடல் தொடரில் 7 ஆவது கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு திருநெல்வேலி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும்.

'திரைப்படமும் சமூகமும்' என்னும் தலைப்பில் இடம் பெறவுள்ள இக்கலந்துரையாடலில் க. சட்டநாதன் தலைமையுரையாற்றுவார். தொடக்கவுரையை சசிகிருஷ்ணமூர்த்தி வழங்குவார். (ஐ)

## சாயி சமித்தியில் பூரணை நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாதாந்த பூரணை (போயா) நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நிகழ்ச்சிகள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அஷ்டோத்திரம், இலட்ச அர்ச்சனை, தியானம், பண்ணிசை, பஜனை என்பனவற்றைத் தொடர்ந்து அகில இலங்கை சத்தியசாயி சேவா நிலையங்களின் இணைப்பாளர் ஸ்ரீ. செ. சிவஞானம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். [illegible] யுடன் நிகழ்ச்சிகள் நிறைவுறும். [ஐ]

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டவிதி
பிரிவு 18 (1) இன் கீழ்
வலி. வடக்கு

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

[வ – து]
தெல்லிப்பழை

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

1998 – 09 – 06

வைத்திலிங்கம் கைலைநாதன் கூட்டுறவுப் பரிசோதகராகிய எனக்கு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் 1998-07–15 திகதியிட்ட யா/ கூ/ அ/ 2061 இலக்க கடிதமூலம் கூட்டுறவுச் சங்க சட்டவிதி 18 (1) இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சி நிரலைக் கொண்ட விசேட பொதுக்கூட்டம் ஒன்று என்னால் அழைக்கப்படுகிறது. தங்களை இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். கூட்டம் எனது தலைமையில் நடைபெறும்.

இடம்: மல்லாகம் மகாவித்தியாலய மண்டபம், மல்லாகம்

நாள்: 1998 - 09 - 06 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மு. ப. 10 மணி (புதிய நேரம்)

### நிகழ்ச்சி நிரல்

1. மௌன இறை வணக்கம்
2. தலைமை உரை
3. தலைமைக் காரியாலய பரிசோதகர் உரை
4. நெறியாளர் குழு தெரிவு செய்தல்
5. நன்றியுரை

- கூட்டுறவுப் பரிசோதகர்

கூட்டுறவு அலுவலகம்,
18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
1998-08–30.

(சி/4770)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இன்று முதல் இறைச்சிக் கோழிகளை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி, நல்லூர். (58923)

Screen, Easy Chair, 2 முதிரை அலுமாரி, 2 Meat Safe, 2 பெரிய மேசை லாச்சிகள் உள்ளது. 1 கந்தோர் மேசை, 2 Safe, வாங்கு, T. V Stand முதிரை மரத்தால் செய்தது, பெரிய சேந்தைக் கட்டில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. இராமநாதன், மயிலணி, சுன்னாகம். (58884)

புதிய போட்டோ ஸ்ரர் மெசின் (Photo State Machine) Model SF1016, 780 C/O உதயன், யாழ்ப்பாணம். (58944)

### O/L MATHS

O/L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இது வரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே யில்லாதவர்களுக்கும் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (58941)

### மணமகன் தேவை

இங்கிலாந்தில் நிரந்தர வதிவிட அந்தஸ்து, நிரந்தர தொழில் உள்ள 30 வயது பட்டதாரிக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த படித்த அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும். தெரிவு செய்யப்படாதவை திருப்பி அனுப்பப்படும். விளம்பரதாரர் இல. 782, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம. (58947)

### விண்ணப்பப் படிவம்

அமெரிக்கா விசா படிவமும், விவரமும் விற்பனையாகின்றன. விலை ரூபா 4½ தபாலில் பெறுவதாயின் ரூபா 8 அனுப்பவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (58824)

### திருத்துதல்

சகல கெமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஸ் புகைப்படத்துறை துணை சாதனங்களும், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல் மாடி), கன்னாதிட்டி சந்திக்கு அருகில். (58741)

### இலவச திருமண சேவை

35 வயது அவிட்டம் சுவஸ் மணமகனுக்கு படித்த அழகிய மணப்பெண் தேவை. Sponser உண்டு. Engineers U. K, Norway, Australia மணமகன்கள் உண்டு. தொடர்பு: ஞாயிறு காலை வேளையில் துரைவிமலா, 958/8, K. K. S, வீதி, யாழ். நச்சிமார் கோவிலடி. (58856)

### அறை வாடகைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அண்மையில் பாடசாலை மாணவிகள் இருவருக்கு (விரும்பின் சாப்பாட்டுடன்) சகல வசதிகளையும் உடைய அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A. சிதம்பரநாதன், குமரன் ரேடர்ஸ், 119, கண்டி வீதி, சாவகச்சேரி. (58887)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. கலபேட, சேவல் இன கோழிகளும் உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சின்னக் கடைக்கு அருகில்) (58919)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில, ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி திங்கள், செவ்வாய், புதன் மாலை 5-30 வகுப்புகள் ஆரம்பமாகி உள்ளன. நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை நிகரை வைரவர் கோயில் முன்பாக. (58918)

### பேட்டுக் குஞ்சு

ஒரு கிழமை வளர்ச்சி அடைந்த பிறிமா கைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறிமா புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. மல்லிகாபதி, சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். (58882)

### மணமகள் தேவை

கம்பியூட்டர் எஞ்ஜினியராக மத்திய கிழக்கில் தொழில் புரியும் மாதம் ரூ. 50,000 வருமானம் பெறும், கொழும்பில் வசதியான சொந்த வீடு, வாகனம் உடைய 36 வயது பொது நிற 5' 7'' அங்குலம் உயரமுடைய மணமகனுக்கு கொழும்பில் வதியும் கிறிஸ்தவப் பெற்றோர் நல்ல சிவந்த நிறமும், அழகும், படிப்பும், குணமும் பொருந்திய மணமகளைத் தேடுகின்றனர். உடன் தொடர்பு கொள்ளவும். முதற் கடிதத்திலேயே முழு விவரமும், அண்மையில் எடுத்த புகைப் படமும் அனுப்பவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்ப்படும். தொடர்பு: இல. 778, மே/பா உதயன் (58878)

### தேவை

பாவித்த பழைய தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. நியாயமான விலைக்கு வாங்கப்படும். R மாதலிங்கம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (58564)

யாழ். நகரிலுள்ள வீடொன்றிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவைப்படுகிறார். தொடர்பு: இல. 779, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (58943)

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

பௌதிகவியல்

A/L 99

சடப்பொருளியல்

திரு: குமரன்

ஆரம்பம்: 05 - 09 - 1998

[சனி] 4-45 P. m.

(58937)

## CHRISTIAN REVIVAL CRUSADE

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்!!

## முழுநேர கிறிஸ்தவ ஊழியர்களுக்கான கருத்தரங்கு

நாள்: 98 புரட்டாதி 17 முதல் 19 வரை.
(3 நாள்கள் — வியாழன், வெள்ளி, சனி)

நேரம்: காலை 9.30 முதல் 1.30 வரை
(புதிய நேரம்)

இடம்: சீயோன் தேவாலயம்
24, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

பேச்சாளர்:
வண L.B. சில்வர்பக்
(பப்புவா நியூகினியா C R C. சபை தலைமை போதகர்)

பங்குபெறத் தகைமை வாய்ந்தவர்கள்:
முழு நேர கிறிஸ்தவ பணியில் ஈடுபடும் ஆண், பெண் இருபாலாரும்.

சபையுடன் இணைந்து ஊழியம் செய்வோரின் பெயர்ப்பட்டியலைத் தலைமைப் போதகரும், தனிப்பட்ட ஊழியர்கள் நேரடியாகவும் 15-09-98 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
போதகர்,
சீயோன் தேவாலயம்,
29, ஆசீர்வாதம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

"அனுபவமிக்க முதிர்ந்த ஊழியரின் அருளுரைகளும் ஆலோசனைகளும் உங்கள் அன்றாட கிறிஸ்தவ பணிக்கு உரமாகும்."

போதகர்
சீயோன் தேவாலயம்,
யாழ்ப்பாணம்.

(58834)

# வரவேற்பு விழா


சென்னை செங்கல்பட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் செயலாளர்,
ஸ்ரீமத் சுவாமி விருபாக்ஷானந்திஜி மகராஜ்
ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளையின் உபதலைவர்
ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ்
மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த
ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்திஜி மகராஜ்

**இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்கள்.**

இவர்களை மனமுவந்து வரவேற்கிறோம்.
இன்று பி. ப. 3-00 மணிக்கு புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்திலிருந்து இம் மூவரும் சேவாச்சிரமத்துக்கு அழைத்து வரப்படுவார்கள்.
சேவாச்சிரம நிலத்தில் புதிய நூல்நிலைய வாசிகசாலைக்கு அத்திவாரக்கல் நாட்டப்படும். இதனைத் தொடர்ந்து சேவாச்சிரமத்தில் பொதுவைபவம் நிகழும்.

முக்கிய குறிப்பு:
★ ஞானசம்பந்தர் கலாமன்ற மாணவிகளின் பஞ்சபுராணம் ஓதுதல் நிகழ்ச்சி நடைபெறும்.
★ சுவாமிகள் மூவரினதும் அருளுரைகள் இடம்பெறும்.

புதிதாக நிர்மாணிக்கப்பட உள்ள நூல்நிலையம் - வாசிகசாலையின் தோற்றம்



செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
(உடுப்பிட்டி)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

| தாயின் மடியில் | | ஆண்டவர் அடியில் |
|---|---|---|
| 16 | | 27 |
| — | | — |
| 08 | | 08 |
| — | | — |
| 1963 | | 1996 |



**அமரர் சரவணபவானந்தம் ஜெயக்குமார்**
(குமரன்)

திதி: 5-9-98

அரும் பேறு பெற்றோமென ஆசை கொண்டு
உங்கள் விழிகளில் எம் விழிகளை
நிறைத்திருந்தோம்!
வியாசன் விழிகண்டு பேருவகை கொண்டவரே!
இதயன் மொழிகேட்டு இன்பத்தில் திளைத்தவரே,
அதிஸ்ராவின் முகம்பார்க்கு முன்னரே
நீங்கள் அதிர்ச்சியைக் கொடுத்து மறைந்தீரே!
இந்த வையம் உள்ளவரை உங்கள் நினைவு மாறாது!
ஓம்சாந்தி!

உங்கள்பிரிவால் துயருறும்!
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரிகள், மாமன், மாமி,
மைத்துனர்மார், மருமக்கள்.

ஜெ. தர்மினி,
125, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(58910)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# இந்து சமயப் பேரவை முன்னாள் தலைவர்
# ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின்
# 3 ஆவது ஞாபகார்த்த விழாச் சிறப்பிதழ்

## நல்லை ஆதீன முதல்வர் ஆசி

தொண்டுள்ளத்துடன் சாமானிய மக்களின் ஆத்மீக உணர்வை மேம்படுத்த தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் ஆத்மீகப் பெருவள்ளல் ஆத்ம ஜோதி நா. முத்தையா ஆவார்.

அவர் மறைவு நம்மிடையே நிரப்ப முடியாத வெற்றிடமாக அமைந்துள்ளது என்பதை உணர்கிறோம். தனி மனிதனாக, பல பணிகளை ஆற்றி பின்னர் இந்துக்களின் தனிப் பெரும் ஸ்தாபனமான இந்து சமயப் பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்று நெருக்கடி நிறைந்த வேளையில் தொண்டுகள் பல புரிந்துள்ளார். ஆத்மஜோதியின் பணியைத் தொடர்வதே அன்னார்க்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

அவரது மூன்றாம் ஆண்டு ஞாபகார்த்த விழா சிறப்புற அமைய எமது ஆசிகள்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
முதல்வர்
திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்.

## பேரவைத் தலைவர் செய்தி

ஆத்மஜோதி என்ற ஆத்மீக சஞ்சிகையின் ஆசிரியராக சமயப்பணியில் காலடி வைத்த நா. மு. அவர்கள், காவியுடை தரியாத சந்நியாசியாக நம்முன் திகழ்ந்தவர். இன்னுரையாலும், புன்சிரிப்பாலும் அனைவரையும் கவர்ந்திழுக்கும் இவரிடம் இன்ப துன்ப வேறுபாடுகளைக் காண வியலாது. கால மறிந்து இந்து சமயப் பேரவைத் தலைமைப் பொறுப்பை ஏற்று இவர் ஆற்றிய தொண்டு ஞாலத்திலும் மாணப் பெரிதாயிற்று.

உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று எமது பேரவைப் புகழை மேலோங்க வைத்த மறைந்தும், மறையாத இந்த மாபுருஷர் தொடக்கி வைத்த பணிகளைத் தொடர்வதே நம்மவர் அருங்கடனாகும். சீரிய இப்புண்ணிய சீலரின் 3 ஆவது ஆண்டு ஞாபகார்த்த விழா சகலவித மங்கல பொலிவுகளுடன் நடைபெறப்பிரார்த்திப் போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
அருட்கவி சீ. விநாசித்தம்பி
இந்து சமயப் பேரவை தலைவர்

## முன்னாள் அரச அதிபர் அஞ்சலி

இந்த நூற்றாண்டின் இறுதி எழுபத்தைந்து ஆண்டினுள் வாழ்ந்த மதிக்கக் கூடிய தகைமைகள் அனைத்தும் தன்னகத்தே கொண்ட புண்ணிய சீலர் ஆத்ம ஜோதி நா. முத்தையா என்றால் அது மிகையாகாது.

எல்லா மதங்களையும் எந்த வித வெறுப் புணர்வுமில்லாது மதிக்கும் இவர் இந்து மதத்தின் தனித்துவத்தைப் பேணத் தொண்டுகள் பல ஆற்றியுள்ளார். எல்லா மதத்திலுமுள்ள அடிப்படைத் தத்துவத்தின் ஒருமைப்பாட்டை உணர்ந்து வாழ்ந்த மகா ஞானி இவர்.

இந்து சமயப் பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழி நடத்திச் சென்றமை நம் நாடு செய்த புண்ணியமாகும். இவர் ஆற்றியுள்ள அருட் தொண்டுகளைத் தொடர்வதே அன்னாருக்குச் நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

எஸ். சிவஞானம்
முன்னாள் அரச அதிபர்
வைமன் வீதி,
நல்லூர்.

# ஆத்மீக வீரர் ஆத்மஜோதி முத்தையா

இந்த நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து மறைந்த புண்ணிய சீலர்களில் ஒருவரும் இந்துசமயப்பேரவையின் முன்னாள் தலைவரும், ஆத்மஜோதி சஞ்சிகையின் ஆசிரியரும் சைவச் சொற்பொழிவாளரும், பிரபலஎழுத்தாளருமான ஆத்மீகப் பெருவள்ளல் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் மறைந்து இன்றுடன் மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. எனினும் அவர் நினைவுகளும் தொண்டுகளும் இன்றும் பசுமை பெற்றுத் திகழ்கின்றன.

தொண்டுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த இப்பெருந்தகையின் எண்ணரிய பணிகள் என்றும் நினைவை விட்டகலாதவை. ஏழாலைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் பெற்றோர் சிவனை மறவாத சிவதர்மவான்கள். நல்ல விவசாயிகள், ஆடு, மாடு பட்டியாக வளர்ப்பவர்கள், ஆலயத் திருப்பணிகளோடு புராண படனங்களைக் கேட்பதில் ஆர விருப்பம் உள்ளவர்கள். இத்தகைய குடும்பச் சூழ்நிலையில் பிறந்தவன் யான என்று ஆத்மஜோதி அருமைபடக் கூறுவார், அவர் தனது வாழ்வில் மூன்று தலைமுறையுடன் தொடர்புபட்டதாகவும் அவற்றில் பெரிய மாறுதல்களைக் கண்டுள்ளதாகவும் கூறுவார்.

### மாறுதல் கண்ட தர்மம்

தமது தகப்பனாரின் தகப்பனார் காலத்தில் யாரும் பால் கேட்டால் எதுவித பணமும் பெறாது பாலைக் கொடுத்துவிடுவார்களாம். தகப்பனாரின்காலத்தில் பாலைக்கோயில் தேவைக்கும், சுகயீனத்திற்கும் பால், மோர் இலவசமாகக் கொடுத்து வந்தனர். ஏனைய தேவைக்கு விலைக்கே கொடுத்து வந்தனர். தமது தலைமுறையில் பால் கேட்டால் பாலுக்குள் தண்ணீர் கலந்து விட்டு அப்பாலுக்கு பணமும் பெறுகின்றனர். இவ்வளவில் இம்மூன்று தலைமுறைகளில் தர்மம் பெரும் மாறுதலுக்குள்ளாகி விட்டது. ஆத்மீக தர்ம பாரம்பரியத்தோடு வாழ்ந்த எமது சமுதாயம் வெறும் இயந்திர வாழ்க்கையை மெய்யென்று எண்ணியுள்ளது. இந் நிலையை மாற்றியமைப்பதற்கு இளஞர் சமுதாயம் ஏன் உண்மை ஆத்மீக வீரத்துடன் கிளர்ந்தெழக் கூடாது — எனபதே ஆதம ஜோதி ஐயாவின் கேள்வியாக இருந்தது. அவ்வாறு நடக்க வேண்டும் என்பது அவரின் வேணவா.

### நாவலப்பிட்டி நற்களம்

இவ்வுணர்வோடு வாழ்ந்த ஆத்ம ஜோதி ஐயா கற்க வேண்டிய கல்விகளை அரும்பெரும் சான்றோர்களிடம் கற்றுக் கொண்டபின் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். நாவலப்பிட்டி அவருக்கு நற்பணிபுரியும் சைவ நற்களமானது. தாழ்வுற்றிருந்த மலையக மக்களின் நல்வாழ்விற்கு மகத்தான பணிகள்பல புரிந்தார். தோட்டம் தோட்டமாகச் சென்று அங்கமைந்துள்ள ஆலயங்கள் அனைத்திலும், சமய அனுட்டானங்களையும் வாழ்க்கை நெறிமுறைகளையும் அருமைபடப் போதித்தார். மலையகத்தையும் யாழ்ப்பாணத்தையும் இணைத்த மாபெரும் ஆத்மீகத் தலைவர் ஆத்ம ஜோதி என்றால் மிகையாகாது.



இவர் நாவலப்பிட்டியில் ஆசிரியராக, அதிபராக இருந்த காலத்தில் அவர் மேற்கொண்ட சமய சமூகப் பணிகளோடு, பல்வேறு நாடுகளுக்குச் சென்று தொண்டுகள் பல புரிந்துள்ளார். குறிப்பாக இந்தோனேசிய மக்களின் சைவாலய வழிபாட்டை மேம்படுத்த பல வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

நம் நாட்டில் ஆத்மீக ஒளி பரப்பிய சிவயோக சுவாமிகள், சித்தானைக் குட்டிச் சுவாமிகள் போன்ற பல ஆத்மீக ஞானிகளுடன் அளவற்ற தொடர்புடையவராய் இருந்தார். இந்திய நாட்டின் ஆத்மீகத் தலைவர்களான ரமண மகாரிஷி, காஞ்சிகாமகோடி பீடாதிபதி, பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாவா, சுவாமி ராமதாஸ், அன்னை கிருஸ்ணா பாய், சுவாமி சிவானந்தர், சுத்தானந்த பாரதியார், பித்துக்குளி முருகதாஸ், ஹரிதாஸ் சுவாமிகள் போன்றவர்களின் அருட் தொடர்பையும் பெற்றிருந்தார்.

### ஆத்மீக வீரர்

நம் நாட்டில் இனப்பிரச்சினை காரணமாக நடைபெறும் யுத்தத்தைச் சாட்டாக வைத்து இந்துக்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், இந்துக்கள் மதமாற்றம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கும், இந்துக்கள் ஏனைய மதத்தவர் போல் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கும், இந்துக்களுக்கொரு தலைமை அமைப்பு வேண்டுமென்பதை அனைவரும் ஏகோபித்துணர்ந்தனர். அதன் விளைவாக யாழ். இந்து சமயப் பேரவை நிறுவப்பட்டது. அந்நேரச் சூழ்நிலையில் பேரவைத் தலைமைப் பொறுப்பை ஏற்கப் பல பெரியார்கள் தயங்கினர். அவ்வமயம் ஐயா அவர்கள் உண்மை ஆத்மீக வீரத்துடன் பேரவைத் தலைமைப் பொறுப்பை ஏற்று மாபெரிய வரலாறு சமைத்துள்ளார்.

நம் மக்களின் ஏழ்மை நிலைமையைப் பயன்படுத்தி சில கிறிஸ்தவக்குழுக்கள் மேற்கொண்டு வந்த மதமாற்ற நடவடிக்கையால், தாய், தந்தையரை இழந்த அநாதைக் குழந்தைகள் மதம் மாறும் சூழ்நிலைஇருந்தது. இதனைமாற்றியமைப்பதற்கு நம்மத்தியில் இயங்கி வரும் சைவச் சிறுவர் இல்லங்கள் விறுவிறுப்புடன் இயங்க ஆலோசனை வழங்கினார். இயங்காத நிலையில் இருந்த கைதடி சைவச் சிறுவர் இல்லத்தை 1992 ஆம் ஆண்டு இந்துசமயப் பேரவை பொறுப்பேற்பதற்கு முதற் காரணமாய் அமைந்தவரும் இவரே.

இத்தகைப் பெருமகன் பேரவைப்பணிகளை விரிவுபடுத்தவும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமதருமைச்சகோதரர்களின் ஆத்மீக நலனைப் பேணவும் மேற்கு நாட்டுப் பயணத்தை மேற்கொண்ட வேளையில் 1995 ஆம்ஆண்டு புரட்டாதி மாதம் 8 ஆம் நாள் அமரத்துவம் அடைந்தார். அன்னார் விட்டுச் சென்ற அரும்பணிகளைத் தொடர்வதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

ஓம் சாந்தி, சாந்தி! சாந்தி!

சி. சக்திகிரீவன்
செயலாளர்,
இந்துசமயப் பேரவை

## ஆத்ம ஜோதியை ஏத்துவோம்!

அன்பின் திரளே! அருளாந் திருவுருவே
இன்பப் பெருநிதியே ஆத்மஜோதியே

என்பும் நெக்குருகச் சைவ அவை வளர்த்தாய்
அன்பினிலார்ந்த நின் சேவைதனை ஏத்துவோமே!

எமதில்லமிருந் தெமையறியாதே எமை ஓம்பினாய்
எம்பந்த ரசத் தோடுனை யென்றுமே மறவோம்.

மெய்யாயுன் பொன்னடிகள் ஏத்தியே தினந் தினம்
ஐயாவுனை யர்ச்சிக்கிறோம் எமதில்லத்திலிருந்தே.

கலாபூஷணம் பே. சந்திரசேகரம்


மலர் மணம் கமழ உரமிட்ட வர்த்தகப் பெருமக்கள்

விக்னேஸ்வரா களஞ்சியம் 8, கண்டிவீதி, சாவகச்சேரி.
சீமாட்டி புடைவைக்கடல் யாழ்ப்பாணம்.
E. S. பேரம்பலம் யாழ்ப்பாணம்.
லிங்கன் கூல்பார் யாழ்ப்பாணம்.
கணேசன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்.
குகன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்.
முருகன் மில் சாவகச்சேரி.
ஸ்ரீ சச்சிதானந்த என்ரபிறைஸ் கைதடி.
நியூ லீலா ஸ்ரோர்ஸ் கைதடி.
ரங்கன் வீடியோ சென்ரர் கைதடி.
ஜெயதனா ரெலிகொம் கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள்
# மூவர் குழு இன்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செப்: 5 சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலங்கைவந்துள்ள சென்னை செங்கல்பட்டு இராமகிருஷ்ணமிஷன் குருமுதல்வர் சுவாமி விருபக்ஷானந்தாஜி மகராஜ் தலைமையிலான குழு ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

பருத்தித்துறையில் உள்ள சேவாச்சிரமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சாரதாதேவி அன்னையார் கோயிலின் கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கும், திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சுவாமி விவேகானந்தரின் சிலைத் திறப்பு விழாவில் கலந்து கொள்வதும் இவர்களது பிரதான நிகழ்ச்சிகளாக அமையும்.

இலங்கை இராமகிருஷ்ண மிஷனின் உபதலைவர் சுவாமி ஆதம் கனானந்தஜி மகராஜ் மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தாஜி மகராஜ் ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பருத்தித்துறை இராமகிருஷ்ண மிஷனில் இடம்பெறும் கும்பாபிஷேகம் மற்றும் விசேடஹோமம், பொதுச் சொற்பொழி, விசேட பூசைகளில் இக்குழுவினர் கலந்து கொள்வர்.

தொடர்ந்து 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் இடம்பெறும் விவேகானந்தர் சிலைத் திறப்பு மற்றும் விசேடஹோமம், பொதுச் சொற்பொழிவு ஆகியவற்றிலும் இவர்கள் கலந்துகொள்வர்.

விவேகானந்தர் சொற்பொழிவுக்கு வரும் மகராஜ் குழுவினர் கல்வியங்காட்டுச் சந்தியில் இருந்து மங்கள இசை, மற்றும் பாண்ட்வாத்தியங்களுடன் பாடசாலை மாணவர்கள் அணிவகுத்துவர இராமகிருஷ்ணாலயம் வரை அழைத்து வரப்படுவர்.

சிலைத் திறப்பைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சுவாமி விருபக்ஷானந்தாஜி மகராஜ் பொதுச் சமயச் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து சுவாமிகள் குழு எட்டாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியிலும் பின்னர் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் ஆகியவற்றிலும் இடம் பெறும் சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதோடு விசேட பொதுச் சமயச்சொற்பொழிவாற்றுவர்.

ஒன்பதாம் திகதி புதன்கிழமை காலை கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா வித்தியாசாலையில் இடம் பெறும் பவள விழா நிகழ்ச்சிகளிலும் —

பின்னர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இடம் பெறும் விசேட சமய அனுட்டானங்களிலும் கலந்து கொள்வர்.

பத்தாம் திகதி வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் விசேட சொற்பொழிவில் இக்குழுவினர் கலந்து கொள்வர் சொற்பொழிவைத் தொடர்ந்து கலை கலாசார நிகழ்ச்சிகளும் கல்லூரியில் நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி சுவாமிகள் குழு விமானம் மூலம் கொழும்பு திரும்புவர்.

(இ-7-173)

## சந்நிதி உற்சவகால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப்: 5 தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்த்தி வரும் தெய்வீகக் கலை நிகழ்ச்சிகளில் —

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கலாவினோதன் சின்னமணியின் ''அருணகிரிநாதர்'' என்ற தலைப்பிலான வில்லிசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் ''ஞானவேல்'' என்ற சொற்பொழிவும் இடம்பெறும்.

(ஐ-8)

## 3 ஆயிரம் மூடை அரிசி பழுது

கொழும்பிலிருந்து லங்கா முடித கப்பலில் எடுத்துவரப்பட்ட 3ஆயிரம்மூடை சிவப்பு நாட்டரிசி உப்பு நீர் பட்டு பழுதடைந்துள்ளது.

மனித பாவனைக்கு உதவாத நிலையில் உள்ள இந்த அரிசி மூடைகளிலிருந்து பிரிக்கப்பட்டு குரு நகரில் உள்ள செயலக களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

(இ-5)

## கருத்தரங்கு

'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ''தம்பதியரின் புரிந்துணர்வு'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. அருட்கலாநிதி ரி. ஜே. கிருபாகரன் கருத்துரை வழங்குவார்.

(ஐ-5)


**BITSMANS**

கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

A/L 2000
உயிரியல்

உயிர்ப்பல்வகைமை

திரு. பாலா

ஆரம்பம்:
5-9-98 9.00 A.M.

[ 58889 ]


## முதியோர் வாரத்தைக் கொண்டாட ஏற்பாடு

தென்மராட்சி, செப்: 5 சர்வதேச முதியோர் வாரத்தை ஒட்டி ஒக்ரோபர் முதலாந் திகதி தொடக்கம் 7 ஆந் திகதிவரை கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர் வார விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் தென்மராட்சிப் பிரதேச செயலகமும், கைதடி முதியோர் இல்ல அதிகாரிகளும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

முதியோர் வாரத்தில் முதியோர்களின் கலை நிகழ்ச்சிகள், முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், சிரமதானங்கள், சிறப்புச் சொற்பொழிவுகள் போன்றவை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


## விலை குறைப்பு

**"EDNA"** நிறுவனத்தின்

யாழ். பிரதிநிதிகளாகிய நாங்கள் இன்றிலிருந்து
''பண்டிச் சொக்கோவின்'' (Bunty)
விலையை 150 ரூபாவாகவும்
''பண்டி ரொபி'' (Bunty)
பக்கட்டின் விலையை 55 ரூபாவாகவும்
குறைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிஞ்சி மருந்தகம்
558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021. 2210 (சி/4764)



## பதவி உயர்வுக்கான பாராட்டுக்கள்

**திரு. க. க. வேலாயுதபிள்ளை**

மக்கள் சேவையே மகேசன் சேவையென மாண்புறு சேவையாற்றி அச்சேவை வழி கிராம உத்தியோகத்தர் தரம் Iஇற்கான மேல் நிலை உயர்வு பெற்றமையிட்டும் தங்கள் வாழ்வு மேன்மேலும் மேன்மையுறவும் எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

காங்கேசன்துறை. (58912)



## தேவை

கொழும்பிலுள்ள ஒரு பங்களாவில் வேலை செய்வதற்கு உதவியாளர் தேவை.

★ தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
★ சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
★ இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பரதாரர்:
இல. 781,
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(58946)



## மங்களகரமான திறப்பு விழா



அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம்
ஆவணித்திங்கள் 20 ஆம் நாள்
இன்று (05 - 09 - 98) சனிக்கிழமை
பகல் 1-17 முதல் 1-33 மணி வரையுள்ள
சுப வேளையில்

**புதிய கஜீபன் நகை மாடம்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்
கே. கே. எஸ். வீதி, இணுவில்
என்ற முகவரியில் எம்மால் திறந்து
வைக்கப்படுகிறது என்பதை எமது
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன்
அன்புடன் வருகை தருமாறும் அழைக்கின்றோம்.



தங்கள் நல்வரவை நாடும்:
இ. சிறிகாந்தன்
(உரிமையாளர்)

கிளை ஸ்தாபனம்:
கஜீபன் ஜுவலரி
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

(58921)


## நீங்கா நினைவில்
## 6 ஆம் ஆண்டு



அமரர்
**இராசையா நவரத்தினம்**
(ஆசிரியர்– மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

திருமதி ந. இந்திராணி
ந. நரேந்திரன்
ந. இந்துஷா

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

(சி/4765)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரங்களினால் வசப்படாது மௌன பூசையினால் அருளும் சந்நிதி முருகன்

இறைவனின் ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்தும் மகோற்சவத்தில் அழித்தல் தொழிலைக் குறிப்பது தேர்த்திருவிழா மீண்டும் மீண்டும் பிறந்து ஓய்வில்லாது அலையும் ஆன்மாக்களைப் பீடித்துள்ள தீய சக்திகளை அழிப்பதைக் குறிப்பதும் இந்த இரதோற்சவமே.

முருகப்பெருமான் அன்ன தானக் கந்தனாக செல்லச் சந்நிதியில் குடிகொண்டுள்ளார். மந்திரங்களினால் வசப்படாது மௌன பூசையினால் அருள் சுரப்பவர். தேனும், தினையும் உண்ணக் கானக் குறத்தியிடம் களவாகச் சென்ற முருகன் இங்கு ஆலிலையில் படைக்கும் அன்னத்தில் திருப்தி காண்கிறார். அபய, வரத கரங்களினால் துயர் துடைக்கிறார்.

முருகன் கையிலேந்தியிருக்கும் அகன்ற நீண்ட கூரிய வேல் ஆணவ மலத்தைப் போக்கடிக்கும் எம்மைப் பீடித்துள்ள வினைகளனைத்தையும் போக்கும் சக்தியுள்ளது இந்த ஞான வேல் ஞானசக்தியாகிய வேல் இறைவனால் முருகனுக்கு அளிக்கப்பட்டது. வெல்லப்படுவதனாலேயே இது வேல் எனப் பெயர் பெற்றது.

உலகிலுள்ள அசையும், அசையாப் பொருள்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக உலகமே இதுதான்' என்ற பொருள்படவே தேர் அமைக்கப்படுகிறது. தேரின் வடம் பிடித்தால் எமது இடர்



நீங்கும் என்ற எண்ணத்தோடு அடியவர்கள் வடம் பிடித்து முருகனை நோக்கி பக்திப் பரவசமாக நிற்கும் நிலையை சொல்லில் வடிக்க முடியாது. காவடி எடுத்து கற்பூரச்சட்டி ஏந்தி, பிரதிஷ்டை செய்து, அடியளித்து, பஜனை பாடி சந்நிதியான் அருள்வேண்டி நிற்கும் அடியவர்கள் எண்ணில் அடங்காதவர்

ஈழத்தின் தென்பால் அமைந்த கதிர்காமத்தில் உறைந்து, இன, மத, மொழி வேறுபாடின்றி தன்னை நாடுபவர்களைக் காத்தருளும் கந்தனைப் போலவே வடபால் தொண்டமானாறு செல்லச் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் முருகனும் அருள் சுரக்கிறான் தல விருட்சமாகிய பூவரச மரத்தின் நிழலில் அமர்ந்து அடியார்கள் ஆலிலையில் படைக்கும் அன்னத்தையும், பயற்றையும், இளநீரையும் விரும்பி நைவேதி

கரவெட்டி
**வ. மாலினி**

யமாக ஏற்கிறான்.

வரலாற்றுப் பெருமையும், மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பும் உடைய சந்நிதி முருகனை ஞானிகள் பலர் வழிபட்டு அவன் கழல் சேர்ந்திருக்கிறார்கள்.

இன்றைய தேர்த் திருவிழாவில் வேண்டுவோர் வேண்டுவதை வழங்கி வினைகளையும் சந்நிதி வேலவனின் பாதம் பணிந்து பிறவிப் பிணியை நீக்க முயல்வோமாக. ★

## நஞ்சு குடித்துவிட்டு

# பனையில் ஏறியவர் கீழே விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், செப். 5

பனை மரத்தில் ஓலை வெட்ட ஏறியவர் ஓலை வெட்டிய பின் கீழே இறங்கி வரும்போது. உடல் சோர்ந்து தவறி விழுந்ததை அடுத்து, ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் போது இடை வழியில மரணமானார்.

உடுப்பிட்டி கொற்றாவத்தைப் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் எஸ். சுரேஷ்குமார் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

குடும்பஸ்தரான இவர் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாகக் கிருமிநாசினியை அருந்தியதாகவும்—

அதன் பின்னரே மரத்தில் ஏறி ஓலை வெட்டியதாகவும்-சம்பந்தப்பட்டவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும் வழியில் தெரிவித்ததாக, சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட போது தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (உ-15)

# 90 ஊழியர்களுக்கு திடீர் சுகயீனம்

கொழும்பு, செப். 5

ஹோமகமவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணி புரியும் சுமார் 90 ஊழியர்கள் அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சாப்பாட்டுப் பார்சல்களை வாங்கி உண்ட பின்னர் திடீர் வயிற்றோட்டம், மயக்கம் ஆகியவை ஏற்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (உ-7)

## விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், செப். 5

செல்வச்சந்நிதி ஆலயத்தில் இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவையொட்டி யாழ். பஸ் நிலையத்தில் இருந்தும், பொன்னாலை, சங்கானை ஆகிய இடங்களில் இருந்தும் காலை முதல் விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது. (உ-8)

# பயிற்சிப் பட்டறை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 5

ஓய்வூதியக் கொடுப்பனவு முறையில் ஏற்படுத்தப்படவிருக்கும் புதிய மாற்றங்கள் தொடர்பாக நுகேகொட பிரதேச செயலகத்தில் இன்றும் நாளையும், இடம்பெறவிருந்த பயிற்சிப் பட்டறை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

## வதை முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்)

தார்.

பொதுமக்கள் எவரையும் தாங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதில்லை எனவும் —

யாரிடமாவது இருந்து தகவல் பெறவிரும்பினால் அவரது இணக்கத்துடன் அவரை எமது அலுவலகத்திற்கு பகலில் கூட்டி வந்து விசாரணை மட்டும் செய்வதாகவும்—

அவர் மேலும் சொன்னார். (உ-7-3)

## வடக்கு—...

(முதலாம் பக்கத் தொடர்)

ராக அரசுப் படைகள் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளின்போது அரசுப் படைகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் புளொட், ரெலோ ஆகிய இயக்கங்களே இத்தகைய முகாம்களை வைத்திருக்கின்றன.

—இவ்வாறு மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

அண்மையில் வவுனியாவில் இத்தகைய முகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தப்பி ஓடி, அருகில் உள்ள தேவாலயத்தில் மதகுருவிடம் சரணடைந்ததை அடுத்தே மன்னிப்புச் சபை இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. (உ-3-7-21)

## சமய சந்நிதியில்

நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி ஆலய ரதோற்சவம் இன்று சனிக்கிழமை பகல் 11 மணிக்கு இடம்பெறும். தீர்த்தோற்சவம் நாளை 6 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும். (இ-100)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விகன விநாயகர் சம்பந்தப் பிள்ளையார் ஆலய ரதோற்சவம் இன்று 5 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும்.

தீர்த்தோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். (இ-100)

★ ★ ★

கொக்குவில் இருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவ தேர்த்திருவிழா இனறு சனிக்கிழமை காலை 9.30 மணிக்கும், தீர்த்தோசவம் நாளை காலை 9. 30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ஐ-8-30)

★ ★ ★

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. நாளை காலை தீர்த்தத்திருவிழாவும், மாலை மௌனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரில் எழுந்தருளுவார். நாளை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

## உரையாடல் நிகழ்ச்சி

''மனிதத் தேவைகளும் அ[illegible]ங்கும்'' என்ற பொருளிலா[illegible] உரையாடல் நிகழ்ச்சி ஒன்[illegible] இன்று சனிக்கிழமை பிற்ப[illegible]கல் 3. 30 மணிக்கு திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குழந்தை ம[illegible] சண்முகலிங்க[illegible] [illegible] கலைக்கழக மாணவர்கள் இந்த [illegible] நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்.

## அதிரடி அரங்கு

அச்செழுப் பகுதியில் மெதடிஸ்த திருச்சபையால் நடத்தப்பட்டு வந்த பாலர் பகல் பராமரிப்பு நிலையம் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் காலவரையறை குறிப்பிடப்படாது மூடப்பட்டது குறித்து இப்பத்தியில் ஏற்கனவே பிரஸ்தாபித்திருந்தோம். அந்த விடயம் குறித்து மேலும் சில தகவல்கள் கிடைத்துள்ளன.

பராமரிப்பு நிலைய ஊழல், சீர்கேடுகள் குறித்து விசாரணை நடக்கவிருக்கையில் —

அவற்றைச் சுட்டிக் காட்டியதற்காக அயலில் உள்ள போதகரின் வீடு துவம்சம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. போதகரின் வீட்டு ஓடுகளைக் கழற்றி உள்ளே இறங்கியவர்கள் அவரது சொத்துக்களான உடுப்புகள், புத்தகங்கள், பெறுமதி வாய்ந்த ஆவணங்கள், பொருள்கள், தளபாடங்கள் போன்றவற்றைத் தீக்கிரையாக்கி உள்ளனர். பணம், நகைகள் முதலியன சூறையாடப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட சிலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊழல் சீர்கேடுகளை அம்பலப்படுத்தியதற்கு இதுவா தண்டனை? போதகரின் உயிருக்கு என்ன உத்தரவாதம்?- இப்படி மிஷன் உறுப்பினர்கள் கவலையுடன் கேட்கிறார்கள்.

★ ★ ★ ★ ★

சிறப்பாக நடைபெற்று முடிந்த நல்லூர்த் திருவிழாவில் ஒரே ஒரு குறை; இளசுகளின் எல்லை மீறிய அட்டகாசம் தான் அது.

அந்தத் தொற்றுநோய் இப்போது செல்வச் சந்நிதித் திருவிழாவிலும் தொடருவதாகத் தகவல்.

இந்தத் தொற்றுநோய்க்கு ''ஷொக் ட்ரீட்மென்ட்'' செய்வதே ஒரேவழி போலத் தெரிகின்றது. சரியான டாக்டர்கள்தான் கவனிக்க வேண்டும்.

ஒரு கிருமிக்கு பகிரங்கத் தண்டனை கொடுத்தால் கிருமிக்கூட்டமே ஓடி ஒளித்துவிடும் என்கின்றார் விடயமறிந்த ஒருவர்.

★ ★ ★ ★ ★

யாழ். விழிப்புலனற்றோர் சங்க வளர்ச்சிக்காக நல்லூர் உற்சவ காலத்தில் அதிர்ஷ்டலாபச் சீட்டுகள் விற்பனைக்கு வந்தன. திருவிழாக் கூட்டத்தில் அவற்றை விற்றுத் தருவதாகக் கூறிப்பெற்றுக் கொண்டு 'கம்பி நீட்ட' முயன்ற சில சிறுவர்கள் சாரணரால் பிடிக்கப்பட்டது பற்றிய செய்தி பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

சீட்டிழுப்பின் பின்னரும் மற்றொரு ஏமாற்று முயற்சி இடம்பெற்றிருக்கிறது. நல்லூர் சுற்றாடலில் வீடியோ கடை ஒன்றில் பணிபுரியும் இளைஞர் ஒருவர் முதல் பரிசுக்குரிய சீட்டை ஒப்படைத்து பரிசில் பெற்றுச் சென்று விட்டார். அதன் பின்னர் மற்றொருவர் அதே இலக்கச் சீட்டுடன் முதற்பரிசு வாங்குவதற்கு வந்து நின்றார். அப்போது தான் முதலில் வந்தவர் சீட்டின் இலக்கத்தை மாற்றி பரிசைப் பெற்றுச்சென்ற விடயம் அம்பலத்துக்கு வந்தது. எனினும் சங்க நிர்வாகிகள் ஒருவாறு ஆளைத் துளாவிப் பிடித்து பரிசைத் திரும்பப் பெற்று உரியவருக்கு வழங்கிவிட்டதாகத் தெரிகின்றது.

கண்பார்வை உள்ளவர்களிடையே ஏமாற்றிப் பழகிய எமக்கு விழிப்புலன் இல்லாதவர்கள் ஒரு பொருட்டா என்று நினைத்தவர்களுக்கு தக்க பாடம் புகட்டப்பட்டிருக்கிறது.

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணத்தில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த டிசம்பர் மாதம் ஆங்கில மொழி மூலமான கணக்கியல் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றிய ஆறு மாணவர்களை பரீட்சை தொடர்பான மேல் விசாரணைக்கு கொழும்புக்கு வருமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சின் உயா தொழில்நுட்ப பிரிவு அழைத்திருப்பதாகத் தெரிகின்றது.

பிரச்சினை பெரியதாக ஒன்றுமில்லை. ஆறு மாணவர்களினதும் விடைத்தாள்களும் ''ஈ அடிச்சான் கொப்பி'' மாதிரி ஒன்றாக இருப்பதுதான் காரணமாம். ஒறிஜினலாக எழுதியவரும் 'மாட்டு'! பார்த்து எழுதிய பிரகிருதிகளும் 'மாட்டு'!! —போல தெரிகிறது.

★ ★ ★ ★ ★

முகமாலை வாசியான மாணவன் ஒருவன் வேதனையோடு எழுதிய மடலில் குறிபபிடப்பட்டுள்ள விவரம் இது:-

முகமாலை, இந்திராபுரம், வேம்பொடுகேணிப் பகுதியில் உள்ள காட்டு மரங்கள் — ஏக்கர் கணக்கில் — சீருடையினரால் புல்டோசர்கள் கொண்டு அழிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை நிறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக இல்லை. பாதுகாப்பு என்ற பெயரில் இயற்கைச் சூழலை அழிக்கும் இந்த வேதனையான செயலைத் தடுத்து நிறுத்துவது எங்ஙனம்?— என்று விசனத்துடன் கேட்கிறார் அந்த மாணவன்.

★ ★ ★ ★ ★

பல்கலைக்கழக 'ராகிங்' விடயம் பாடசாலைகளுக்கும் தலைகாட்டுவதாக ஒரு தகவல். அநுராதபுரத்தில் பாடசாலை ஒன்றில் மாணவர்கள், பகிடிவதையின் ஒரு கட்டமாக சிறுநீர் குடிக்கப் பலவந்தப்படுத்தப்பட்டது தெரிந்ததே.

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல மகளிர் கல்லூரியில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவ முதல்வர்களை பழைய மாணவமுதல்வர்கள் ஒருபிடிபிடித்ததாகத் தகவல். அவற்றை எழுதினால் நிறங்கள் தெரிய வரும். எனவே விட்டு விடடோம்.

என்றாலும் ஒரு தகவலைக் குறிப்பிடலாம். பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷ் 'ராகிங்' கொடுமையால் உயிர்நீத்த காலத்தில் கொதித்தெழுந்த மாணவிகளும் இப்போது பாடசாலை 'ராகிங்' பட்டியலில் அடங்கியுள்ளனர் என்ற வேதனையான தகவல்தான் அது!

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொனறா விமான சேவை

நாளை மறுதினம் திங்கட்கிழமை பலாலி — இரத்மலானை இடையே மேலதிக விமான சேவை ஒன்று நடைபெறவிருப்பதால் அதில் பயணம் செய்ய விரும்புவோர் இன்றும் நாளையும் எமது காரியாலயத்தில் டிக்கெட் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். இதற்காக எமது பணிமனை இன்றும் நாளையும் திறந்திருக்கும்.

யாழ். முகவர்:

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2134, 2024, 2025

(சி/4777)


# அன்னை நினைவை ஒட்டி யாழ். ஆயரின் செய்தி

தன்னுடைய அன்புப் பணிகளினாலும், ஆன்மீகப் பற்றுறுதி, சேவை, தியாகம், அர்ப்பணிப்பு ஆகியவை மிகுந்த வாழ்வினாலும் இறைவன் தனக்களித்த மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக்கியவர் அன்னை தெரேஸா. அவரின் நினைவுகள் இன்னும் மங்கா ஒளியாகப் பல இதயங்களில் ஒளி வீசுகிறது.

அன்னையின் அமரத்துவத்தின் முதலாம் ஆண்டு நினைவை ஒட்டி யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் விடுத்துள்ள செய்தி ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அன்னையின் தூரநோக்குப் பார்வைக்கு அவரின் அன்புப் பணிச் சபை அகில உலகில் மிளிர்வதே சான்றாகும். யாழ். மக்களின் துன்பத்தில் பங்கேற்க யாழ். மக்கள் சார்பில் நாம் அழைத்தபோது அவர் அளித்த வாக்குறுதி, அவரது அன்புப் பணிச்சபை சகோதரிகளால் ஓர் ஆண்டு நினைவுக்குள் நிறைவேற்ற முனைவதாக அமைகிறது. இது எம் மக்களின் துயர் தீர்க்க மேற்கொள்ளும் தூய பணியின் செயற்பாடே. இது எமக்குக் கிடைத்த நற்பேறாகும் — என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(உ)


யாழ்ப்பாண மருத்துவ சங்க

ஆதரவில்

யாழ்ப்பாண மருத்துவ சங்க

**நூலக நிதிக்காக**

யாழ். மருத்துவ பீட மாணவர்கள்

அளிக்கும்

முற்றிலும் புதிய பாணியிலான

## "இன்னிசை அருவி"

காலம்: [ 05 09-98 ] மாலை 2.00 — 5.00 மணி (புதிய நேரம்)

இடம்: கைலாசபதி கலையரங்கு (யாழ். பல்கலைக்கழகம்)

முக்கிய குறிப்பு:

★ ஒரு நுழைவுச்சீட்டுக்கு ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்.

★ இசை அரங்கின் நுழைவாயில்கள் 1.55 மணிக்கு (புதிய நேரம்) மூடப்படும்.

★ ரிக்கற்றுகளில் உள்ள திகதிகளின் படியே அனுமதிக்கப்படுவர்.

காலம் 05-09-98 : 5ஆம் திகதி ரிக்கற் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

(58906)


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 21 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (06-09-98) முற்பகல் 9-00 மணி தொடக்கம் 10-45 மணி(பழைய நேரம்) வரையுள்ள சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**சிறிதரன்**
(சிறி அமலா நகைமாடம்)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**மைதிலி**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து திருமணவிழாவில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்து, விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி செ. வீரசிங்கம், 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி நா. ஸ்ரீரங்கநாதன், 14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி. பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.

♠ இரு வீட்டார் அழைப்பு ♠

(சி/4776)


# ★ புதுக்கடைத் திறப்பு விழா ★



## ★ V. S. B. GROUP ★

**(சில்லறை மொத்த வியாபாரிகள்)**

வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் இன்று (05 09-1998) சனிக்கிழமை பகல் 10.50 முதல் 12. 50 மணி வரையுள்ள விருச்சிக லக்கின சுபவேளையில் மேற்படி நிறுவனம்

**99, 105, மின்சார நிலைய வீதியில்**

உயர்திரு. சி. வி. கந்தையா சிவஞானம் அவர்களால்

ஆரம்பித்து வைக்கப்படும் என்பதனைத் தெரியத் தருவதோடு அத்தருணம் எமது அன்பு வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

V. S. B. GROUP
275, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

நன்றி

பங்காளர்கள்.



# ★ புதுக்கடைத் திறப்பு விழா ★

**மென்டிஸ் அன் கொம்பனியினரின் மதுபான தயாரிப்புகளின்**

யாழ். குடாநாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள்:

## NEW PARADISE

## புதிய சொர்க்கம்

173. பலாலி வீதி. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் இன்று (05 – 09 – 1998) சனிக்கிழமை பகல் 10. 50 முதல் 12. 50 வரையுள்ள விருச்சிக லக்கின சுபவேளையில் உத்தரவுபெற்ற **மதுபான மொத்த விற்பனை நிலையம்** ஒன்று எம்மால் திறக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றோம்.

அத்தருணம் இனிய வாடிக்கையாளர்களும், நண்பர்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

உத்தரவு பெற்ற மதுபான விற்பனையாளர்களுக்கு மட்டும் விற்பனை மேற்கொள்ளப்படும்.

(சி/ 4748)

நன்றி

நிர்வாகிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

யாழ்ப்பாணம்

சஞ்சீவி
சஞ்சிகை

05 – 09 – 1998 சஞ்சீவி

றெனி மூக்குக் கண்ணாடி அகம்



உங்கள் கண்களைச் சரியாகப் பரிசோதித்து கண்ணாடிகளை உடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (பிரதேச செயலகம் முன்பாக) சாவகச்சேரி.

C/4733

## கருத்துக் கலசம்

கழுகா

### ஆலயங்களில்....

மக்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கு வழிகாட்டும் நெறிகளே சமயங்கள். ஆன்மீகத்தை மட்டும் அவை போதிக்கவில்லை. உலக வாழ்க்கைக்கான வரன்முறைகளையும், ஒழுக்கப் பண்புகளையும் அவை உள்ளடக்கிஉள்ளன. உலகியல் வாழ்க்கையைச் சீராகவும், செவ்வனேயும் வாழாது ஆன்மீக ஈடேற்றம் தேடுவது பயனற்றது.

ஆன்மநேயம் பிறப்பதற்கு முன்னர் மனிதநேயம் மக்கள் மனதில் நிரம்ப வேண்டும். மக்களை இறைவனாகக் கண்டு, அவர்களுக்குச் செய்யும் சேவையை ஆண்டவனுக்குச் செய்யும் அர்ச்சனையாகக் கொள்வதே ஆன்ம ஈடேற்றத்துக்கான அரிச்சுவடு.

ஆகையால் வாழ்க்கையில் நலிந்து போயுள்ள, வசதி குறைந்த, வாய்ப்புகளை இழந்த, மக்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பக்குவம், அதற்கான செயற்பாடுகள் இல்லாதவர்கள் ஆண்டவனை அடைய நினைப்பது அபத்தம்.

அதே போன்று ஆலயத்துக்குக் கிடைக்கும் வருவாயை அறப்பணிகளுக்கு அள்ளிக் கொடுக்கத் தயங்கும் ஆலயபரிபாலகர்களை ஆண்டவன் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்.

ஆலயங்கள் இப்போது பல வகைகளிலும் வர்த்தக மயப்படுத்தப்பட்டு வருவது கண்டிக்கப்பட வேண்டியதாகும். ஆலயங்களைப் பராமரிக்கவும் நியமப்படி பூசை விழாக்களை நடத்தவும் பணம் தேவை. அடியார்கள் அதற்கு உதவ வேண்டும்.

ஆனால் அடியார்கள், ஆன்ம நேயர்கள் இறைவன் பெயரால் வழங்கும் பணம் ஆடம்பரத்துக்குச் செலவழியக்கூடாது; தனிப்பட்டவர்களின் பணப் பெட்டிகளுக்குப் போய்ச் சேரக் கூடாது.

அருள் சுரக்கும் தெய்வங்களுக்கு அடியவர்கள் காணிக்கையாகச் செலுத்தும் பணத்தை பங்கு போடுவதற்காகப் போலிகள் பலரும் முண்டியடிக்கும் சாபக்கேடு எமது சமூகத்தில் தொற்றி வருகிறது.

குறிப்பாக வெளிநாடுகளில் உள்ளவர்கள் தமது நேர்த்திகளையும், வேண்டுதல்களையும் நிறைவேற்றவும், ஆலயப் பணிகளுக்கெனவும் அனுப்பும் பணம் தெய்வ ஸ்தலங்களில் நிர்வாகப் போட்டியை உண்டாக்குகிறது.

ஆலயத்துக்குச் சேரும் நிதி, ஏழைகள், வசதி குறைந்தவர்களின் வயிற்றுப் பசி தீர்க்கவும், கல்வி அறிவைப் பெருக்கவும் அவர்களைப் பள்ளத்திலிருந்து சமூக மட்டத்துக்கு உயர்த்தவும் உதவ வேண்டும். வரவுக்கேற்ப அறப்பணிச் செலவுகள் பருமனாகவும், குறுணியாகவும் வேறுபடலாம்; பரவாயில்லை. அது பரிபாலகர், தர்மகர்த்தா என்ற தனிப்பட்டவர்களின் பெட்டகங்களை நிரப்பவும் கூடாது; ஆலயத்தில் ஆடம்பரம் காட்டி வீண் செலவு செய்யவும் கூடாது.

ஆலய பரிபாலகர், தர்மகர்த்தாக்கள் இதனை ஒரு விதியாக, நெறியாகக் கருதிச் செயற்படுவார்களாக!

# சேவைக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய அன்னை

அன்னை—தாய்— மாதா. அன்னையை நாம் ஆண்டவனின் மறுவடிவம் என்று சொல்கின்றோம். பூமியைப் படைத்த ஆண்டவன், அதில் மனிதர்களைப் படைத்தான். அந்த மனிதர்களை அன்போடு, பண்போடு பாசத்தோடு வழிநடத்திச் செல்வதற்காக அன்னையைப் படைத்தான்.

அன்பு, பண்பு, பாசம் ஆகியவற்றின் இலக்கணம் அன்னை.

பெண்களைப் பொறுமையின் சின்னம் என்கிறோம். அதனால்தான் அகழ்வாரைத் தாங்கும் நிலமகளை — துன்புறுத்துவோரையும் துன்பங்களையும் பொறுமையுடன் ஏற்கும் பூமாதேவியை —பூமித்தாய் என்கிறோம். அவள் சிரிப்பதற்கு நீர் வழங்கும் வானத்தையும் வான மகள் என்கிறோம். உயிர் வாழத் தேவையான நீரைக்கூட தாய் என்றுதான் சொல்கிறோம்.

ஆகவே என்றும் எதிலும் தாய்தான் உலகத்தின் உயிர் நாடி.

இந்த அன்னையர்க்கு எல்லாம் எடுத்துக்காட்டாய்— தாய்மைக்கு இலக்கணமாய் —பல்லாயிரக் கணக்கான குழந்தைகளின் ஞானத்தாயாகத் திகழ்ந்தவர் அன்னை தெரேசா.

சாதி வெறியாலும், மத வெறியாலும் தம்மைத் தாமே அடித்துக்கொண்டு மாண்டுபோய்க் கொண்டிருக்கும் இந்தப் பூமியில் மதம், இனம், மொழி என்ற வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் ஒரு கண்ணில் நோக்கி அன்புகாட்டி அரவணைத்தவர் அன்னை தெரேசா.

1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி யூகோஸ்லேவியாவில் அல்போனியப் பெற்றோருக்கு மகளாக 'அக்னேஸ்கொன்வா பெஜாகியூ' என்ற பெயருடன் இவர் அவதரித்தபோது பிற்காலத்தில் இவர் உலகம் போற்றும் அன்னையாகப் பரிணமிப்பார் என்பதனை யாரும் எண்ணிப் பார்க்கவில்லை.

ஒவ்வொரு குழந்தையும் தந்தையின் மார்பில் துள்ளி விளையாடும் ஐந்து வயதில் —மழலைப் பருவத்தில்தன் தந்தையை இழந்து துயரில் துடித்த இளங் குழந்தை அக்னேஸ் தன் துயர் போக்க தியானத்திலும், இறை வழிபாட்டிலும் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்தாள்.

பத்து வயதிலே பாடசாலைக்குச் செல்லும் போது அங்கிருந்த ஏழை மாணவர்களுக்கு தான் கொண்டு சென்ற உணவில் ஒரு பங்கைக் கொடுத்து அவர்கள் உண்பதைக் கண்டு தன் மனம் மகிழ்ந்தாள்.

படிப்பதற்கு செலுத்த முடியாமல் தவித்த மாணவர்களுக்கு தான் கட்ட வேண்டிய கட்டணத்தை அவர்களுக்கு கொடுத்து வீட்டில் அதற்காக தண்டனையும் பெற்றுக் கொள்வாள்.

18 வயதிலே பருவ மங்கையாக மாறியபோது, சிலிர்சிங்காரித்து சிரித்து மகிழ்ந்த பெண்கள் மத்தியிலே, தனது சிற்றின்ப போகங்களை எல்லாம் விலக்கி விட்டு இறை பணியிலும், தொண்டுகளிலும் தனது முழுக்கவனத்தையும் செலுத்த ஆரம்பித்தாள்.

இந்தப் பருவத்திலேதான் தனது குடும்ப பந்தங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சமூகசேவை என்னும் பெரும்பணியை நோக்கி தனது பயணத்தைத்தொடங்கினார் அவர்.

## இன்று அன்னை தெரேஸாவின் முதலாம் ஆண்டு நினைவு நாள்

தனது 19 ஆவது வயதில் கல்கத்தாவுக்கு வந்த அன்னை அங்கு புனிதமேரி பள்ளியை நிறுவினார். அங்கு ஆதரவற்ற குழந்தைகளுக்கும், வசதியற்ற குழந்தைகளுக்கும் கல்வி போதிப்பதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தொடர்ந்து 17 ஆண்டுகள் அங்கு ஆசிரியராகக் கடமையாற்றினார்.



அந்தக் காலப்பகுதியிலேயே தன்னைக் கன்னியாஸ்திரியாக மாற்றிக்கொள்ளத் தீர்மானித்து தனது 21ஆவது வயதில் கன்னியாஸ்திரியாக சத்தியப் பிரமாணம்எடுத்துக் கொண்டார்.

ஆசிரியராக கடமையாற்றிய அந்தப் 17 ஆண்டு காலத்திலே அவர் செய்த இறை பணிகளும் சமூகப் பணிகளும் மெல்லமெல்ல சமூகத்தின் பார்வையை அவர் பக்கம் திருப்ப ஆரம்பித்தது.

அன்னையின் பெயர் பலரும் அறிய ஆரம்பித்து. அவ [illegible] பாராட்டியபோது அன்னையைப் பெற்ற — தாயும் — அன்னையின் பெருமையை உணர்ந்து அகமகிழ்ந்து போனார். 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்' என்ற குறளில் பொதிந்துள்ள உணர்வை அந்தத்தாய் அப்போது உணர்ந்து கொண்டாள்.

கல்கத்தாவில்சேவைசெய்த அன்னைக்கு 1948 ஆம் ஆண்டு இந்திய அரசு தனது நாட்டுப் பிரஜா உரிமையைக் கொடுத்து தனது நாட்டுக்குப் பெருமை சேர்த்துக் கொண்டது.

அன்னையின் பணிகள் மெல்ல மெல்ல உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தபோது அன்னையின் பணிகளைக் கௌரவித்து பாராட்டுக்களும், பரிசுகளும் அவரைத் தேடி வந்தன. சாதாரண மனிதர்கள்தான் பெயரையும் புகழையும் கண்டு பெருமை அடைவார்கள். ஆனால் அன்னை இந்தப் பட்டங்களையும், பரிசுகளையும் அதை வழங்குபவர்கள் திருப்தியடைவதற்காக மட்டுமே பெற்றுக் கொண்டார்.

1979 ஆம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு அன்னைக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் நோபல் பரிசு பெருமை பெற்றது.

எத்தனையோ கணிப்புகளின் பின்னரே தனது நாட்டின் கௌரவ பிரஜை என்ற அந்தஸ்தை வழங்குகின்ற அமெரிக்கா கூட அந்த கௌரவத்தை 1996 ஆம் ஆண்டு அன்னைக்கு வழங்கியது என்றால் அன்னையின் சேவையின் திறத்தை அனைவரும் உணர்ந்துகொள்ள முடியும்.

அன்னை செய்த பணிகள் ஆயிரம் ஆயிரம். ஐந்து லட்சம் ஏழைக் குடும்பங்கள் அன்னையின்தயவில்வாழ்ந்து வந்தன. இன்று அன்னையால் நிறுவப்பட்ட சபைகளால் இவர்கள் வாழ்வு நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகத்தினரால் ஒதுக்கப்பட்ட ஒரு லட்சம் வரையிலான தொழுநோயாளர்கள் அன்னையின் அரவணைப்பில் ஆறுதலடைந்தார்கள். அநாதைகள் ஆக்கப்பட்ட சிறுவர்கள் பலர் அன்னையின் பாசத்தில் பசிமறந்து வாழ்ந்தார்கள். இவர்களெல்லாம் இன்று அன்னையின் வழிவந்த அருட் சகோதரிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

பூமியில் அன்னையின் பணிகள் தீவிரமடைய ஆரம்பித்தபோது அன்னையை சிறிய சிறிய நோய்கள் ஆட்கொள்ள ஆரம்பித்தன. நோய்கள் வளர்ந்து அன்னையை முழுமையாக அரிப்பணித்தபோது அன்னை படுக்கையில் வீழ்வார். அப்போதெல்லாம் அன்னைக்காக உலகத்தவர் மேற்கொள்ளும் இறை வேண்டுதல்கள் அவரைப் படுக்கையிலிருந்து துள்ளியெழ வைத்துவிடும்.

ஓராண்டுக்கு முன் இதே நாள் இரவு 9.30 மணியளவில் அந்த சோகம் நிகழ்ந்தது. நோயுற்ற அன்னை மீண்டும் எழுந்து நடமாட வேண்டுமென அனைவரும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்க, காலன் அன்னையை தன்னோடு அழைத்துச் செல்ல ஆயத்தமாகி விட்டான். அனைவரும் தவித்து நின்ற அந்த நேரத்தில் அன்னை ஆண்டவனுடன் சங்கமமானார்.

உலகமே சோகத்தில் தவித்தது. அஞ்சலி மடல்களும், மலர் மாலைகளும் வந்து குவிந்த வண்ணமிருந்தன. உலகத் தலைவர் எல்லாம் நேரில் சென்று அன்னையின் திருவடியில் தலைகுனிந்து அஞ்சலி செய்து நின்றனர்.

உலகிலுள்ள சிறுவர்களும், ஏழைகளும், ஆதரவற்றோரும் தம்மைப் பெற்ற தாயை இழந்தது போல துடிதுடித்து இரத்தக் கண்ணீர் வடித்தார்கள்.

- சுதா -

அன்னையின் இழப்பால் உலகம் அதிர்ச்சிக்குள்ளான போதிலும் அன்னையின் பணிகள் முடங்கிப் போகவில்லை. அன்னை வளர்த்து விட்ட சமூக அமைப்புக்கள் இன்றும் அன்னையின் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றன. அன்னையின் இடத்தில் இருந்து அருட்சகோதரி நிர்மலா இந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்கிறார். எப்படியும் வாழலாம் என்று சொல்லும் உலகத்தவர் மத்தியிலே இப்படித்தான் வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டியவள் அன்னை. அவளின் வழி நடப்பது அனைவருக்கும் பெருமை.

அன்னையின் இழப்புக்குப் பின்னரும் அன்னையின் பெயரில் 'அன்னை தெரேஸாவின் அன்புப் பணியாளர் சபை' நாடு முழுவதிலும் தொண்டாற்றி வருகின்றது. அந்தச் சபை இலங்கையிலும் தனது பணிகளை செய்ய முன்வந்துள்ளது.

இலங்கையிலே போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றும் பணி இழுத்தடிப்பு

# செம்மணிக்கும் அந்தக்கதி உண்டாகுமா?

சுப கருமங்கள் நடத்துவதற்குச் சிறப்பான மாதங்களில் ஆவணியும் ஒன்று. ஆலய விழாக்கள், திருமணங்கள், வீடு குடிபுகுதல், வர்த்தக நிலையங்கள், தொழில் நிலையங்களை ஆரம்பித்தல் ஆகியன இம்மாதத்தில் அதிக எண்ணிக்கையில் நடைபெறுவது வழக்கம்.

கடந்த இரண்டு வருடங்களின் பின்னர் ஆவணியின் முற்பகுதியும், கலகலப்பும் காணப்படுகின்றன. இன்னும் பத்து நாட்களில் இந்த மாதம் கழிந்து போய்விடும் என்பதால் மங்களகரமான நிகழ்வுகள் அடுத்தடுத்து தொடர்ந்தும் பரவலாக நடைபெறும் என எதிர்பார்க்கலாம்.

மூன்று வருடங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் மத்தியில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிச் சபைகள் பலவும் இந்த மங்களகரமான ஆவணியில் இயங்கத் தொடங்கியுள்ளன. அவை மெல்ல மெல்ல இயங்க ஆரம்பித்துள்ளன என்பதே பொருத்தம்.

தேர்தல் மூலம் பிரதேச சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் சுமார் 80 சதவீதமானோர் பதவியேற்றுள்ளனர். கூட்டங்களுக்கும் சமுகமளிக்கின்றனர். மிகுதியுள்ள 20 சதவீதமான உறுப்பினர்கள் அனேகமாக ஆவணி மாதம் முடிவதற்குள்— செப்ரெம்பர் நடுப்பகுதிக்குள் — பதவியேற்று விடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டில் ஒரு மாநகர சபையும், மூன்று நகரசபைகளும், பதின்மூன்று பிரதேசசபைகளும் உள்ளன. மொத்தமுள்ள பதின்மூன்று பிரதேச சபைகளில் பத்தில் ஈ. பி. டி. பி. ஆட்சியைக் கைப்பற்றியது. தேர்தல் நடைபெற்று எட்டு மாதங்கள் கடந்து விட்டன. இப்போது தான் ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் முழு எண்ணிக்கையில் பதவியேற்றுள்ளனர்.

மொத்தம் உள்ள பதினேழு சபைகளில் பல சபைகள் இரண்டு, மூன்று கூட்டங்களை நடத்தியுள்ளன. சில சபைகள் மட்டும் இன்னும் கூட்டம் எதனையும் நடத்தவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபைக் கூட்டங்கள் இப்போது கிரமமாக நடைபெறுகின்றன. மாதாந்தக் கூட்டம் அடுத்த வாரத்தில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கென மாநகர சபை முதல்வரும், உறுப்பினர்கள் சிலரும் கூட்டத்துக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்து சேர்வர் என்று அறியப்படுகிறது.

கூட்டங்களை நிறுத்தி வைத்திருந்த வலி. வடக்கு பிரதேச சபையும் இப்போது மீண்டும் கூடுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் இயங்குவதற்கு போதிய நிதிவளம் இல்லாமல் பெரிதும் திண்டாடின. மக்களுக்குரிய சேவைகளைச் செய்வதற்கு இயலாது கஷ்டப்பட்டன. பல தடவைகள் பல தரப்பாலும் கொடுக்கப்பட்ட நெருக்குதலைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபை ஒவ்வொன்றுக்கும் 30 லட்சம் ரூபா ஒதுக்குவதற்கு அரசு இணங்கியிருந்தது.

அந்த நிதியில் ஒரு பகுதி இப்போது கைக்கு வந்துசேர்ந்துள்ளது. அதனைக் கொண்டு முக்கிய சேவைகளைச் செய்வதற்கு உள்ளூராட்சி சபைகள் முனைந்துள்ளன. சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப் பணத்தில் தாலி என்ற நிலையில் உள்ளூராட்சி சேவை நடக்கும்.

ஈ. பி. டி. பி. கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச சபைகளில் முதியோர் பராமரிப்பு, தென்னைச் செய்கை, சேதமடைந்த கட்டடங்களைப் புனரமைப்பது போன்ற இடங்களுக்கு முன்னுரிமை தரப்படும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

நிதி சிறிது வந்து சேர்ந்தால் என்ன, அதுவும் பணமே. அது மிகவும் அவதானமாகவும், பயனுள்ளதாகவும் செலவு செய்யப்படவேண்டும். சுரண்டல், மோசடிகளுக்கு இடம்கொடுக்கலாகாது.

இதனை மனதில் இருத்தி உள்ளூராட்சி பிரதி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி, நகரசபைகள், பிரதேசசபைகளின் தலைவர்கள், செயலாளர்களுக்கு நிதி தொடர்பான அகக் கட்டுப்பாடுகளை விளக்கிச் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்குக் கிடைக்கும் நிதியைச் செலவிடுவதில் கைக்கொள்ளவேண்டிய நடைமுறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு, களஞ்சியக் கட்டுப்பாடு, பொதுக்கட்டுப்பாடு, வரவு —செலவுத் திட்டக் கட்டுப்பாடு என்பனவற்றை அந்தச் சுற்றறிக்கை விளக்கமாகவும் விரிவாகவும் சொல்கிறது.

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் 90 சதவீதமானோர் இத்துறையில் அனுபவம் இல்லாதவர்கள். ஆகையால் இத்தகைய அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் அவசியம். வெள்ளம் வருமுன்னர் அணை கட்டுவது நல்லதே.

★ ★ ★

செம்மணி புதைகுழி விவகாரம் இன்னும் புதையுண்ட நிலையிலேயே உள்ளது. சென்ற வாரம் கொழும்பிலிருந்து நிபுணர்கள், அதிகாரிகள் வருவார்களென எதிர்பார்க்கப்பட்டது. எவரும் வரவில்லை. இது சம்பந்தமான செயற்பாடு எதுவும் மேல் எழும்புவதாக இல்லை. தமிழர்கள் சம்பந்தப்பட்ட ஏனைய விடயங்களைப் போலவே இதுவும் தாழ்ந்து போயுள்ளது; இழுத்தடிக்கப்படுகிறது.

## அரைப்பணத்து தாலி கிடைத்த நிலையில் உள்ளூராட்சிச் சபைகள்

குடாநாட்டில் இன்னும் இரண்டொரு கிழமைகளில் மழை தொடங்கப்போகிறது. மழை தொடங்கிய பின்னர் புதைகுழிகளைத் தோண்டும் வேலைகளை ஆரம்பிப்பது சிரமமாக இருக்கும். ஆகையால் இந்த விடயத்தில் அவசர நடவடிக்கை கட்டாயமானதாகும். ஆனால் அரசிடம் அந்த அவசரம் தெரியவில்லை.

தமது பிள்ளைகளின் கதி என்ன என்று கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக மனம் ஒடிந்து போயிருக்கும், குடாநாட்டைச் சேர்ந்த — காணாமற்போன—இளைஞர், யுவதிகளின் பெற்றோர்களின் நிலையை மனித நேயத்துடன் நோக்கும், உணரும் தன்மையையும் அரச தரப்பிடம் சிறிதும் காணமுடியவில்லை.

இந்த விடயத்தில் தேசிய மனித உரிமை ஆணைக்குழு துரிதமாகச் செயற்படும் என்ற நம்பிக்கையும் மெல்ல மெல்லக்குறைந்து வருகிறது.

ஏனைய விவகாரங்களைப் போலவே அரசு அசமந்தமாக இருக்கும் என்ற கருத்தே இப்போது குடாநாட்டில் மேலோங்கி நிற்கிறது.

### மக்கள் எழுச்சிப் போராட்டம்

இந்த நிலையை உடைப்பதற்கு மக்கள் எழுச்சிப் போராட்டங்களே ஒரு வழி என்று விமர்சிப்போரும் உள்ளனர்.

குடாநாட்டு மக்கள் இவ்வாறு மனம் குழம்பிப்போயுள்ள வேளையில், செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகிடைக்கும் என்ற செய்தி சற்று ஆறுதல் தருவதாக அமைந்துள்ளது.

புதைகுழிகளைத் தோண்டுவதில் ஐ. நா. மனித உரிமைகள் பிரிவும் பங்கு கொள்ளும் என்பதால் இவ்விவகாரத்தில் தில்லு முல்லுகள் இடம் பெறாது; உண்மை வெளிப்படும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் குவிந்துள்ளது.

அதே புறம்—

இலங்கை அரசு, குறிப்பாக பாதுகாப்பு அமைச்சு புதைகுழிகளைத் தோண்டுவதை வேண்டுமென்றே இழுத்தடிக்கும் என்று குடாநாட்டு மக்கள் அஞ்சுகின்றார்கள்.

குடாநாட்டில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகளை அகற்றும்பணியை அரசாங்கம்—பாதுகாப்பு அமைச்சு—தாமதித்து வருவது இத்தகைய அச்சத்தை இயல்பாகவே தோற்றுவித்துள்ளது.

★ ★ ★

குடாநாட்டில் புதைந்துள்ள பல்லாயிரக்கணக்கான கண்ணிவெடிகள், மிதிவெடிகளை அகற்றும் பணியைப் பாதுகாப்புப் படையினரால் செய்யமுடியாது. அந்த வேலையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இல்லை என்ற நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியைப் பெற அரசு முடிவு செய்தது.

அது சம்பந்தமாக ஐ. நா. சபையுடன் அரசு தொடர்பு கொண்டு கண்ணிவெடிகளை அகற்ற இணக்கம் கண்டது. ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் புனர்வாழ்வு, மீள் குடியேற்ற திட்டப் பிரிவு இப்பணியினை மேற்கொள்ளவும் ஏற்பாடாகியது.

ஆரம்ப மதிப்பீடு மற்றும் பூர்வாங்கப் பணிகளைச் செய்வதற்கு கண்ணிவெடிகளை அகற்றுவதில் மிகவும் கைதேர்ந்த ஐ. நா. நிபுணர் டெய்லர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து மாதங்கள் பலவாகி விட்டன.

கண்ணிவெடிகள் புதைந்திருப்பதாகக் கருதப்படும் இடங்களை இனங்காணும் வேலைகளை ஐ. நா. நிபுணர் முடித்து விட்டார். அவற்றின் அடிப்படையில் கண்ணிவெடிகளை அகற்றும் திட்டத்தையும் வகுத்துள்ளார். இப்பணியில் ஈடுபடுத்தக் கூடியவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டாயிற்று.

ஆனால் வேலைகளை ஆரம்பிக்க முடியவில்லை. கண்ணிவெடிகளை அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தேவையான வானொலித் தொடர்பு சாதனத்தைக் கொண்டு வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க மறுத்து வருகிறது.

### புண்ணுக்கு வலியா, மருந்துக்கு வலியா?

கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு வானொலித் தொடர்புக் கருவி அத்தியாவசியம் என்பதால் ஐ. நா. அதிகாரிகள் என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடினர். அவர்கள் இப்பணியைச் செய்வதில் இருந்து விலகிச் சென்று விடுவார்களோ என்ற கவலை குடாநாட்டு மக்களை வாட்டியது.

**உள்ளும் புறமும்**

**குறுமுனி**

குறிப்பிட்ட தொடர்பு சாதனங்களை விடுதலைப்புலிகள் பறித்துச் சென்றுவிடக்கூடும் என்பதனாலேயே அதனை வழங்க அனுமதிக்க முடியாது என்று பாதுகாப்பு அமைச்சு காரணம் தெரிவித்தது.

அதனைத் தொடர்ந்து, வானொலித் தொடர்பு சாதனத்தை பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பில் வைத்திருக்கலாம் என்றும் தாம் அதனைத் தேவைப்படும் நேரத்தில் பயன்படுத்தலாம் என்றும் ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர். எவ்வாறேனும் இப்பணியைச் செய்து குடாநாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற மனித நேயத்துடன் அவர்கள் இது விடயத்தில் செயற்படுகின்றனர்.

அவ்வாறிருந்தும் இது சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வருவதற்கு அரசாங்கம் (பாதுகாப்பு அமைச்சு) இழுத்தடித்தது.

ஐ. நா. வுக்கு உள்ள அக்கறை அரசுக்கு இல்லை 'புண்ணுக்கு வலியா? மருந்துக்கு வலியா?' தமிழர்கள், கண்ணிவெடிகளில் அகப்பட்டு அழியட்டும் என்ற எண்ணமே அரசிடம் மேலோங்கி இருப்பதாகச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

கடைசியாக, ஐ நா. அதிகாரிகள் கேட்டுக் கொண்டதன் பிரகாரம், வானொலித் தொடர்புக் கருவியை படையினரின் கண்காணிப்பில் வைத்துக் கொண்டு கண்ணிவெடி அகற்றும் பணிக்குப் பயன்படுத்த அனுமதி அளிக்க இணக்கம் காணப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

கண்ணிவெடியை அகற்றும் பணிக்குத் தேவையான கருவிகளை யாழ்ப்பாணம் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டு விட்டதாக அமைச்சரவைக்குப் பிந்திய வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதில் உண்மையில்லை என்று ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் இப்போது அறிவித்துள்ளது.

வானொலித் தொடர்புக் கருவி கிடைக்காததால் — இது விடயம் இழுத்தடிக்கப்படுவதால் — கண்ணிவெடிகள் அகற்றும் பணி மேலும் தாமதமாகும்.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அலுவலகம் வெளியிட்ட அறிக்கை நிலைமையை தெளிவாக்குகிறது.

அந்த அறிக்கையை இங்கே முழுமையாகத் தருகிறோம்:-

அண்மையில் வெளிவந்த அறிக்கையொன்றுக்கு முரணான வகையில் ஐ. நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கண்ணி அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்திற்காகத் தேவைப்பட்ட முன்னுரிமை பெற்ற வானொலி உபகரணத்திற்கான அனுமதி இலங்கை அரசு மற்றும் பாதுகாப்பு அமைச்சினால் மறுக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் இலங்கை அரசும் (பாதுகாப்பு அமைச்சும்) குறைந்ததர மாற்று உபகரணம் ஒன்றைப் பயன்படுத்தி கண்ணி அகற்றும் பணியினை மேற்கொள்ள முடியுமா என்பதனைப் பரிசீலனை செய்யச் சம்மதித்துள்ளன. அவ்வாறு முடியுமாயின் ஐ. நா. அ. நிகழ்ச்சித்திட்டம் செயற்றிட்டத்தைத் தொடரும்.

அதிர்ஷ்டவசமாக வேண்டப்பட்ட ஐ. நா. வின் தரமான உபகரணத்திற்கு அனுமதியளிக்காதிருக்க எடுக்கப்பட்ட இலங்கை அரசின் தீர்மானமானது கண்ணி அகற்றும் வேலைத்திட்டத்தினை 3 தொடக்கம் 6 மாதங்களுக்கு தாமதமாக்கியுள்ளது.

அத்தியாவசிய மீள்குடியேற்ற, புனரமைப்புச் செயற்றிட்டங்களைப் பாதிப்படையச் செய்வதும், குறிக்கப்படாத, அகற்றப்படாத கண்ணி நிலங்கள், வெடிக்காத ஆட்டிலறிகள் என்பவற்றினால் யாழ். மக்கள் அச்சுறுத்தப்படுவது தொடர்வதுமான இந்த நிலைமைக்காக ஐ. நா. வருந்துகின்றது.

குடாநாட்டு மக்களின் உயிர்களைக் காப்பாற்றும், அவர்கள் அங்கவீனர்களாகி முடங்காது பாதுகாக்கும் பணியே கண்ணிவெடிகள் அகற்றும் பணி. அந்தப் பெரிய விடயத்தில் அரசாங்கம் பெரும் பொய்யைச் சொல்லி இருக்கிறது. உத்தியோக பூர்வமான வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் இந்தப் பொய் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் பாருங்களேன்!

தமிழர் பாதுகாப்பு, உரிமைகள் என்று எல்லாப்பக்கங்களிலும் இவ்வாறு அந்தந்த நேரத்தில் வாயில் வந்ததைச் சொல்லி காலத்தைக் கடத்துவது, ஏமாற்ற நினைப்பது கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். அரசின் இந்தப்போக்கு தமிழ் மக்கள் அதன் மீது நம்பிக்கை கொள்ள உதவாது. இத்தகைய நடவடிக்கைகள் அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையே உள்ள வெளியை விரிவாக்குமே அன்றி, நெருக்கமாகக் கொண்டு வராது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்.

# துரியோதனனின் நற்குணம்

துரியோதனன் அரண்மனை:

அவனது அந்தப்புரத்திற்கு எதிரில் உள்ள ஒரு மண்டபம்.

அங்கு துரியோதனன் மனைவி பானுமதியும் கர்ணனும் அமர்ந்து சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். ஆட்டம் மிகவும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது.

அந்த சமயத்தில் துரியோதனன் திடீரென்று அங்கே வருகிறான்.

அவன் வருவது கர்ணனுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அவன் முதுகுக்குப் பின்பக்கமாக இருந்த திசையிலிருந்து துரியோதனன் வருகிறான்.

எதிரில் உட்கார்ந்திருந்த பானுமதி தன் கணவன் வருவதைப் பார்க்கிறாள். ஒரு மரியாதைக்காக எழுந்து கொள்ள முற்படுகிறாள். ஆனால் அதைப் பார்த்த கர்ணன், 'சொக்கட்டான் ஆட்டத்தில் தான் கர்ணனிடம் தோற்று விடுவோம் என்று பயந்து இவள் பாதி ஆட்டத்தில் எழுந்து போக நினைக்கிறாள்' என்று நினைக்கிறான்.

அந்த எண்ணத்தில் அவன் தன்னையறியாமல் அவள் இடையில் அணிந்திருந்த மேகலையைப் பிடித்து இழுத்து விடுகிறான்!

உடனே அந்த ஆபரணம் அறுந்து கீழே விழ, அதிலிருந்த முத்துக்களெல்லாம் தரையில் நாலா பக்கமும் சிதறி ஓடின.

அதன்பிறகுதான் தனக்குப் பின்னால் துரியோதனன் வந்திருக்கிறான் என்ற விஷயமே கர்ணனுக்குப் புரிகிறது.

கர்ணனும் பானுமதியும் திகைத்துப் போய் நிற்கிறார்கள்.

'கணவர் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டாரே!' என்ற பதற்றம் பானுமதிக்கு.

'மாற்றான் மனைவியைத் தொட்டு விட்டோமே!' என்ற பதற்றம் கர்ணனுக்கு.

ஆனால் துரியோதனன் இதைப் பற்றிக்கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளவில்லை. இது எதையும் அவன் கண்டு கொள்ளவே இல்லை.

மாறாக, அவன் இவர்கள் இரண்டு பேரையும் பார்த்து என்ன கேட்கிறான்?

''இந்த முத்துக்களை எடுக்கட்டுமா, கோர்க்கட்டுமா?'' என்று சிரித்துக் கொண்டே வினவுகிறான்.

இந்தக் கேள்வியால்தான் இப்போது ஒரு சந்தேகம்!

கர்ணன் துரியோதனனுக்கு நண்பன். அந்த நட்பு காரணமாக துரியோதனன் தரையில் சிதறிய முத்துக்களை மட்டும் பொறுக்கி எடுத்திருக்கலாம். அதற்குப் பிறகு அதைக் கோர்த்து ஆபரணமாக்கித் தருவதற்கு அரண்மனையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்; ஆதலால் இவன் ''எடுக்கட்டுமா?'' என்று மட்டும்கேட்டதோடு விட்டிருக்கலாம். ''கோர்க்கட்டுமா?'' என்று கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டானே! அது ஏன்?


அன்றைக்கு அரண்மனையில் இருந்த எல்லோரும் இதைப் பற்றியே யோசித்து குழம்பிக் கொண்டிருந்தார்களாம்.

அங்கே இருந்த அமைச்சருக்கும் இதற்கு விடை தெரியவில்லை! எல்லோரும் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த சமயத்தில்... நல்ல வேளையாக சகாதேவன் தற்செயலாக அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தான்.

அவன் சாஸ்திர ஞானத்தில் கரை கண்டவன்.

ஆதலால் எல்லோரும் சகாதேவனிடம் ஓடிச் சென்று தங்களைக் குழப்பிக் கொண்டிருந்த சந்தேகத்தைத் தெரிவித்தார்கள்.

சகாதேவன் சிரித்துக் கொண்டே பதில் சொல்லியிருக்கிறான். அவன் சொன்ன விளக்கம் இதுதான்:-



''ஒருவனுக்குப் பயம் அதிகமாக வந்துவிட்டால் அவன் கை, கால் நடுங்கும்! அது இயற்கை. அதுபோலவே எவன் ஒருவன் ஆத்திரப்படுகிறானோ அவனுக்கும் கை, கால் நடுங்கும் — உதறும்!

''இந்த இடத்தில் கர்ணனும் பானுமதியும் இந்த நிலைமையில் இருக்கிறார்கள். அதாவது பயம் காரணமாக அவர்களின் கை, கால் நடுங்கியது!

''துரியோதனனுக்கு இந்த இடத்தில் ஆத்திரம் காரணமாக கை, கால் நடுங்க வேண்டும்... ஆனால் அப்படி ஆகவில்லை. அவன் நிதானமாக இருக்கிறான். அமைதியாக இருக்கிறான். அதற்கு என்ன காரணம்? அவன் தன்னுடைய மனைவியையும் சந்தேகப்படவில்லை... தன்னுடைய நண்பனையும் சந்தேகப்படவில்லை! அதனால் ஆத்திரம் அடையவில்லை! கை காலும் உதறவில்லை! 'என் கை, கால் நடுங்கவில்லை... ஆதலால் என்னால் முத்துக்களை எடுக்கவும் முடியும் — கோர்க்கவும் முடியும்; நான் நிதானமாகத் தான் இருக்கிறேன்' என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காக துரியோதனன் 'கோர்க்கட்டுமா?' என்று கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டான்.''

— இதுதான் சகாதேவன் சொன்ன விளக்கம். அவசரப்பட்டு ஆத்திரப்படக் கூடாது, நிதானம் தவறக் கூடாது, அமைதியை இழக்கக் கூடாது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கெட்டவன் என்று நாம் பொதுவாக நினைக்கும் துரியோதனிடமும் இப்படி ஓர் உயர்ந்த குணம் இருந்திருக்கிறது பார்த்தீர்களா?

- தென்கச்சி சுவாமிநாதன் -

★

# முனிவரின் வைராக்கியம்

ஒருமரத்தடியில் ஒரு முனிவர் அமர்ந்திருந்தார்.

அவர் ஒரு ஊசியில் நூலைக் கோர்த்து தன் வேட்டியிலிருந்த ஒரு கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்தார்.

அவர் கைதான் அந்தக் கடமையை செய்துகொண்டிருந்தது. ஆனால் அவர் மனமோ கடவுளை நினைத்துக் கொண்டிருந்தது.

அப்போது அந்த சமயத்தில் பார்வதியும் பரமசிவனும் ஆகாய வீதியில் வந்துகொண்டிருந்தார்கள்.

மரத்தடியில் ஒளிப்பிழம்பாக அமர்ந்திருந்த முனிவரை ஜகன்மாதாவாகிய பார்வதி பார்த்தாள்.

அவள் பரமசிவனிடம், ''அங்கே மரத்தடியில் பார்த்தீர்களா?'' என்று கேட்டாள்.

''பார்த்தேன்!'' என்றார் அவர்.

''பிறகு என்ன? அவரைப் பார்த்த பிறகும் நாம் சும்மா போனால் எப்படி? வாருங்கள். அங்கே சென்று அவருக்கு ஏதாவது வரம்கொடுக்கலாம்'' என்றாள் அன்னை.

பரமசிவனின்முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

''அந்த முனிவரைப் பற்றி நீ லேசாக நினைத்து விடாதே! அவர் அந்த நிலைகளை எல்லாம் கடந்தவர். இப்போது நாம் அவரிடம் செல்வது வீண் வேலை; எனவே அவரிடம் போக வேண்டாம். வா! நாம் நம் வழியில் போவோம்!'' என்றார் சிவபெருமான்.

ஜகத்பிதா இவ்வாறு கூறினாலும் ஜகன்மாதா அவரை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்துச் சென்றாள்.

முனிவர் நிமிர்ந்து பார்த்தார்: ''அடடே! அம்மையும் அப்பனுமா! வாருங்கள்!'' என்று சொல்லி அன்புடன் வரவேற்றார்.


இருவருக்கும் குடிப்பதற்கு மோர் கொடுத்தார் முனிவர். அவ்வளவுதான்! அதைக் கொடுத்து விட்டு அவர் தன்பாட்டுக்கு முன்போலவே துணிக்கிழிசலைத் தைக்க ஆரம்பித்தார்.

பரமசிவனும் பார்வதியும் சிறிது நேரம் பொறுமையுடன் அவருக்காகக் காத்திருந்து பார்த்தார்கள். அவர்களை முனிவர் நிமிர்ந்து பார்க்கும் வழியைக் காணோம்! அவர்கள் இருப்பதை அவர் கண்டு கொள்ளவே இல்லை!!

''சரி, நாங்கள் புறப்படுகிறோம்!'' என்று அம்மையும் அப்பனும் குரல்கொடுத்தார்கள்.

அதற்கு, ''ரெம்ப சந்தோஷம். போய்வாருங்கள்! வணக்கம்'' என்றார் முனிவர்.

அப்படி அவர் சொல்லி விட்டு மீண்டும் துணியைத் தைக்க ஆரம்பித்தார்.



பார்வதி, பரமசிவனிடம் 'ஏதாவது கேளுங்கள்!' என்பதுபோல் சைகை செய்தாள்.

அவரும் அதைப் [illegible] கொண்டு முனிவரைப் பார்த்து, ''தவச்செல்வரே! நாங்கள் ஒருவருக்குத் தரிசனம்கொடுத்தால், அவருக்கு ஏதாவது வரம் கொடுத்து விட்டுப்போவதுதான் வழக்கம். ஆகவே உங்களுக்கும் ஏதாவது வரம்...!'' என்று சொல்லி இழுத்தார்.

முனிவர் லேசாக சிரித்தார். ''வரமா? உங்கள் தரிசனத்தை விடவா? அதெல்லாம் இந்தக் கட்டைக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள்!''—என்று சொல்லி விட்டு அவர் மறுபடியும் துணிகிழிசலைத் தைக்க ஆரம்பித்தார்.

இருந்தாலும் பார்வதியும் பரமசிவனும் அவரை விடுவதாக இல்லை.

ஏதாவது வரம் கொடுக்காமல் நாங்கள் இங்கிருந்து போகமாட்டோம்!'' என்று உறுதியாகச் சொல்லிவிட் [illegible] முனிவர் [illegible] அப்படி கட்டாயமாக ஏதாவது வரம் கொடுத்துவிட்டுத் தான் போகவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் ஒன்று செய்யுங்கள்; இந்த ஊசிக்குப் பின்னாலேயே இந்த நூல் போவதற்கு வரம் கொடுங்கள்!'' என்றார்.

இதைக்கேட்டதும் பார்வதி பரமேஸ்வரர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆதலால் அவர்கள், ''ஏற்கனவே தான் இந்த ஊசிக்குப் பின்னால் இந்த நூல்போய்க் கொண்டிருக்கிறதே! இதற்கு நாங்கள் ஏன்வரம் கொடுக்க வேண்டும்!'' என்று வினவினார்கள்.

''அதையேதான் நானும் கேட்கிறேன், நான் ஒழுங்கு தவறாமல் நடந்துகொண்டு வந்தால், வரவேண்டிய பலன் நியதிப்படிதானாகவே பின்னால் வருமே! நடுவில் நீங்கள் ஏன் எனக்கு வரம் கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டார் முனிவர்.

இதைக் கேட்டதும் பரமசிவனும் பார்வதியும் சிரித்துக் கொண்டே தங்கள் வழியே சென்றார்கள்.

இந்தக் கதையில் வரும் முனிவர் வேண்டுதல், வேண்டாமை என்ற நிலைகளைக் கடந்தவர். எதையும் எவரிடமிருந்தும் எதிர்பார்க்காதவர். இப்படிப்பட்டவர்கள், முன்வினை எனப்படும் பிராரப்த கர்மம் காரணமாக உலகில் தங்களுக்கு வாய்த்த கடமைகளைச் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் மனம் மட்டும் எப்போதும் பரமாத்மாவிடம் லயித்து ஒன்றி இருக்கும்.

ஆகவே, எந்த ஆசையும் இல்லாதவர்களுக்கு எந்த தேவையும் இல்லை என்பதை முனிவரின் இந்தக் கதையின் மூலம் அறிகின்றோம்.

★

## வாழைப்பழத்தில் ஊசி!

மகாராஜா டும்ராவின் வழக்கு சம்பந்தமாக பாபு ராஜேந்திர பிரசாத் இங்கிலாந்திற்குக் கப்பலில் சென்று கொண்டிருந்தார். அப்போது ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றது.

பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பயணி புகைபிடித்துக் கொண்டிருந்தார். புகை மண்டலம் ராஜேந்திர பிரசாத்தை சூழ்ந்து கொண்டது.

மிகவும் பணிவுடனும், நயமாகவும் ராஜேந்திர பிரசாத் அந்த பயணியிடம், ''ஐயா, சிகரெட் குடிக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

''ஆம்'' என்று பதில்வந்தது.

''அதற்குக் காசு கொடுத்திருப்பீர்களே?'' – இது பிரசாத்தின் அடுத்த கேள்வி.

''ஆம்'' என்பதே பதில்.

''ஆனால் இந்த சிகரெட்டுக்காக நான் காசேதும் தரவில்லையே!'' என்று பிரசாத் கேட்ட போதும், ''ஆம்'' என்றே, பதில் வந்தது.

இப்போது ராஜேந்திரப் பிரஸாத் கூறினார்: ''அப்படி இருக்கும்போது இந்த சிகரெட் புகையை எனக்கும் பங்கு போட்டுக் கொடுக்க விரும்புகிறீர்களே. அது ஏன்?''

அந்த ஆசாமி வெட்கமடைந்து, ராஜேந்திரா பிரசாத்திடம் மன்னிப்புக் கோரினார்.

★

## நல்லவர்க்கு அணிகலன்

நதிகள் நீரைத் தாங்களே பருகுவதில்லை; மரங்கள் பழங்களைத் தாங்களே உண்பதில்லை; நீர் பொழியும் மேகக் கூட்டங்கள் தானியத்தைத் தாங்களே உண்பதில்லை; பிறருக்கு உதவி புரிவதே நல்லவர்களுக்கு அணிகலன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவல் கனவு!

நீல ஒளியின் விழிகள்
நிலவைப் பகைக்கும் வதனம்
காலில் கொஞ்சும் சலங்கை
கையில் காப்பு விளங்க

தேனாய்ச் சொட்டும் குரலில்
தேகம் சிலிர்க்க வைக்க
மானாய்த் துள்ளி அவளும்
மறைவை விட்டு வந்தாள்!

காதில் தோடு தொங்க
கழுத்தால் பொன்னும் மங்க
கோதை மெல்ல வந்து
கோர்த்தாள் கையை நின்று!

அசையும் இடையின் அதிர்வில்
அழகு துள்ளி ஆடும்
இசையும் மார்பின் இடையில்
இதயம் சுரங்கள் பாடும்,

பார்த்த பொழுது கண்கள்
பறித்துக் கொண்ட பெண்ணின்
ஈர்ப்பால் கொஞ்சம் என்னை
இழந்து விட்டேன் உண்மை!

வெட்டும் பார்வை வீச்சு
விசையால் மனதே போச்சு
சுட்டும் விரலை ஆட்ட
சுழலும் உலகம் மேற்கே!

பஞ்சு அடிகள் வைத்து
பாதம் தரையில் முட்டி
வந்தாள் எனவே தேவ
மங்கை இல்லை என்றேன்.

கிட்ட நெருங்கி நின்று
கொடுத்தாள் முத்தம் ஒன்று
கட்டிவில் உருண்டு விழுந்தேன்—சே
கனவு கலைந்து போச்சே!

— கி. வாயுபுத்திரன் —

## அகராதி

### கற்பு

கண்ணகி விட்டுச் சென்ற
பூர்வீகச் சொத்து;
வாரிசுரிமை கோருபவர் ஏராளம்!
மனத் திண்மை மட்டும் இருந்து
விட்டால்,
தானாக வந்துவிடும் சொத்துரிமை!

★ ★ ★

### கடன்

உறவை முறிக்க அயோக்கியன்
வைக்கும் பரீட்சை,
பரீட்சையில் சித்தியடைந்தாலென்ன,
அடையாவிட்டாலென்ன,
முறிவது உறவின் முதுகெலும்புதான்!

★ ★ ★

### 'ரியூட்டறி!'

உழைப்பில்லாமல் ஊதியம் பெறும்
பள்ளி ஆசிரியர்
பாவ விமோசனம் பெறும் தீர்த்தக்
கரை!

★ ★ ★

### காதல்

பொறுப்பற்ற இளம் உள்ளங்களின்
நன்றி கெட்ட தன்மைக்கு வழங்கும்
நற்சாட்சிப் பத்திரம்!

★ ★ ★

### ஓய்வூதியம்

அரசாங்க ஊழியர்
தமது சேவைக் காலத்தில்,
அதிகாரிகளிடம் அகப்படாமல்
தமது குடும்ப நலனை
வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்கு
மாதாந்தம் கொடுக்கப்படும்
பணப் பரிசு!

— ப. தெய்வேந்திரம் —

## புதிய சித்தார்த்தம்

கட்டில் சுகந்தன்னை காசென்று மாளிகை
இட்டில் துறந்தானடி; நீத்தந்த வீதியில்
எட்டி விரைந்தன்பின் ஆழத்தை நாடியே
முட்டித் தெளிந்தானடி; போகந்தான் வாழ்வென்று

கண்ணில் கனாக்கண்டு வாழ்வென்று வாழலை
புண்ணாய் அறிந்தானடி; பேதமை தானிந்த
மண்ணில் முதுமையும் நோயுடன் சேர்தலால்
எண்ணித் துணிந்தானடி ஊர்சுற்றம் பொய்யென்று!

பொய்யின் நிழல் மாறும் ரூபம்தான் மானுடன்
மெய்யே எனக்காணும் ஊர்வலம் போனதில்
உய்யும் வழி கண்டான் ஆசைகள் நீத்தின்ப
தெய்வப் பதங்காணும் பாதையும் கூறினான்!

தந்தை அரசிருக்க தானீன்ற ராகுலன்
தந்தை எனாதிருக்க நேர்தேடிப் போயினன்!
மூந்தை வினையிழைத்த மார்க்கந்தான் ஈதென்று
சொந்தம் துறந்திருந்து சேமத்திற் காயினான்!

சேமத்தைச் சொன்னவன் சொன்னதை விட்டிவர்
நாமத்தைக் கொண்டாரடி நீசமும் போகமும்
காமத்தின் தோய்தலும் மூர்க்கமும் கொண்டிவர்
பாவத்தைக் கொள்தலால் புத்தமும் காப்பதார்?

புத்தத்தைக் காக்கவே யுத்தமும் ஆமென
சித்தார்த்தம் கண்டாரடி; கண்டந்த சேனைக்கு
மெத்தநல் ஆள்சேர்த்து மானுடம் மாய்க்கவோ
சத்தமாய்ச் சொன்னாரடி சாதென்று ஆடைக்குள்?

— மாவை. வரோதயன் —

## பூபாளம் பாடும் நேரம்!

'கொக்கரக்கோ' எனக்கூவும் சேவல்
''கேவியூ—போ'' எனத்தன் சிறகடிக்கும்
'இர்ர்...' என்று இரையும் சில்வண்டு
இன்றில்லை 'ரவுண்டப்' என்றுரைக்கும்

விரிகின்ற பூக்களின் முகமெல்லாம்
வேட்டொலி இல்லையெனப் புன்னகைக்கும்
விடிகாலை வகுப்பிற்கு விரையுமவர்
வியர்க்கின்ற உடலின்பப் பண்ணிசைக்கும்!

மேய்வதற்கு போகின்ற மாடுகளும்
மிதிவெடி கவனமென நடைபோடும்
பாய்கின்ற கன்றுக்கு உதைகொடுத்துப்
பசு, கன்றை தன்னுடனே பார்த்துக்கொள்ளும்!

'கூக்கூ' எனக்கூவும் குயில்கள்
''குளி கெதியா'' எனஇங்கு குரல்கொடுக்கும்
குரைக்கின்ற நாய்தனது மொழியில்
''கொஞ்சமிரு, ஆமி'' என்றுசொல் லும்!

'காட்கா' எனக்கரையும் காகம்—ஐசி
காண்பிக்க வேணுமென அறிவுறுத்தும்
பாட்டாவின் பாக்குரலின் ஓசை—இதய
படபடப்பை வரைபினிலே கீறும்!

— கி. குருபரன் —

## குருதி

குலம் பேசிக் கோடேறும் கனவான்கட்கும்
கும்பிட்டுத்திரிகின்ற சாமிமார்க்கும்
நிலச்சண்டை நிதம்செய்யும் நாடாக்காரருக்கும்
நீறணிந்து மாறுசெய்யும் நீசர்கட்கும்
தலைச்செல்லத் தடைபோடும் தர்மகர்த்தாவிற்கும்
தீண்டாமை பேசுகின்ற தூண்களுக்கும்
சிலையிற்கு பூச்சொரியும் சிவநேசர்க்கும்
சமசேவை செய்வது குருதி ஒன்றே!

செங்குருதி வெண்குருதி சிறுதட்டென்ற
சீரான இம் மூன்றும்
எங்கள் உடலெங்கும் ஓடும்
இரத்தத்தின் முக்கூறு—இவை
தங்கள் தொழில் தன்னைத்
திறமாகச் செய்வதனால்
அங்குலம் அங்குலமாய் நாம்
அண்டவெளி செல்கின்றோம்!

சீரான சேவையினால் சிறப்பான வெப்பநிலை
சின்னக்கிருமியுடன் பென்னம்பெரியசண்டை
போரிலே காயம் என்றால் பைபிரினால்
பாதுகாப்பு வலைவிரிப்பு
ஊரிலிழப்பென்றால் ஒத்துமாறி உதவுகிற
உயர்சேவை செய்கின்ற உதிரம்
வேரற்ற சுரப்பதனை வேறிடத்துக்கனுப்பி
விதம்விதமாய் சேவைசெய்ய விசனம் ஏன் நம்மவர்க்கு?

— நோயாளி —

கவிதை முற்றம்

## தேசத்தின் தேவை இது!

(15-8-98 சஞ்சீவியில் பிரசுரமான 'வெளிநாடே வேண்டாம்' என்ற கவிதைக்குப் பதில் இது.)

''வெளிநாடு வேண்டாம் என்னும்
வெறுப்புடன்'' கவிதை பார்த்தேன்
தெளியிலேன் துணுக்குற் றேன்பின்
தெளிந்திதை எழுதுகின்றேன்
வெளியிலே நாங்கள் என்ன
விருப்பமாய் தானோ போனோம்?
குழம்பியே தவிக்கும் எங்கள்
தேசத்தின் தேவை இது.

தங்கையின் கல்யாணத்தில்
சீதனம் பத்து லட்சம்
பந்தலும் வீடியோவும்
இன்னொரு ரண்டு லட்சம்
தம்பியை எடுக்க வென்று
கேட்டது ஆறு சொச்சம்
தங்கைமார் திருமணத்திற் (கு)
நாலு பேர் உண்டு மிச்சம்.

கம்பஸில் அண்ணர் கல்வி
தொடர்ந்திடக் காசிங்கேது?
காணியும் புதுவீடொன்றும்
கட்டினீர் வழியொன் றேது?
போனிலே நீரும் வந்து
''தம்பியோ'' என நம்பர் தந்து
பேசினீர் ஆறிப் போனீர்
''பில்'' லதை அறியீர் தானே?

''தம்பி நீ போய்வா ராசா''
என நீர் அனுப்பிவிட்டு
அங்கு நீர் நின்று கொண்டு
அருச்சனை செய்கின் றீரோ?
கூழுக்கும் ஆசை நல்ல
மீசையும் வேண்டும் என்றோ
கூறுநீர் முறையோ ஈது?
படித்தவர் பெரியோர் கூறும்.

கோபமாய்க் கூறவில்லை
விளக்கமாய்க் கூறவந்தேன்
நாளும் நாம் கொள்ளும் தூக்கம்
இரண்டொரு மணித்தியாலம்
''போகத்தைத் தேடிப் போறீர்''
என்ன நீர் சொல்லக்கேட்ட
வேகத்தில் பேசுகின்றோம்
வேறொன்றும் இல்லைத் தாயே!

ஊரிலே உத்தியோகம்
பார்க்க நீர் சொல்லக் கேட்டேன்
தேருவீர் சம்பளத்தை
தின்றுடத் தானும்காணா
அமுக்கியே விட்டால் கூட
தமிழனின் பொருளாதாரம்
அழுந்துதிடா விந்தை எல்லாம்
''வெளியிலே'' வாழ்வோர் பங்கே.

தேசத்தில் நேசம் உண்டு
தமிழிலே மோகம் உண்டு
பாசமாய் நாட்டுக் காக
மனமுவந் தளிப்ப துண்டு
உடலது இங்கென்றாலும்
உயிரெங்கள் நாட்டி லம்மா
கொடு விதி என்னை மீண்டும்
தேசத்தில் வாழ்க்கை நல்கு!

— மண்ணடியான் —

## செல்லப்பரின் இன்றைய சிந்தனை!

செம்மணியில் புதைந்திருப்பது
'முழுதும் உண்மை'.
ஆனால் அதில்
'ஒரு பொல்லாப்பும் இல்லை'
என்கிறார் அம்மையார்,
எலும்புக்கூடுகள் இன்னும்
'அப்படியே உள்ளது'
என்பது சிப்பாயின் சாட்சியம்;
இதற்குள் இவற்றை யாரும்
கிண்டி எடுத்தார்களோ
'யார் அறிவர்?'
எப்போது கிளறப்படும்?
'ஒருவருக்கும் தெரியாது!'
ஆனால் இவைபற்றி அரசு
'எல்லாம் செப்படிவித்தை'
என்கிறது.

— தி. திருக்குமரன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்.

# அன்பு வனம்

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து இரண்டு என நினைக்கின்றேன். எனக்கு சரியாக பத்து வயது இருக்கும். நல்ல ஞாபகம்: தீபாவளிக்கு எடுத்த 'பிஜாமா' சறம் — மஞ்சளில் சிவப்பு இரட்டைக் குறுக்கு கோடு போட்டது — கட்டியிருந்த ஒரு நேரம். கிட்டிப் புள்ளும் கிளித்தட்டுமாய், முழங்காலில் புண்ணுமாய் திரிந்த நேரம். எங்கள் ஊர் சூழவும் தென்னந் தோப்புக்கள் நிறைய நடுவில் எங்கள் கிராமம். எங்கு பார்த்தாலும் தென்னைகள். தென்னந் தோப்புக்களைத் தாண்டி முன்னுக்கு ஒரு கிராமம். பின்னுக்கு ஒரு கிராமம். எனவே ஒரே நேரில் மூன்று கிராமங்கள் இருந்தன.

எங்கள் கிராமத்தில் பத்து பதினைந்து குடிகள் இருந்தன தான். பின்னுக்கிருந்த கிராமத்தில்தான் எனது பள்ளிக்கூடம். மாலையில் கிளித்தட்டு அமோகமாய் புளுதி பறக்க நடக்கும். ஒரு சந்தோசமான விளையாட்டு. கிணற்றடி வைரவர் கோவிலுக்கு முன்னால்தான் மைதானம். அதில் ஒரு மாந்தோப்பு இருந்தது. நாவல், சுரணை என நிறைய மரங்கள். எப்பவும் இதமான காற்று வீசியபடி இருக்கும். மனதுக்கினிமையான இடம். நாங்கள் ஒரு பத்துப் பன்னிரண்டு பையன்களின் சனி, ஞாயிறு, மற்ற நாள்களின் மாலை சீவியம் முழுவதும் அதில்தான் கழியும்.

நான் மிகவும் குறும்பன்; மைதானத்துக்கு பக்கத்திலே தான் அடுத்த ஊருக்கான மணல்பாதை. அதில் வருவோர் போவோரிடம் எங்கள் குறும்புகள் அதிகம். பட்டம்தெளித்தல், பெரியவர்கள் ஆனாலும் சரி, சிறியவர்களானாலும் சரி, பாரபட்சம் இல்லை.

'பெல்மூடி சண்முகம்' (தலை மொட்டை), கடுவன் பூனை மார்க்கண்டு (முழுக் கறுப்பு) — இப்படிப் பட்டங்கள் பலகொடுப்போம். போக விட்டுபெலத்துக் கத்துவோம். திரும்பி வந்தால், காற்றைக் கிழித்தபடி தென்னந்தோப்புக்களாக ஓடி விடுவோம். எங்களைப் பிடிக்க எவராலும் முடியாது. இதில் தலைமை எப்பவும் நான்தான். ஏன் அப்படி செய்தேன் என்று இன்று வரை புரியாத புதிர். இன்றைய அமைதி அன்று இல்லை. அன்று அப்படி இருந்ததுதான் இன்றைய அமைதிக்கு காரணமோ தெரியாது.

இப்படி எங்களின் குறும்புகளில் அகப்பிட்டுக் கொண்டவர்களில் முக்கியமான ஒருவர் எங்கள் ஊர் விதானையார். மூன்று கிராமத்துக்கும் அப்போது ஒரே விதானையார் தான் பொறுப்பு. அவருடைய அலுவலகம் பின் கிராமத்தில்தான் இருந்தது. எங்கள் கிராமத்தைத் தாண்டித்தான் அவர் போக வேண்டும். அவரது ஊர் யாழ்ப்பாணப் பக்கம். பஸ்ஸில் வந்து இறங்கி மணல்பாதையால் நடந்து வருவார். ஞாயிறு மாலை வந்தால் வெள்ளி மாலைதான் ஊருக்குத் திரும்புவார். ஆகவே மாலை நேரங்களில் நாங்கள் விளையாடிக்கொண்டிருக்கும் போது எங்களைக் கடந்து போவதைப் பலதடவை கண்டிருக்கின்றேன்.

அப்பாவித் தோற்றம்; இரண்டு பற்கள் மிதந்து முன்னுக்கு நிற்கும்; தலை மொட்டை; மிகவும் மெலிதான உடம்பு; கண்களில் ஒரு அப்பாவித்தன்மை; வெள்ளை வேட்டி, சேட், கையில் ஒரு வயர் பாக் — மிகவும் மங்கியது — இதுதான்



விதானையாரின் தோற்றம். பார்க்கப் பாவமாக இருக்கும்; அதிர்ந்து பேசமாட்டார் என எண்ணிக் கொள்வேன்.

அவரின் அப்பாவித் தன்மையால் நாளடைவில் அவருடனும் நாங்கள் சேட்டை விடத் தொடங்கினோம். நையாண்டியாக ஏதாவது பாடுவது, பெலத்துச்சிரிப்பது, விசிலடிப்பது... இப்படிப்பல. என்னிடம் இயல்பில் பாட்டுக் கட்டும் திறன் இருந்தது. விதானையாரை பார்த்தும் தடாலடி ஒன்று குறும்பாக வந்தது.

...'விதானை மாமா,
விதானை மாமா
விடிஞ்சா கல்யாணம் —
பொழுது
சாய்ஞ்சா பொண்ணைக்
காணோம்...''

இதன் அர்த்தம் அன்று எனக்கு விளங்கியிருக்குமா என்பது சந்தேகம்தான். விதானைமாமா வரும் போது இந்தப்பாட்டை பாடுவது வழக்கமாகிப் போனது. பாவம். விதானைமாமா மற்றவர்கள் போல் எங்களைத் திட்டுவது இல்லை. ஒரு மெல்லிய சிரிப்புடன் எங்களைக் கடந்து போவதனைக் கண்டிருக்கின்றேன்; எங்கள் தாய் தகப்பனிடம் கூட இதுபற்றி சொல்வதும் இல்லை.

விதானைமாமா திருமணமானவரா என்பதும் எங்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

ஒரு நாள் இப்படிப் பாடும் போது அவருடன் எங்கள் ஊர்ப் பெரியவர் ஒருவரும் கூட வந்துவிட்டார். இதனைக் கேட்டதும் அவருக்கு கோபம் வந்திருக்க வேண்டும். எங்களைப் பார்த்து 'என்னடா இது பாட்டு?' என்று முறைத்துத் திட்ட, பையன்கள் எல்லோரும் என்னைக்காட்ட அவர் எனக்கு கிட்ட வந்தார். பாவம் விதானை மாமா.

''...விடுங்க அண்ணாச்சி... அவன் அண்ணாவியாரின் பேரன். குணத்தைக் காட்டுவான்...''

ஆனாலும் நாங்கள் பாடுவதை நிறுத்தவில்லை: ஒரு நாள் நாங்கள் சிலர் மரத் தோப்பில் இருந்து ஆடிமாதம் என்பதால் பட்டம் கட்டிக் கொண்டிருந்தோம். பாதையிலே என்னுடைய ஐயா, வீ. சி. மெம்பர் கனகசபை, கோயில் பூசாரியார் சின்னத்தம்பி மூவரும் நல்ல வேட்டி சால்வையுடன் எங்களைக் கடந்து போனார்கள். அன்றைய நாள்களில் எவரும் சேட் போடுவதில்லை. தோளில் சால்வை ஒன்று போடுவார்கள். கிராமம் அல்லவா?

எங்கு போகினம் என்று கேட்பதற்கு எங்களுக்கு வாய் துடித்தது. ஆனால் கேட்பதற்கு பயம். தூரப் பயணம் போகும் எவரையும் 'எங்கு போகின்றாய்?' என்று கேட்கக் கூடாது. கேட்டால் அலுவல் பிழைத்து விடும் என்பது நம்பிக்கை. இதனால் நாங்கள் மௌனமாகவே இருந்து விட்டோம். ஒருவருக்கு ஒருவர் கண்காட்டி உனக்குத் தெரியுமா எனக் கேள்வி கேட்போம். எவருக்கும் எதுவும் தெரியாது: மௌனமாக தலையாட்டினார்கள்.

நான் மாலை வீட்டுக்குப் போன போதும் ஐயா வீடு திரும்பவில்லை. அம்மா புட்டவித்துக் கொண்டிருந்தார். புட்டை அள்ளி வாயில் போட்டபடி ''ஐயா எங்கையம்மா போனவர்?''

''விதானைமாமா ஐஞ்சாறு நாளாக வேலைக்கு வரேல்லையாம்... அதுதான் பார்க்கப் போட்டினம்...''

நானும் விதானை மாமாவை ஐஞ்சாறு நாளாக காணவில்லை என்பது அப்போதுதான் ஞாபகம் வந்தது: சுகமில்லாமல் இருக்கும் என அம்மாவுக்கு சொன்னேன். இரவும் ஐயா வரவில்லை: அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணி வரையும் நித்திரையாகி விட்டேன். ஐயாவின் குரல் கேட்டது. விதானை மாமாவை பார்க்கப் போனவை வந்திட்டினம் என நினைத்தபடி காதைக் கூர்மையாக்கினேன்:

''...ஏனாமப்பா விதானையார்வேலைக்கு வரேல்லை?''

''...பாவமப்பா. விதானையார்... அந்தாவின்ரை கதை சோகமாய் போட்டுது...''

''...என்ன சொல்லுறியள் எனக்கு விளங்கவில்லை...'' ஐயா மிகவும் தணிந்த குரலில் சொல்வது எனக்குக் கேட்டது:

''...அவற்றை மனுசி... ஆரோடையோ ஓடிட்டாவாம்...''

எனக்கு சுருக்கென்றது. எழுந்து உட்கார்ந்து கொண்டேன். அந்தப்பாட்டு... அதன்படி... நடந்து விட்டதா? நண்பர்களிடம் ஓடினேன்: விசயத்தைச் சொன்னேன். எங்களுடைய பிஞ்சு மனம்... நாங்கள் பாடியபடியால்தான் இது நடந்தது என நினைத்தோம். ஆனாலும் அவருக்கு கல்யாணமாகி பத்து வருடத்துக்கு பின்புதான் இது நடந்தது. எங்கள் பாட்டின்படி உடனே நடந்து இருக்க வேண்டும்: இதனால் நாங்கள் ஆறுதல் அடைந்தோம்.

சில நாள்களுக்குப் பின் விதானைமாமா வேலைக்குத் திரும்பினார். பழையபடிதான் இருந்தார். மனைவியின் நகைகள் எல்லாவற்றை

(X ஆம் பக்கம் பார்க்க)

**கோகுலராகவன்**

சஞ்சீவி

# சிறு கதைகள்

## வாய்ச்சொல் வீரர்கள்..

அந்த இரவுப் பொழுது அமைதியாய்க் கழிந்து கொண்டிருந்தது: நேரம் பதினொருமணி என்பதற்கு அறிகுறியாகக் கடிகாரம் பதினொரு தடவைகள் அடித்து ஓய்ந்தது. நாகமுத்தர் தன் புற்பாயில் நன்றாகக் காலை நீட்டியவாறுபடுத்திருந்தார், ஆனால் அன்று ஏனோ அவருக்குத் தூக்கம்வரவில்லை. நெடுநேரம் முயன்றும் தூக்கம் வராததால் ஏற்பட்ட சலிப்பு ஒரு சிறு பெருமூச்சாய் வெளிப்பட, தன் படுக்கையை விட்டெழுந்து வாயிற் கதவை நோக்கி நடந்தார் நாகமுத்தர். கதவைத் திறப்பதற்காகத் திறப்பின் மீது கையை வைத்தவர் ஒரு கணம் அப்படியே நின்றார். ''இந்த அறுந்த கள்ளராலை மனிசர் ஒண்டுக்கு ரெண்டுக்குப் போறதுக்குக் கூடக் கதவைத் திறக்கேலாமலிருக்கிறது'' என்று தனக்குள்ளே எண்ணியவாறு ஜன்னல் அருகே வந்து தன் கையிலிருந்த ரோச்சின் உதவியோடு வெளியே எட்டிப்பார்த்தார். அங்கே எந்த அரவமும் தென்படவில்லை. உந்த எளியநாய் சோத்துக்கு மட்டுந்தான் ஒழுங்காய் வரும். மற்ற நேரங்களிலை எங்காவது போய்த் துலைஞ்சு போம். நாளைக்கு ஒரு நல்ல சங்கிலி வாங்கி உதைப் பிடிச்சு வாசலிலை கட்டிப் போட்டுத்தான்மற்றவேலை' என்று தனக்குள்ளே தீர்மானம் நிறைவேற்றியவராய் மீண்டும் கதவருகே வந்து ''அப்பனே, முருகா நீதானப்பா துணை'' என்று வாய்விட்டுக் கூறியவாறு மெதுவாய்க் கதவைத் திறந்தார். படிகளில் நிதானமாய் இறங்கி முற்றத்தில் காலைவைத்து ஒரிரு அடிகள் எடுத்து வைத்தார்.

அப்போதுதான் அது நடந்தது.

அந்த ஆழ்ந்த அமைதி எங்கோ தொலைந்து போனது: ''ஐயோ. என்ரை ஐயோ. ஓடியாங்கோ ஐயோ ஓடியாங்கோ... கள்ளன், கள்ளன்'' நாகமுத்தரின் இதயம் ஒரு கணம் நின்று துடித்தது.

ஒருவித அசாதாரண வேகத்துடன் எகிறிப்பாய்ந்து வீட்டினுள்ளே வந்து கதவை அறைந்து சாத்தித் தாளிட்டார். அதே வேகத்தில் பாய்ந்து சென்று ஜன்னலையும் தாளிட்டார், அவரின் இதயம் பலமாய் அடித்தது.

ஓடிச் சென்று அறைக் கதவில் மோதி ''அன்னம்மா, எழும்படி'' என்று நாக்குவறளக் கத்தினார் நாகமுத்தர்: உள்ளே இருந்து பதில் வரவில்லை. ''இவளொருத்தி சக்கரைச் சாடி மாதிரி, சரிஞ்சாளெண்டால் பிறகு [illegible]மழிஞ்சாலும் எழும்ப[illegible]டாள்'' என்று அன்னம்மாவைப் பலமாய் வைதவாறே மீண்டும் கத்தினார்.

தூக்கக் கலக்கம் கலையாமலே அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த அன்னம்மா ''என்னப்பா, ஏன் கத்தினனீங்கள்?'' என்றாள்.

''உங்காலை நாராயணன் வீட்டுப்பக்கம் கள்ளன் போலையிருக்கிது. இவ்வளவு நேரமும் கத்திக் கேட்டது'' என்றார் நாகமுத்தர்:

''என்ன? கள்ளனோ? நாசமாய்ப்போன கள்ளன் இந்தப் பக்கமும் வந்திட்டானே! எனக்கு உடம்பெல்லாம் பதறுது; இப்ப என்னப்பா செய்பிறது...'' என்றாள் அன்னம்மா பரபரப்போடு.

அதுவரையும் தாய் தந்தையின் உரையாடலைப் படுக்கையிலிருந்தவாறே கேட்டுக் கொண்டிருந்த காஞ்சனாவும், ரஞ்சனாவும் 'கள்ளன்' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் பதறியடித்துக் கொண்டு எழுந்து வந்தனர்.

''சும்மா பதறிக் கொண்டு [illegible] கையிலை கிடக்கிறதுகளையெல்லாம் கழட்டுங்கோ'' என்று கட்டளை பிறப்பித்தார் நாகமுத்தர்.

''ஏனையா அதுகளை இப்ப என்ன செய்யப்போறீங்கள்?'' என்றாள் ரஞ்சனா.

''என்ன செய்யப் போறனோ. விசர்க்கதை கதைச்சுக் கொண்டு நிக்காமல் கழட்டடி கெதியாய்?'' என்று தன் பற்களைக் கடித்தார் நாகமுத்தர்:

''நாராயணன் மாமாவும் வீட்டிலை இல்லை. அதுகள் அங்கை என்ன பாடுபடுகிதுகளோ? ஒருக்காகப் போய்ப் பார்த்திட்டு வாங்கோவனையா'' என்றாள் காஞ்சனா ஒருவித கெஞ்சல் தொனியில்.

''பாத்திட்டுவர அங்கையென்ன படமே நடக்குது? வந்த கள்ளன் கத்தி கொண்டந்தானோ? துவக்குக் கொண்டந்தானோ? பாத்தப்பாராமல் தீட்டிவிட்டானெண்டால்?'' என்று பெரிதாய் ஒரு கேள்விக்குறியோடு நிறுத்தினார் நாகமுத்தர்.

இதற்கிடையில் நாராயணன் வீட்டுப்பக்கமாய் [illegible]டை அயலவர்கள் ஒவ்வொருவராய் வந்து கூட அங்கிருந்து பேச்சொலி பலமாகக் கிளம்பியது. நாகமுத்தருக்கு மெல்ல மெல்ல ஒரு விதமான உற்சாகம் பிறக்கலாயிற்று: ஜன்னல் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தார். ஒழுங்கையால் யாரோ போவது தெரியவே சற்றுப் பலத்த குரலில் 'ஆரது'? என்றார். அது 'நான் சோதி' என்று பதில் வந்தது.

''என்னடாப்பா பிரச்சினை?'' என்றார் 'நாகமுத்தர்.

''நாராயணன் வீட்டிலை கள்ளனாம்'' என்றவாறு சோதி ஓடிக்கொண்டிருந்தான்: கதவை திறந்து கொண்டு வெளியே வந்து நாராயணன் வீட்டைநோக்கி நடந்தார் நாகமுத்தர்.

''எங்கை கள்ளன்?'' என்றவாறு கம்பீரமாய் கூட்டத்தில் பிரவேசித்தார் நாகமுத்தர்.

''அங்கை தண்ணி குடிச்சுக் கொண்டு நிக்கிறான்'' என்றான் ஒரு சிறு பையன்; பதில் கூறிய சிறுவனை முறைத்துப் பார்த்தார். நாகமுத்தர்.

''கள்ளனேன் இஞ்சை நிக்கிறான். அவன் இப்ப வீட்டிலை படுத்து றெஸ்ற் எடுத்துக்கொண்டிருப்பான்'' என்றான் அருகில் நின்ற சோதி.


அங்கே பேயறைந்தவன் போல நின்று கொண்டிருந்த நாராயணனின் மகன் மீது

(X ஆம் பக்கம் பார்க்க)

**-ஆ. இரவீந்திரன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடான் மனித அவலம்!



போசாக்கின்றி மெலிந்து எலும்பும் தோலுமாகிவிட்ட தன் பிள்ளையைச் சுமந்து நிற்கும் ஒரு சூடானியத் தந்தை.

செவ்வாய்க் கிழமை—115; புதன் கிழமை—57, வியாழக் கிழமை—53, வெள்ளிக் கிழமை—74, சனிக்கிழமை—77, ஞாயிற்றுக் கிழமை—60, திங்கட் கிழமை—44.

தென்மேற்கு சூடானில் வோ என்ற நகரில் உள்ள ஓர் இடுகாட்டில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில் மேற்கண்ட விவரங்கள் உள்ளன.

தடித்தமட்டையால் கவரிடப்பட்ட அந்தப் பதிவேட்டில் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பக்கம் ஒதுக்கப் பட்டிருக்கிறது

அந்த இடுகாட்டில் புதைப்பதற்காக நாளாந்தம் எடுத்துவரப்படும் சடலங்களின் எண்ணிக்கைகளே அதில் பதியப்படுகின்றன. பட்டினியாலும், அதனால் ஏற்படும் தொற்று நோய்களாலும் இறக்கின்ற குழந்தைகளே இவற்றில் அதிகம்.

15 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் சூடானின் சிவில் யுத்தத்தில் பெரும் பஞ்சமும் பட்டினியும் புதிதான ஒன்றல்ல; ஆனால் இந்த ஆண்டு அவை மீண்டும் கோரவடிவம் எடுத்துள்ளன. நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் செத்து மடிகின்றனர்.

முடிவின்றி நீடிக்கும் சூடான் யுத்தத்தைத் தொடர்ந்து அவதானித்து வருபவர்கள் ஒன்றை நன்கு விளங்கிக் கொள்ளமுடியும். பசியும் பட்டினியும், உணவு விநியோகமும் அங்கு இராணுவ இலக்குகளை அடைவதற்கான ஆயுதங்களாக்கப்பட்டிருப்பதே அதுவாகும்.

சூடானின் தென்மேற்கு மாநிலமான பார்—எல்—ஹசல் (Bahr-el-Ghazal) பிராந்தியத்தில் அஜிப் (Ajiap) என்ற பகுதியிலேயே பஞ்சமும் பட்டினியும் மிகமோசமாகத் தலைவிரித்தாடுகின்றன; உணவுக்காக மாதக்கணக்கில் அலைந்து திரிந்து, ஒட்டி உலர்ந்து தோல்போர்த்திய எலும்புக் கூடுகளாகத் தோன்றும் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்களை அங்கு ஆயிரக்கணக்கில் காணலாம்; சாகுந்தறுவாயில் இவர்கள் அங்குள்ள நிவாரண நிலைகளை வந்தடைகின்றனர். அங்குள்ள எம். எஸ். எவ் என்கிற எல்லைகள் கடந்த மருத்துவ சேவையினரின் தகவலின்படி அங்கு தினமும் 120 பேர் பட்டினி மற்றும் அதனுடன் தொடர்புடைய பாதிப்புகளால் மடிகின்றனர். வோ (Wau) என்ற மற்றொரு நகரில் பட்டினியால் மடியும் பச்சிளம்குழந்தைகள் நாளாந்தம் ஒரே குழிக்குள் புதைக்கப்படுகின்றன. சுமார் 70 ஆயிரம் அகதிகள் உணவை எதிர்பார்த்து இங்குள்ள நிலையங்களில் வந்து தங்கியிருக்கின்றனர். மாதக்கணக்கில்ஒருசிறுதானியத்தைக் கூட கண்ணால் காணாமலேயே பலர் மடிந்துபோகின்றனர், போதிய வசதிகளின்றி இயங்கும் நிவாரண நிலையங்களில் எப்போதாவது சிறிதளவு உணவு கிடைக்கும். அதை உண்ட சில மணிநேரத்தில் மரணங்கள் அதிகரிக்கும். தரையில் ஆங்காங்கே மண்ணோடு மண்ணாகக் கிடக்கும் குழந்தைகளை எப்போதாவது நிவாரணப் பணியாளர்கள் தூக்கிவந்து குளிப்பாட்டுவார்கள். குளிப்பாட்டிய சில நிமிடங்களில் குழந்தைகள் திடீர் திடீரென உயிரிழக்கும். இலேசாக மழை பெய்த மறுநாள் ஏராளமான சடலங்களை எங்கும் காணலாம்.

எப்போதாவது படங்கள் மூலம் மட்டும் உலகின் கண்களுக்குத் தெரியவரும் இந்த மாபெரும் மனித அவலம் இப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

தெற்கு சூடான் முழுவதும் 15 லட்சம் பேர் பட்டினிச் சாவை எதிர்நோக்கி உள்ளதாக சர்வதேச உதவி, நிவாரண அமைப்புக்கள் கூறுகின்றன.

சூடானில் ஆட்சியில் இருக்கும் அதிபர் ஓமர் அல் பஸீர் (Omar Al Bashir) தலைமையிலான அரசுக்கு எதிராக பல கிளர்ச்சிக் குழுக்கள் நீண்டகாலமாகச் சண்டையிட்டு வருகின்றன. இவற்றில் சக்திமிக்க போராளிக் குழு எஸ். பி. எல். ஏ. எனப்படும் சூடான் மக்கள் விடுதலை இராணுவம் ஆகும்.

தென் பகுதிக்கு கூடிய சுயாட்சி கோரி இந்தக் குழுக்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக கார்ட்டூம் ஆட்சியாளர்களுடன் சண்டையிட்டு வருகின்றன.

சூடானில் அரபுகளும், இஸ்லாமியர்களும் வட பகுதியில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அவர்களுக்கு எதிராகப் போராடும் தென் பகுதியினரில் பெரும்பாலானோர் ஆபிரிக்கர்களும், கிறிஸ்தவர்களும் ஆவர். தென்பகுதியின் பெரும் பிரதேசத்தை கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர். இந்தப் பகுதிகளிலேயே பஞ்சமும், பட்டினியும் தலைவிரித்தாடுகின்றன. இங்கு நாளாந்தம் இடம்பெறும் மரணங்களில் சண்டையால் மடிந்தவர்களின் எண்ணிக்கை தெரிய வருவதில்லை.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஐ. நாவின் நிவாரண உதவிகள் சென்றடைய அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக இஸ்லாமிய அரசும், கிளர்ச்சிக் குழுக்களும் கூறிக்கொள்கின்றபோதிலும் 15 வருடகாலப் போரில் வெற்றியீட்ட முடியாத நிலையில் உள்ள இருதரப்பினரும் ஐ. நாவின் நிவாரண நடவடிக்கைகளை மீண்டும் மீண்டும் தங்களின் சொந்தத் தந்திரோபாயங்களுக்கும் நலன்களுக்கும் சாதகமாக்கிக் கொள்கின்றனர்.

நாட்டின் மத்தியில் உள்ள நூபா (Nupa) மலைத் தொடருக்கு அப்பால் — கிளர்ச்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு— ஐ.நாவின் உணவுப் பொருள்கள் செல்வதைக் கார்ட்டூம் அரசு அனுமதிப்பதில்லை. மலைத் தொடருக்கு அப்பால் உள்ள நகரங்களில் முகாம்களில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான நூபா மக்கள் இதனால் பட்டினிச்சாவுக்குள் தள்ளப்பட்டனர். பெரும்பாலும் ஆபிரிக்க மதத்தவர்களையும் கிறிஸ்தவர்களையும் கொண்ட நூபா மக்களை அழுத்தம் கொடுத்து இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றச் செய்யும் மறைமுக நோக்குடன் அரசு உணவு விநியோகத்தைத் தடுத்துள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் கிளப்பப்பட்டுள்ளன.

கிளர்ச்சியாளர்களின் பகுதிக்கும், அரசின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கும் இடைப்பட்ட இப்பிரதேச மக்கள் உணவின்றி நாயாய், பேயாய் அலைந்து செத்தொழிகின்றனர்.



சூடான் அதிபர்
ஓமர்—அல்—பஸீர்

இவ்வாண்டு முன்னதாக இருதரப்பினரும் திடீரென மோதலில் இறங்கியதே பார் —எல் — ஹாசல் பிராந்தியத்தில் தற்போதைய கொடிய பட்டினி உருவெடுக்கக் காரணமாயிற்று. சண்டை வெடித்ததும் இப்பிரதேசத்தின் உயிர் நாடியான விவசாயிகள் பயிர்ச்செய்கைக்கு தயார்படுத்தப்பட்டிருந்த தமது நிலங்களைக் கைவிட்டு பல திசைகளாகச் சிதறுண்டு இடம் பெயர்ந்தனர். சுமார் ஒரு லட்சம் பேர் இவ்வாறு இடம் பெயர நேர்ந்தது. ஏற்கனவே வறுமையாலும், வரட்சியாலும் பாதிக்கப்பட்டிருந்த இவர்கள் இடம் பெயர நேர்ந்தபோது மேலும் இன்னலுற்றனர்.

சண்டை தீவிரமடைந்ததும் சூடான் அரசு கிளர்ச்சியாளர்களின் பிராந்தியங்கள் மீது விமானப் பயணத்தடையைக் கொண்டு வந்தது. பின்னர் ஐ. நா. உணவு உதவிகள் கிடைப்பதற்காக அத்தடையை நீக்கியது. அதேவேளை உள்ளூர் விவசாயிகளின் ஆதரவு பெற்ற கிளர்ச்சிக் குழு ஒன்றின் தலைவரான கிறிபினோ குவான்ஜின் போல் (Kerubino Kuanyin Bol) என்பவரின் நடவடிக்கைகளை பார் — எல் — ஹாசல் பகுதி

## ஆயுதமாக பட்டினி!

முழுவதிலும் முறியடிப்பதற்கான நடவடிக்கைகளில் அது தீவிரமாக இறங்கியது. அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பணிகளைக் குழப்பியது.

இதேவேளை அரசின் விமானப் பயணத் தடை தென் பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கிளர்ச்சிக் குழுக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக இருந்தது. 'யுத்தப் பிரபுகள்' எனப்படுவோர் தம்வசம் இருந்த உணவுப் பொருள்களுக்கு கூடுதல் வரிகளை விதித்தனர்; இது பட்டினியை மேலும் தீவிரமடையச் செய்தது. கிளர்ச்சியாளர்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ள முழுப்பிரதேசத்துக்கும் இந்த வரி விதிப்பை விஸ்தரித்தனர். அதனால் உலக உணவுத் திட்ட பணியாளர்களின் நிவாரணப் பணிகள் பாதிப்படைந்தன.

சூடான் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அயல் நாடான கென்யாவின் உதவியுடன் கிழக்காபிரிக்க நாடுகளின் பிராந்திய சங்கம் முயற்சித்து வருகிறது. ஆனால் அதில் அங்கம் வகிக்கும் உகண்டா, எதியோப்பியா என்பன சூடான் கிளர்ச்சியாளர்களுக்கு செயல் அளவில் உதவி வருகின்றன.

கிளர்ச்சிக் குழுக்களுக்கு



இடையே பிளவுகளை உருவாக்குவதில் சூடானின் இஸ்லாமிய ஆட்சியாளர்கள் சாதுரியமாக வெற்றி பெற்றுள்ளனர். சிறிய கிளர்ச்சிக் குழுக்களுடன் அது பல உடன்படிக்கைகளைச் செய்து கொண்டதன் மூலம் அவற்றின் இடையே ஒற்றுமையைச் சிதைத்து பல பிராந்தியங்களில் கிளர்ச்சிக் குழுக்கள் இடையே மோதல்களையும் தூண்டிவிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் சூடான் அரசும் பிரதான கிளர்ச்சிக் குழுவான சூடான் மக்கள் விடுதலை இராணுவமும் (எஸ். பி. எல். ஏ) ஒரு மாதகாலம் யுத்த நிறுத்தம் செய்ய உடன்பட்டன.

ஐ.நாவினதும் மற்றும் உதவி நிறுவனங்களினதும் நிவாரணப் பொருள்கள் பட்டினியால் வாடும் மக்களைச் சென்றடைய உதவுவதற்காக யுத்த நிறுத்தம் செய்வதாக இரு தரப்பினரும் அறிவித்தனர். ஆனால் செத்துக்கொண்டிருக்கும் மக்களைப் பொறுத்தவரை இது மிகத் தாமதமான ஒரு நடவடிக்கையாகவே அமைந்தது.

ஐ. நா. விமானங்கள் மூலம் உணவுப் பொருள்களை வீசியது. ஆனால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்ட போது மழை காலம் தொடங்கியது. அதனால் அப் பொருள்களைச் சேகரித்துத் தரைவழியாக எடுத்துச் சென்று விநியோகிப்பது தடைப்பட்டது. சில முகாம்களில் தேவைக்கு அதிகமாக உணவு கிடைத்தது. பல முகாம்களுக்கு உணவு சென்றடையவே இல்லை.

வெள்ளம் நிறைந்த வீதிகள் ஊடாக உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல முடியாமற் போனதாக நிவாரணப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் சூடான் விவகாரத்தில் இரட்டை வேடம் போடுகின்றன. இரு தரப்பாரையும் பேச்சு



சூடான் மக்கள் விடுதலை இராணுவத்தின் தலைவர் ஜோன் கறாங்.

வார்த்தை மேசைக்குக் கொண்டுவர சிறிதளவு அழுத்தத்தைக் கொடுத்து வரும் இந்நாடுகள் அதேநேரம் 'தொட்டிலையும் ஆட்டி, பிள்ளையையும் கிள்ளிவிடும்' வகையிலும் செயற்படுகின்றன.

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் மெடலின் அல்பிறைட் அம்மையார் கடந்த ஆண்டு டிசம்பரில் கிளர்ச்சியாளர்களின் தலைவர்களைச் சந்தித்து அவர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார். அதன் பின்னர் கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகள் தீவிரமாகின. சுயாட்சி கோரும் தெற்கு சூடானியர்களின் போராட்டம் நியாய பூர்வமானதாக இருக்கலாம். ஆனால் இது விவகாரத்தில் அமெரிக்காவின் கொள்கைக்குப் பின்னால் பல விடயங்கள் மறைந்துள்ளன.

சூடான் ஆட்சியாளர்கள் இஸ்லாமிய அடிப்படை வாதத்தைத் தீவிரமாக ஆதரிக்கின்ற இஸ்லாமியர்களாவர். எனவே சூடானில் அமைதி திரும்புவது அமெரிக்க நலன்களுக்கு உதவப் போவதில்லை என அமெரிக்கா கருதுகிறது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் ஆபிரிக்காவினுள் அகன்று பரவுவதற்கு சூடானே பிரதான வாயிலாக இருப்பதாக அது அஞ்சுகிறது; அண்டை நாடான எகிப்தில் அதிபர் ஹொஸ்னி முபாரக் தலைமையிலான மதசார்பற்ற அமெரிக்க ஆதரவுப் போக்குடைய அரசை சூடானின் இஸ்லாமிய அடிப்படைவாதிகளிடம் இருந்து பாதுகாப்பது அமெரிக்காவுக்கு அவசியமாகின்றது; எனவே கெய்ரோவின் (எகிப்து) ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக கார்ட்டூமின் (சூடானின்) ஸ்திரத்தன்மையைக் குறைக்கவேண்டியது அவசியம். இதனால் சூடான்ஆட்சியாளர்கள் மீது பல தடைகளையும் கட்டுப்பாடுகளையும் அமெரிக்கா விதித்துள்ளது. உலகப் பயங்கரவாதத்துக்கு உதவுவதாகக் கூறி கார்ட்டூமில் உள்ள மருந்துத் தொழிற்சாலை ஒன்றின் மீது அமெரிக்கா அண்மையில் நடத்திய ஏவுகணைத் தாக்குதலும் சூடானின் ஸ்திரத்தன்மையைக் குலைக்கும் ஒரு நடவடிக்கையாகவே கணிக்கப்படுகிறது;



அஜீப் என்ற நகரில் உள்
ஒன்றில் உணவை எதிர்பார்
காத்திருக்கும் சூடானியப்



சூடானிய அரச படைய
கப்பட்ட சூடான் மக்கள் வி
தைச் சேர்ந்த கிளர்ச்சியாளா
நிலையில்.

அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கை என்று அமெரிக்காவே கூறிக்கொள்ளும் நடவடிக்கைகளின் சூத்திரதாரி எனப்படும் பின்லாடெனுடன் கார்ட்டூமில் உள்ள இஸ்லாமியக் கடும் போக்காளர்கள் தொடர்புகளை வைத்திருப்பதாக அமெரிக்கா நம்புகிறது; ஏதாவது ஒரு தருணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடானுக்குத் தக்க அடி கொடுக்க அதுகாத்திருந்தது. அயல் நாடுகளான கென்யாவிலும், தன்சானியாவிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, சூடான் மீது அமெரிக்காவின் அடி வீழ்ந்தது.

சூடான் விவகாரத்தில் கிளர்ச்சியாளர்களின் பக்கத்தைப் பார்த்தால் முடிவின்றித் தொடரும் யுத்தம், கொடிய பஞ்சம் இவற்றின் மத்தியிலும் செல்வந்தர்களும், யுத்தப் பிரபுகளும் அவர்கள் மத்தியில் உருவகி உள்ளனர். கிளர்ச்சியாளர்கள் மீதும், பட்டினியால் வாடும் மக்கள் மீதும் இவர்கள் செல்வாக்குச் செலுத்துகின்றனர். கிளர்ச்சிப்படைகளின் தளபதிகள் பலர் சகல



...கரில் உள்ள நிவாரண நிலையம் ...எதிர்பார்த்து குழந்தைகளுடன் ...னியப் பெண்கள்.

...சுகபோகத்தை அனுபவிக்கின்றனர். அதே நேரம் சாதாரண போராளிகளும் கிராமவாசிகளும் பட்டினியின் விளிம்பில் உள்ளனர்.

சூடானின் உள் நாட்டு நிலைமையும், சூடான் தொடர்பான அமெரிக்கக் கொள்கையும் இவவாறுஇருக்கையில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான அப்பாவிகள் செத்துமடிந்து கொண்டிருக்கின்றனர்.

யாருடைய வாழ்க்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காகப் போராடுவதாக இருதரப்பினரும் கூறிக் கொள்கிறார்களோ அவர்கள் நடமாடும் எலும்புக் கூடுகளாக சாவின் விளிம்பில் அலைகிறனர்.

இந்தநூற்றாண்டின் பெரும் மனித அவலங்கள் நிறைந்த அத்தியாயமாக சூடான் யுத்தத்தை வரலாறு பதிவு செய்கிறது.

அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் விரும்பினால் செத்



...படையினரால் சிறைப்பிடிக் ...மக்கள் விடுதலை இராணுவத் ...ர்ச்சியாளர்கள் சிறையில் பட்டினி

துக் கொண்டிருக்கும் இந்த மக்களின் தலைவிதியை மாற்றி எழுத முடியும், ஆனால் உலகில் சுதந்திரத்துக்காகப் போராடும் இனங்கள் மீது ஆட்சியாளர்கள் பிரயோகிக்கும் ஆயுதங்களில் ஒன்றாய் பட்டினியும் இன்னமும் இருந்து கொண்டே இருக்கிறது.

★

# மாரடைப்பும் அதன் விளைவுகளும்

நவீன உலகில் நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இருதய நோய் ஏற்படுவது மிகவும் அதிகம். அதில் மாரடைப்பு மிகவும் ஆபத்தானது.


மாரடைப்பு எவ்வித முன்னெச்சரிக்கையுடனும் தோன்றுவதில்லை. எனவே மாரடைப்புக் குறித்து அதிக கவனமெடுப்பது அவசியம்.

இருதயத்துக்கு இரண்டு சிறிய நாடிகள் (முடியுரு நாடிகள்) குருதியை வழங்குகின்றன. இருதயம் "பம்பு" போல் தொழிற்பட்டு உடலெங்கும்பிராணவாயுவையும் போசணைப் பொருள்களையும் இதர உடலுக்கு தேவையான பொருள்களையும் எடுத்துச் சென்று வழங்குகிறது. இவை உடலுறுப்புக்களின் தொழிற்பாட்டுக்கு இன்றியமையாதவையாகும்.

அதே போன்று இருதயம் திறம்பட தொழிற்பட அதற்கும் பிராணவாயுவும் போசணைப்பொருள்களும் வழங்கப்பட வேண்டும். இவற்றை முடியுரு நாடிகளே (Coronary Artery) வழங்குகின்றன.

மாரடைப்பு என்றால் என்ன?

இருதயத்திற்குக் குருதியை வழங்கும் நாடிகளின் அடைப்பு அல்லது சுருக்கம் ஏற்படுவதனால் அப்பகுதி இருதயத் தசைகளுக்கு குருதி விநியோகமும் அதனால் எடுத்துச் செல்லப்படும் பிராணவாயுவும் தடைப்படுகின்றன. இதனால் அப்பகுதியின் தொழிற்பாடு பாதிப்படைகிறது. அதன் விளைவாக நெஞ்சை இறுக்குகின்ற அல்லது அமுக்குகின்ற மாதிரியான நோ சில மணித்தியாலங்களுக்கு ஏற்படும். ஓய்வெடுத்தாலும் இந்நோ தொடர்ந்துஇருக்கும். புயம்,



மாரடைப்பிலிருந்து மீண்டதும் ஓய்வு அவசியம்,

கழுத்து, தாடை தோற்பட்டை என்பவற்றிற்கும் நோ பரவலாம். அத்துடன் வயிற்றைப் பிரட்டல், வாந்தி, தலைச்சுற்று, மூச்சிளைப்பு, அதிக வியர்வை என்பனவும் ஏற்படும். இதனால் இருதயம் குருதியை உடலின் ஏனைய பகுதிகளுக்கு வழங்குவது தடைப்படும். சிலருக்கு சிலவேளைகளில் உடல் உழைப்பின் போது அல்லது உடற்பயிற்சியின்போது இருதய நோ சிறிது நேரத்திற்கு ஏற்பட்டு ஓய்வின்போது மறையும். தற்காலிகமாகத் தடைப்பட்ட குருதியோட்டம் ஓய்வின்போது சீராக, நோமறையும். இதனால் இருதய தசைகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை. இது அஞ்சைனா பெக்ரோறிஸ் (Angina Pectoris) என அழைக்கப்படும்.

மாரடைப்பு ஏற்படுவது எப்படி? அதன் விளைவுகள் என்ன?

ஒருவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டால் அவர் அதிர்ச்சி அடைவது வழக்கம்.

மாரடைப்பு எப்போது வரும் என எதிர்பார்த்துக் காத்திருக்க முடியாது. ஆனால் இருதய இரத்தக் குழாய் நோய்களை (Coronary Heart Disease) ஏற்படுத்தும் காரணிகளைத் தெரிந்துகொள்ள முடியும். அவற்றில் முக்கியமானவை புகைபிடித்தல், கட்டுப்படுத்தப்படாத உயர் குருதியமுக்கம், உயர்குருதி கொலஸ்திரோல்,உடற்பயிற்சிஇன்மை, அதிக உடற் பருமன், சலரோகம், சுகத்திற்கு ஒவ்வாத உணவுப் பழக்கங்கள், மன இறுக்கம், தற்கால வாழ்க்கையில் ஏற்படும் அலைச்சல் என்பன. இந்நோய் பரம்பரையாகவும், நடுத்தர வயது ஆணிற்கும் வருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம்.

மாரடைப்புக்கு அவசர மருத்துவ உதவி ஏன்?

மாரடைப்பு ஏற்படும் ஒருவருக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவது அவசியமாகின்றது. மாரடைப்பின்போது ஏற்படும் தாங்கமுடியாத இருதயநோ, இருதயத்தின்

- ந. மேனகா -
- பூ. கலைவாணி -
(யாழ். மருத்துவ பீட மாணவிகள்)

சுருங்கி விரியும் தன்மையில் ஏற்படும் மாற்றம் போன்றவை நோயாளிக்கு விபரீத விளைவை ஏற்படுத்தி விடலாம்.


மாரடைப்பின்போது நோயாளியின் குருதிக்குழாயில் ஏற்பட்ட குருதியுறைவைக் கரைப்பதற்காக ஸ்ரெப்ரோகைனேஸ் (Strpetokinase) என்னும் மருந்தை ஊசிமூலம் வைத்தியசாலைகளில்நோயாளிக்கு ஏற்றுகிறார்கள்.

முதலாவதாக நெஞ்சுநோவைக் குறைப்பதற்காகச் சிகிச்சை அளிக்கப்படும். இதற்காக "கிளிசறைல் ரைநைதிரேற்" (TNT) ஒன்று அல்லது இரண்டு மாத்திரையை நாவின்கீழ் வைக்க



கொடுக்கிறார்கள். இதற்கும் நோ குறையாதிருப்பின் மோபின் (Morphine) ஊசி மூலம் நாளங்களினூடு (I. V. Injection) மருத்துவ[illegible] கொடுக்கப்படும். [illegible] பிட்டு ஒட்சிசன் கலவை முகக் கவசத்தினூடு (Face Mask) வழங்கப்படும்.

இருதயத்தின் தொழிற்பாடு அற்றுப் போகும்போது அவர் நினைவிழந்து, நாடித்துடிப்பு அற்று, சுவாசம் நின்று போய்விடும். இது மிகவும் ஆபத்தான நிலையாகும். இதற்கு உடனடியாக அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் மூளைக்கு



சிகரெட் கூடவே கூடாது!

நாலிலிருந்து ஐந்து நிமிடங்களுக்கு குருதி செல்லாதிருப்பின் மூளைமீட்சியடைய முடியாத நிலையிற் தொழிற்பாடற்றுப் போய் செயலிழந்து விடும்.

பொதுவாக இருதயத் தொழிற்பாடு தடைப்படுவது இதயவறைகளின் தசைநார்களின் சீரற்ற அதிவேகத் துடிப்பினால் (Ventricular Fibrillation) ஆகும். இதைத் தடுப்பதற்கு பெரிய வைத்தியசாலைகளில் உயர் மின் அழுத்தம் நெஞ்சறைக்கு மேல் பிரயோகிக்கப்படுகிறது. இதனால்செயலிழப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த நோயாளியின் இருதயம் வழமையான துடிப்புடன் திரும்ப இயங்க ஆரம்பிக்கலாம்.

மாரடைப்பில் தப்பிப் பிழைத்த பின்னர் இருதயத்திற்கு என்ன நடக்கிறது?

மாரடைப்பு ஏற்பட்டதன் பின்னர் இருதயத்தின் பாதிக்கப்பட்ட பகுதியில் சில நாள்களில் அல்லது கிழமையின் பின்பு தழும்பு (Scar) ஏற்படுகிறது. இதனால இருதயத்திற்கு உடனடியாக அதிக வேலை கொடுக்காமல் ஓய்வெடுப்பது அவசியம். பெரும்பாலான நோயாளிகளின் இருதயம் வழமை நிலையை அடைந்து தொழிற்பாட்டை மேற்கொள்ளும். ஆனால் குறிப்பிட்ட ஒரு சில நோயாளரின் இருதயம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதால் இருதயத்தின் சுருங்கிவிரியும் தன்மை நிரந்தரமாகப் பாதிப்படைகிறது.

## ஓய்வும் தேகாப்பியாசமும்

மாரடைப்பின் தாக்கம் தீவிரமாக ஏற்படாத ஒருவர் சில நாள்களின் பின் அவரின் வழமையான வேலைகளை மேற்கொள்ள முடியும். இது ஏனைய உறுப்புக்களின் தொழிற்பாடு பாதிப்புறாமல் இருக்க உதவும். நோயாளிக்கு மூச்சிளைப்பு, வேறு ஏதாவதுஇந்தநோய் சம்பந்தமான அறிகுறிகள்—உதாரணமாக நெஞ்சுநோ—ஏற்படின் நீண்டகால ஓய்வெடுப்பது அவசியமானதாகும்.

மாரடைப்பு ஏற்பட்ட நோயாளி வழமையான வேலைகளை படிப்படியாக ஆரம்பித்தல் நன்று.

★ கட்டிலில் எழுந்து இருத்தல்.

★ கட்டிலைச் சுற்றி நடத்தல் அல்லது மலசல கூடத்திற்கு நடத்தல்.

★ மறுநாள் அல்லது இரண்டு நாள்களின் பின்னர் வாட்டில் நடத்தல்.

★ மேலும் ஐந்திலிருந்து ஏழு நாள்களின் பின்னர் படிக்கட்டுகளில் ஓரிரு படிகள் ஏறி இறங்குதல்.

மாரடைப்பின் தீவிரத்தைப் பொறுத்து நோயாளிக்கு நோயாளி மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டின் அளவுகள் மாறுபடும். நோயாளி வீடு சென்ற பின்னரும் நாளாந்த தொழிற்பாடுகளை படிப்படியாக அதிகரிக்க வேண்டும். அத்துடன் சிறிது காலத்திற்கு நோயாளி உடலுறவு கொள்வதை தவிர்த்தல் நல்லது. ஏனெனில் இந்நேரத்தில் நோயாளி உணர்ச்சிவசப்படுவதால் அவரின் குருதியமுக்கம், இருதயத் தொழிற்பாடு என்பனவும் அதிகரிக்கும். எனவே வைத்திய ஆலோசனையின் படி உடலுறவை மேற்கொள்ளலாம்.

நோயாளி வீடு திரும்பியவுடன் அவருக்கு மீண்டும் இந்த நோய் ஏற்படுமோ? என்ற ஏக்கம் ஏற்படுவதும் வழமை. இதனால் அவரின் மனநிலை பாதிக்கப்பட்டு விரைவில் கோபம் கொள்ளுதல், களைப்பு, பதற்றமடைதல், சில வேளைகளில் தற்கொலைக்கு முயற்சித்தல் போன்றவை ஏற்படலாம். இவற்றிலிருந்து நோயாளியைக் காப்பாற்ற அவருக்கு புனர்வாழ்வு பற்றிய அறிவுரைகளை வழங்கி தன் நம்பிக்கையையும் மன உறுதியையும் ஏற்படுத்தி அவரின் வழமையான செயற்பாடுகளைச் செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

## மீண்டும் பழைய வாழ்க்கைக்கு

நோய்வாய்ப்பட்ட ஒருவர் முறையான திருத்தங்களை வாழ்க்கை முறையில் கையாளுவதன் மூலம் மீண்டும் நோய் ஏற்படுவதைத் தடுத்து பழைய வாழ்க்கை முறைக்கு திரும்ப முடியும்.

## உணவு

இருதய நோய்களுக்கு ஆட்படக்கூடிய நபர்கள் தங்களுடைய உணவுகளில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இரண்டு விதத்தில் அவரின் உணவுப் பழக்கங்களை மாற்றியமைக்கலாம்.

(i) எல்லா இருதய நோயாளிகளும் உடல் நிறையை நியம அளவில் பேண வேண்டும்.

(ii) குருதியிலுள்ள கொழுப்புச்சத்தைக் குறைக்க வேண்டும்.

குருதியிலுள்ள கொலஸ்திரோலை குறைக்க சீரான உணவுகளை உண்ண வேண்டும். கொழுப்புச்சத்து மிகுதி

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 66

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | ■ | 6 |
| 7 | | | | ■ | 8 | 9 | |
| | ■ | | ■ | 10 | | | |
| 11 | | | 12 | | ■ | 13 | |
| | ■ | 14 | | ■ | 15 | | ■ |
| ■ | 16 | ■ | 17 | | | ■ | 18 |
| 19 | | 20 | | ■ | 21 | 22 | |
| 23 | | | ■ | 24 | | | |

சொற்சிலம்பம் இல. 66
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 11 — 09 — 1998

**இடமிருந்து வலம்**

1. இதைச் செய்வதாகக் கூறித்தான் ஆட்சிக்கு வருகின்றார்கள். 7. கிண்டல் செய். 8. கை. 10. ஏற்பட்ட நஷ்டம். 11. பொன் ஆபரணம். 13. உயிர்க் காணிக்கை. 14. பிடியைத் தளர்த்து. 15. நோக்கு. 17. சம்பவி. 19. விக்கிரகத்துக்குப் பின்னால் காட்சியளிக்கும் ஆபரணம். 21. சொல். 23. இயலாது என்று கூறுவதைக் குறிக்கும். 24. இறுக்கிப் பிடிப்பதில் இந்த ஐந்து வலிமை மிக்கது.

**மேலிருந்து கீழ்**

1. தண்டமாக விதிக்கப்படுவது. 2. வேறாக்கு. 3. கிண்டல் செய்யும் கவிஞன். 4. சுவை. 5. நாளைக் குறிப்பது. 6. சந்திரன். 9. இழுபடக் கூடியது. 10. கோணத்தை அளக்கும் அலகு. 12. நள்ளிரவு. 15. கெட்டுப் போ. 16. மேலிருந்து நீர் கொட்டுவது இங்கு. 18. வாளி 19. திகிலடை. 20. கடல். 22. ஓர் அசைச்சொல்.

### சொற்சிலம்பம் — 64 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. தேசவழமை. 5. புசி. 7. வித்தை. 8. தாபகம். 10. அனல். 11. ஆயத்தம். 12. சாம். 13. ராம். 14. மது. 15. வம்பன். 18. முதிரை. 20. கனிதல். 22. துருவுதல். 23. காலை.

**மேலிருந்து கீழ்**

1. தேவி. 2. சத்தியம். 3. வதை. 4. மைதானம். 5. புக. 6. சிம்மம். 9. பல. 10. அதமம். 11. ஆராவமுது. 12. சாது. 14. மன்னி. 15. வரைபு. 16. பகல். 17. இல்லை. 19. திரு. 21. தகா.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விபரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** ஞானலிங்கம் வைகுந்தன், 'பொலிகை', கொடிகாமம்.

★ **இரண்டாம் பரிசு:** செ. சிவகௌரி, கேலன்காம வீதி, கட்டுடை, மானிப்பாய்.

★ **மூன்றாம் பரிசு:** த. ஸ்ரீஸ்கந்தராஜா, ஆசிரிய ஆலோசகர், கோட்டக்கல்வி அலுவலகம், சாவகச்சேரி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 65 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

அன்பு எங்கே தேவை? அது எங்கே பலிக்கும்? அறம் புரிந்தவன் அன்புக்கு அடங்குவான். அறம்புரியாதவனை அன்பு அடக்குமா?

அறவழி நில்லாத துஷ்டனை அட்டாவடித்தனத்தால்தான் திருத்தலாம் என நினைப்பது சரியா? அடுத்தவன் சினமும் வீரமும் கொடும் மனமும் அன்புக்கு இளகுமா?

அறத்திற்கே அன்பு சார்ந்தது என நினைப்பவர் அறிவாரா மறத்திற்கும் அதுதான் துணையாகும் என்கிறார் வள்ளுவர்,

அறவழி நிற்பவன் — நடிப்பின்றி வாழ்பவன் — அன்பு வடிவமாகவே உலகோர் கண்களில் தென்படுவான். அவனே அன்பை செலுத்தவும் ஏனையோர் அன்பைச் சுலபமாகப் பெற்று விடவும் கூடியவன். இதில் சந்தேகமே இல்லை.

ஆனால் பஞ்சில் பாயாத அம்பும் யானையில் பாய்வது போல அன்பும் கொடியோரைத் துளைத்து வென்றுவிடும் என்பது தான் வள்ளுவர் வாதம்.

இரும்புப் பாரையால் உடைக்க முடியாத வலியபாறை பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும், தகர்ந்து வழி விடும்!

எனவே மறவழி நிற்பவனிடமும் அன்பையே ஆயுதமாக எடுத்துச் செல். வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல அன்பை சுலபமாக அவனிதயத்தே புகுத்தி விடு!

அவனை வழிக்குக் கொண்டு வரவும் அவ்வன்பே துணையாகும்.

*அறத்திற்கே அன்புசா ரென்பர்*
*அறியார்*
*மறத்திற்கும் அஃதே துணை*
— 0076

(அன்புடைமை)

— அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## [05 - 09 - 1998 முதல் 11 - 09 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வி | சனி | | |
| கே | இராசிச் சக்கரம் | | செ |
| சந் | | | சூ வெ புத ரா |
| | | | |

மாற்றம்:

அவிட்ட நட்ஷத்திரம் மகர இராசியில் சந்திரன் இருக்கும்.

அரசியலில் யுத்த அலைகள் தொடர்ந்து மக்களுக்குப் பலவித துன்பங்கள் கொடுத்தபடி இருக்கும். நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் தோன்றும். எதிர்க்கட்சிகள் மக்களின் செல்வாக்குத்தேடபல யுக்திகளைக் கையாளும். தொழிலாளர், மாணவர்களிடையேகருத்துவேற்றுமைகள் தோன்றலாம். இந்தியா தன் நிலையை உறுதிப்படுத்த முயற்சிக்கும். வடக்கும்—தெற்கும் பல கருத்துகளால் அபிப்பிராய பேதப் பட்டபடி இருக்கும். இயற்கை, செயற்கை அழிவுகள் தொடரும்.

மேற்கு உலகம்—மத்திய கிழக்கு நாடுகளில் பலவித தாக்கங்களைச் செய்தபடி இருக்கும். தீவிரவாதிகள் மேற்கு உலக நாடுகளில் பல அழிவுகளை முன்னெடுத்து — தொடர்ந்து செயற்படுவார்கள். பணமும், பதவியும் பலதையும் செய்யும். ஆனால் காலம்மாற, கருத்து மாற, பாவம்சூழ, சரித்திரமே மாறி, மாறி அமையும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.

**மேடம்:** எந்த விஷயத்திலும் மனத்துணிவுடன் ஈடுபட்டு நிறைவேற்றத் துடிக்கும் எண்ணம் உண்டு. வீடு மனைச் செலவு அதிகரிக்கும். புதிய திட்டங்களால் தொழில்ஸ்தானத்தில் அதிக மாற்றங்களை எதிர்பார்க்கலாம். திசை திருப்பங்கள் சிலருக்கு ஏற்படலாம். மறைமுகமான எதிரிகளால் பொருமல்கள் ஏற்பட்டாலும் உங்களை ஒன்றும் செய்துவிட முடியாது. நெஞ்சிக்கு நேரே இருந்து, அது [illegible]

கேட்டுவிடுவீர்களே! தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். காலம் பதில் சொல்லும் எனக் காத்திருக்காமல் விழுந்தால் நாம் தான் எழும்பி நடக்கவேண்டும் எனக் கருதிச் செயற்படுங்கள். பழவகைகளையும், இனிப்பு வகைகளையும் அளவுடன் உணவுடன் சேர்த்து வாருங்கள். அல்லது கைகால் பிடிப்பு, வாய்வு வருத்தங்கள், சல, மல பீடைகள் சிலரை வருத்த இடம் உண்டு. உஷ்ணபீடைகள், கைகால் சொறி, வயிற்று நோ என சிறு, சிறு ரோகங்களால் வருந்த இடம் உண்டு.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

**இடபம்:** என்ன ஐயா கவலை? மனிதம் தேவையைப் பொறுத்துத்தானே உங்களை நாடி வருவதும் போவதுமாக இருக்கும். பொறுமையாக இருக்கவும். வலிமை—உறுதி நிலையிலிருந்து உங்களை எவரும் அசைத்துவிட முடியாது. காத்திருந்து காரியம் ஆற்றுவீர்கள். இனஜனங்களுடன் கலகலப்பு, சங்கீத ஈடுபாடு

கைக் கொண்டு செய்யவும் எழுத்தில் கொடுத்து மாட்டிக்கொள்ள வேண்டாம். கைகால், நாரி, அடிவயிறு நோக்கள் வரலாம். அடிக்கடி வாய்வுத் தொல்லையும் களைப்பு, எதிலும் ஒரு சலிப்பு என்பன ஏற்படச் செய்யும். மன ஆறுதலுக்கு இறைவழிபாடு முக்கியமானதாகும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

**கடகம்:** உங்கள் பலவீனம் உங்களுக்குத் தெரியாதா? ஏன் அடிக்கடி வேதனைப்படுகிறீர்கள்? கிடைக்காத ஒன்றை நாடி எப்பொழுதும் போராடும் சுபாவம் உங்களுக்கு இருக்கும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளுக்குப் பயப்படும் நிலை ஏற்படும். அதிக லீவுகள் எடுக்காது பக்குவமாகநடந்து கொள்ளுங்கள். உலகில் பேரும் புகழும் இருந்தால் மட்டும் போதுமா? வாழ்க்கையை ரசித்து அனுபவிக்க வேண்டாமா? என அடிக்கடி சிந்திப்பீர்கள். சிந்திப்பதால் மட்டும் பலன் வந்து விடுமா? துணிந்து செயற்படுங்கள். நெஞ்சுநோ, ஜீரண உறுப்

# சோதிட சஞ்சீவி

அதிகமுண்டு. தொழில் ஸ்தானத்தில் திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாளார் உதவிகள் செய்வார்கள். அடிக்கடி அதிகநீர்வகைகளைப் பருகி வருவீர்கள். நெஞ்சுநோ, சிறுநீரக வியாதி, வாய்வுத்தொல்லை என்பன ஏற்படச் செய்யும். இடமாற்றங்களையும் — பிரயாணங்களையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

**மிதுனம்:** வேகமாகவும், விரைவாகவும் செயற்பட்டபடி இருக்கிறீர்கள். சொல்வாக்கால் செல்வாக்கு அதிகரிக்கும். தொழில்ஸ்தானத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். இருப்பினும் உங்களை நம்பிக் காசு தரமுடியாது. தண்ணிபட்டபாடு செலவுகள் செய்வீர்கள். பார்க்கும் பொருள் எல்லாம் தேவையாக இருக்கும். அடிக்கடி உங்களை அழகு படுத்துவதும், இடங்களை மாற்றிக் கொள்ளுவதும் சகஜமாகும். இருப்பினும் எதிர்ப்பாளாருடன் நிதானமாக நடந்து கொள்ளவும். அல்லது வீண் பழி கேட்க நேரிடும். எந்த விஷயங்களையும் செல்வாக்

புக்களில் வருத்தம், சலவருத்தங்கள், சிரசுப் பகுதியில் வருத்தம், நாரிநோ என்பன சிலரை வருத்தும். உணவு விஷயத்தில் நிதானமாக இருக்கவும். உறவினர்களுடன் கொடுக்கல் வாங்கலில் நிதானமாகச் செயற்படவும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன்.

**சிங்கம்:** அடிக்கடி மனக் குழப்பமா? எதற்கும் அசையாத நீங்களே சலனப்படப்

## மகாதேவா ஜோதிடம்


பார்க்கிறீர்கள். இக்காலம் கொஞ்சம் நிதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் பொருள் விஷயங்களில் நிதானமாக இருக்கவும். என்ன பேசாமல் இருக்கிறீர்கள் என எண்ணி உங்களுடன் சிலர் சீண்ட முற்படலாம். சிறிப்பாருங்கள். ஆனால் மற்றவர்களுக்கு நஷ்டம் விளைவிக்காதீர்கள். அதன் பின்பு அவர்கள் விலகி, உங்களை மதித்து நடப்பார்கள். தொழில் பீடத்தில் மாற்றங்கள் சகஜமாகும். எதிர்ப்பாளருடன் நிதானமாக நடவுங்கள். நெஞ்சு நோ, வயிற்று நோ, வாய்வுத்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச நூலகம்

# கண்டுபிடியுங்கள்!




பைன் (ஊசி) மரத்தின் ஆறு பழங்களையே மேலே காண்கின்றீர்கள். அதில் இரண்டு மட்டும் ஒரே தோற்றமுடையவை. அவற்றைக் கண்டு கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.




மேலே எட்டு சுண்டெலிகள் உள்ளன. அவற்றில் ஒரேமாதிரித் தோற்முடையவை எவை? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## கப்பல் நல்ல கப்பலாம்!

கப்பல் நல்ல கப்பலாம்
கடலில் செல்லும் கப்பலாம்
அக்கரைக்குச் செல்லவே
ஆட்கள் ஏறும் கப்பலாம்

சண்டை செய்யும் கப்பலாம்
சாமான் ஏற்றும் கப்பலாம்
கப்பல் தன்னில் பலவிதம்
கடலின் மீது திரியுமாம்

தூரதேசம் செல்லுமாம்
துறைமுகத்தில் தங்குமாம்
கலங்கரை விளக்கினால்
கரையைக் கண்டு சேருமாம்.

கப்பல் ஏறி உலகெல்லாம்
காண வேண்டி ஆசையோ
செல்வதற்கு அனுமதிச்
சீட்டு எங்கே காட்டிடு?

## தள்ளு வண்டி

தள்ளுச் சக்கர வண்டி — அது
தம்பி ஓட்டும் வண்டி!
மெள்ள நகரும் வண்டி — அது
மணியடிக்கும் வண்டி!
ஒற்றைச் சக்கர வண்டி — அது
உறுதியான வண்டி!
முற்றம் முழுவதும் ஓடும் — அது
மாற்று ராகம் பாடும்!
கள்ளக் குறிச்சி வண்டி — அது
கண்ணைக் கவரும் வண்டி!
தள்ளு மாடல் வண்டி — அதால்
தரையெல்லாம் தொண்டி!

— க. கிருஸ்ணசாமி —


# ஊன் உண்ணும் கழுகு

கழுகு வஞ்சகக் குணமுடையது. மேலும் இது பிற உயிரினங்களைத் துன்புறுத்திக்கொண்டே இருக்கும் இயல்புமுடையது. எனவேதான், பிறரைத் துன்புறுத்திக்கொண்டே இருப்பவரைக் 'கழுகு' என்கிறார்கள்.

இரக்கமற்ற கொடிய பார்வையுடையவரையும் 'கழுகுப்பார்வை' உடையவர் என்று சொல்லும் வழக்கம் உண்டு.

கழுகு பருந்தின் இனத்தைச் சேர்ந்தது. பருந்தினும் பெரிய உருவமுடையது.

கூளி, ஆலா என்ற பல பெயர்களில் பல வகைகளில் கழுகுகள் உள்ளன, பிணந்தின்னிக் கழுகுகள் என்றும் ஒரு வகை உள்ளது.



இந்தக் கழுகுகளே பறவைகளுள் இயற்கைத் தோட்டிகள். இவை வானத்தில் — பறந்த படியே வட்டமிட்டு கூரிய நோக்குடன் பூமியைச் சோதிக்கும். தமது இனத்தாரின் போக்குவரவையும் கவனித்திருக்கும். ஒரு செத்த விலங்கின் இருப்பை அறிந்து ஒரு கழுகு கீழிறங்கினால், இதைக் கண்டு பல கழுகுகளும் கூடி அங்கு இறங்கி விருந்து கொள்ளும்.

**பிராணிகள் உலகம்**

கழுகுக் கூட்டம் ஒரு பெரிய விலங்கின் உடலை சிறிய நேரத்தில் கிழித்துப் புசித்துக் காலி பண்ணிவிடும். வெள்ளெலும்புகள் மட்டுமே மிஞ்சும்.


சில வெண்மையான கழுகுகள் பருந்தளவு உருவமுடையவை. அவற்றின் அலகு மஞ்சள் நிறமாக இருக்கும். கழுகின் கழுத்திலும், தலையிலும் மயிர் இராது. பெரும்பாலும் கழுகுகள் கருஞ்சாம்பல் நிறமுடையனவாகவே இருக்கும்.

கழுகுகளின் கண்கள் சிறியவை. எனினும் மிக நுட்பமான பார்வையுடையவை. நீண்ட தொலைவு பார்க்கக்கூடிய ஆற்றல் பெற்றவை.

கழுகின் கால்களும், நகமும், அலகும் வன்மையானவை. பெரிய கழுகுகள் ஆட்டுக்குட்டியையும் தூக்கிச் செல்லும் ஆற்றலுடையவை. கழுகின் கால்களுக்கு அவ்வளவு வலிமையுண்டு. சில கழுகுகள் சிறு குழந்தைகளையும் தூக்கிச் சென்றுவிடுமாம். கழுகின் அலகு கூர்மையாக இருக்கும். இது எலும்பில் இணைந்திருக்கும் ஊனையும் கொத்தி இழுக்கும் தன்மையுடையது.

பிணமென்றால் கழுகுக்குப் பெருவிருப்பம். எங்கேயாவது நாயோ, நரியோ இறந்து கிடந்தால் கழுகு மோப்பத்தாலேயே அதனை அறிந்து கொள்ளும் என்று கூறுவர்.

சிலர் கழுகுகளைப் பிடித்து அடித்துத்தின்பார்கள்.




## தகுதி இருந்தால் மதிப்பு!

"ஏன் எல்லோருக்கும் கேட்கும்படி இவ்வளவு பயங்கரமாகக் கர்ஜிக்கிறாய்?" என்று சிங்கத்தைக் கேட்டது அங்கு வந்த ஒரு புலி.

"என்னைக் காட்டுக்கே அரசன் என்று எல்லோரும் ஒப்புக்கொள்வதே நான் அப்படிக் கர்ஜனை செய்து என்னை விளம்பரப்படுத்துவதால்தான்" என்று பதில் சொன்னது சிங்கம்.


புதரின் மறைவில் மறைந்திருந்த முயல் இந்த இரண்டு விலங்குகளின் பேச்சையும் கேட்டது. தானும் சிங்கத்தைப் போலக் குரலெழுப்பித் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அது நினைத்தது.

தான் இருந்த இடத்தில் இருந்தபடியே பெரிதாகக் குரலெழுப்பியது முயல். அந்த வழியே வந்த ஓநாய் குரல் வந்த திக்கில் பாய்ந்து முயலைப் பிடித்துக்கொண்டு உண்ணத் தொடங்கியது.

[illegible] "தகுதி இருந்தால் விளம்பரம் செய்தால் மதிப்பு உண்டு. இல்லையேல் எனக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்" என்ற ஞானம் பிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை விளையாட்டு




மேலேயுள்ள பலூன் மனிதன் வைத்துள்ள பலூன்களில் சில எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை வைத்துக் கொண்டு எழுபது சொற்களை உங்களால் உருவாக்க முடிகின்றதா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## விடை தெரியுமா?

1. ஒருவர் தபாற்கந்தோரில் மூன்று ரூபா முத்திரைகளும் ஐந்து ரூபா முத்திரைகளுமாக 20 முத்திரைகள் வாங்கிக் கொண்டு நூறு ரூபாவைக் கொடுத்தார். அவருக்கு 26 ரூபா மிச்சமாக கொடுக்கப்பட்டது. அவர் 3 ரூபா முத்திரைகள் எத்தனை, 5 ரூபா முத்திரைகள் எத்தனை வாங்கினார்?

2. மூன்று இலக்கங்கள் உண்டு. மூன்று இலக்கங்களையும் கூட்டினாலும் மூன்று இலக்கங்களையும் பெருக்கினாலும் விடை ஒன்றே. அந்த இலக்கங்கள் எவை?

3. ஒரு படியாத விவசாயி புகையிலைக் கன்று நட, தரையை ஆயத்தம் செய்கிறான். அத்தரையில் நீளப்பக்கம் 45 கன்றுகளும் அகலப் பக்கம் 40 கன்றுகளும் வந்தன. அத்தரையில் மொத்தமாக எத்தனை புகையிலைக் கன்றுகள் நடலாம் எனக் கேட்கிறார். விடையைச் சொல்லுங்கள்.

4. இருபது அப்பங்களை 20 பேருக்கு பின் வரும் விகிதம் பங்கிடவேண்டும், ஒரு ஆணுக்கு 4 (நான்கு) அப்பம். ஒரு பெண்ணுக்கு அரைவாசி (அரை) அப்பம். ஒரு சிறுவனுக்கு கால்வாசி அப்பம். இவ்விகிதம் பங்கிட்டால் ஆண்கள் எத்தனைபேர்? பெண்கள் எத்தனைபேர்? சிறுவர் எத்தனை பேர்?

—ம. மயூரன்—

(விடை XI ஆம் பக்கத்தில்)

## நொடிப்பொழுது

1. கீழே கிடங்கு. கிண்டினால் மேலே தொண்ணூறு முட்டை. அது என்ன?

2. வெள்ளைக்காரன் வந்தான். சேட்டைக் கழற்றினான். புற்றுக்குள் புகுந்தான் அவன் யார்?

3. அவனை மிதிப்பேன்; அவனை விசாரிப்பேன். ஆனால் என்னை அவன் மிதிப்பதும் இல்லை; விசாரிப்பதும் இல்லை அவன் யார்?

4. வட்ட வட்டக் குருவி. வாலில்லாத குருவி. புல்லும் நெல்லும் தின்று கடைக்குச் செல்லும் குருவி. அது என்ன?

5. தொப்பென்டு விழுந்தான்; தொப்பி கழன்டான். அவன் யார்?

6. நீட்டுப்பாயன். சுத்தச் சுத்த முடியாதாம். அது என்ன?

7. வெள்ளைக் குதிரையும் கறுத்தக்குதிரையும் போகுமாம். கறுத்தக் குதிரை கடலில் விழுத்திடுமாம். அது என்ன?

8. உரிச்ச கோழி சந்தைக்குப் போகுமாம். அது என்ன?

—த. கீதகரன்—
(ஆண்டு 4, ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியலயம்.)

### விடைகள்

1. தென்னைமரம். 2. வாழைப்பழம். 3. வீதி. 4. நாணயம். 5. பனம்பழம். 6. வீதி. 7. உழுந்து. 8. தேங்காய்.

# அன்பு வனம்...

(V ஆம் பக்கத் தொடர்)

யும் மனைவியிடம் கொண்டு போய் கொடுத்து விட்டுத் தான் வந்தார் என ஊரார் கதைத்தார்கள். பின்னர் விதானைமாமா ஊருக்குத் திரும்பவில்லை. எங்கள் ஊரில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தங்கி விட்டார்.

விதானைமாமாவை கண்டால் நான் தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் போய் விடுவேன். நிமிர்ந்தே பார்ப்பதில்லை. விதானை மாமாவும் என்னிடம் கதைப்பதில்லை. என்னில் சில வேளை எனது அதிகப் பிரசங்கித்தனத்தால் வெறுப்பு ஏற்பட்டிருக்கலாம்.

நாள்கள் நகர்ந்தன. எதிர்பாராத விதமாக என்னுடைய வாழ்வில் விதி விளையாடியது. அடுத்தடுத்து ஏற்பட்ட நோய் காரணமாக ஐயாவையும், அம்மாவையும் நான் இழக்க வேண்டியதாயிற்று; அனாதையானேன். ஊரில் நெருங்கிய உறவினர்கள் இல்லை. இருந்தாலும் என்னை ஆதரிக்கும் வசதி அவர்களிடம் இருக்கவில்லை.

வாழ்வின் இருள்மையை அப்போதுதான் உணர்ந்தேன். சாப்பாடு, படிப்பு எல்லாம் அப்போதுதான் கஷ்ரமாகியது. செத்துப் போகலாமா? என்றும் யோசித்தேன்.

தோப்பு மரம் ஒன்றில் சாய்ந்தபடி அழுதுகொண்டிருந்தேன். என்னுடைய தோளில் ஆதரவாய் ஒரு கை விழுந்தது. நிமிர்ந்து பார்த்தேன். விதானை மாமா நின்று கொண்டிருந்தார்.

''...என்னோடைவா தம்பி. நான் உன்னைப் படிப்பித்து ஆளாக்கிறன்...'' எனக்கு அந்தரமாக இருந்தது.

''...இல்லை மாமா நான்... வரேல்லை''

''...இல்லைத்தம்பிநானும் தனிய. எனக்குப் பிள்ளை மாதிரி. வந்து என்னோடை இரு...''

விதானைமாமா என்றமனிதனை அப்போதுதான் நான் மனிதனாக உணர்ந்துகொண்டேன்: இவரையா இவ்வளவு துன்பப்படுத்தினேன்? அவரை கட்டிக்கொண்டு அழவேண்டும் போலஇருந்தது. அவர் வித்தியாசமாக நினைக்கா விட்டாலும் மனதுக்குள் மன்னிப்புக்கேட்டுக்கொண்டேன்.

விதானை மாமாவின் ஆதரவுடன் நான் வாழத் தொடங்கினேன். எனக்கு எல்லாம் விதானை மாமா என்றாகி விட்டது. சமையல் எல்லாம் விதானைமாமாதான். எனக்கு சாப்பாடுபோடுவது, என்னுடைய உடுப்புக்கள் தோய்ப்பது, குளிப்பாட்டி விடுவது எல்லாம் விதானை மாமாதான். ஆறாம் வகுப்புக்கு ரவுண் பள்ளிக் கூடம் போக புதுச்சைக்கிளும் வாங்கித் தந்தாயிற்று; விதானை மாமாவும் நானும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்தோம். எனக்கு அவரும், அவருக்குநானுமாக உதவியாகஇருந்தோம். நாள்கள் வேகமாக நகர்ந்தன...

விதானைமாமாவின்ஆசைப்படி பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு முதலாம் திகதியும் தவறாமல்விதானை மாமா பணம் அனுப்பி விடுவார். கடிதங்கள்நிறைய புத்திமதிகளுடன் வரும்.

அன்றும் ஏதாவது கடிதம் வந்ததா? என்றுபார்க்க கடிதப் பெட்டிக்கு வந்தபோது அவசர தந்தி ஒன்று வந்தது.

''...விதானை மாமா கவலைக்கிடம்: உடன் வரவும்...''

எல்லாம் விட்டு விட்டு ஊருக்கு ஓடி வந்தேன். விதானைமாமா முந்திக் கொண்டு விட்டார். இரண்டு நாள் இருமல் அவரை பலி கொண்டு விட்டது: கதறிக் கதறி அழுதேன்.

''...விதானைமாமா நீங்கள் தெய்வம்......மிருகத்தை மனிதன் ஆக்கினீங்கள்...''

என்னால் தாங்கமுடியாமல் இருந்தது. எங்கோபோக வேண்டிய என்னை மனிதனாக்கும் எண்ணம் விதானை மாமா உங்களுக்கு எப்படி வந்தது என்பதனை என்னால் விளங்கமுடியவில்லை.

விதானைமாமாவுக்கு நான் ஒரேமகன். நானே கொள்ளி போட்டேன். மூன்றுதரம் பானை சுமந்து சுற்றி வந்தேன். விழுந்து கும்பிட்டேன்; அவருடைய முகத்தை பார்த்தேன். அமைதியாய் உறங்குவது போலஇருந்தது: உறங்குங்கள். மாமா......ஒரு தெய்வமாக உறங்குங்கள்...

விறகு சூழ்ந்து எரியத் தொடங்கியது. வீதிக்கு வந்து திரும்பிப்பார்த்தேன். அந்திச் சூரியன் மறையும் நேரம். சுவாலைப் புகை வானில் எழுந்தது. சூரியன் மாதிரித்தான்......மாமா நீங்களும் உங்களுக்கு வாழாமல் எனக்காய் வாழ்ந்தீர்கள்:

நான் கட்டியிருந்த நாலு முழம்சாற்றில் படபடத்தது. மாமா ......அடுத்த பிறப்பில் நான் உங்கள் மகன்...நீங்கள் என் தகப்பன்...என்று பிறக்க வேண்டும்...... இதே போல் வாழவேண்டும்...மாமா, உங்களைப்போல் மனிதர்கள் மண்ணில் பிறப்பது குறைவு. பிறந்தால் அவர்கள் தெய்வம்...மாமா உங்களுக்கு கோவில் கட்டி கும்பாபிஷேகம் எப்போது செய்யப்போகின்றேன்?

(யாவும் கற்பனை)

★

# வாய்ச்சொல்....

(V ஆம் பக்கத் தொடர்)

நாகமுத்தரின் பார்வை பதிந்தது.

''எடே, விக்நேசு,... என்னடா தம்பி நடந்தது?'' என்றார். ஒருவித அதிகாரத் தொனியில்.

'' நாங்கள் படுத்ததுக்குப் பிறகு ஆரோ ஜன்னலுக்குள்ளாலை 'டோச் அடிச்சு துவக்கைக் காட்டி, நாட்டி, நாங்கள் ஆமி... செக் பண்ண வந்திருக்கிறம் கதவைத் திறவுங்கோ! எண்டு சிங்களத்திலையும் தமிழிலையும் சொன்னாங்கள். அம்மா பயத்திலை உடனை கதவை திறந்து போட்டா. மூண்டுபேர் திடுதிடெண்டுஉள்ளுக்கு வந்தாங்கள். ஒருதன் துவக்கை என்ரை காதுக்குள் வைவைக்க மற்றவங்கள் அம்மாவையும் சசிய்க்காவையும், சுசியக்காவையும் வெருட்டிப் போட்டிருந்த நகையெல்லாத்தையும் எடுத்துக்கொண்டு, மேலை கிடந்த சிவர் மணிக் கூட்டையும் கழட்டிக் கொண்டு 'பத்து நிமிசத்துக்கு ஆரும் கத்தக்கூடாது' எண்டு வெருட்டிப் போட்டுப் போட்டாங்கள். எங்களுக்கு நேரமும் தெரியேல்லை; ஒண்டும் தெரியேல்லை. குத்துமதிப் கொஞ்ச நேரம் பேசாமலிருந்து போட்டு பிறகு கத்தினாங்கள்'' என்று ஒருவாறு கூறிமுடித்தான் விக்கிநேஸ்.

''உன்னைப்போலை இளந்தாரிகளெல்லாம் இப்பிடிப் பயந்துநடுங்கிக் கொண்டிருந்தால் கள்ளன்ரை காட்டிலை எப்பவும் மழைதான்'' என்று கூறியவாறு திரும்பினார் நாகமுத்தர்.

அடுத்த வீட்டு அன்னலிங்கமும் ஆனந்தமூர்த்தியும் ஆளுக்கொரு தம்புத் தடியுடன் வந்துகொண்டிருந்தனர்.

''என்னடாப்பா, தம்புத்தடியும் கையுமாய் எங்கை நிண்டு வாறீங்கள்?'' என்றார் நாகமுத்தர்.

''கள்ளனைத் தேடிக் கொண்டு உப்பிடியே கருணேஸ்வரன் வீடு மட்டும் போய்ப் பாத்தம்; ஒருதரையும் காணேல்லை. அங்காலை மெயின் றோட்டுக்குள்ளை எங்கையெண்டு இறங்கிறது? அதுதான் திரும்பி வந்திட்டம்'' என்றான் அன்னலிங்கம்.

''அவன் மட்டும் கிடைச்சிருக்கவேணும், தம்பு தும்பாய்க் கிழிச்சிருப்பம்'' என்று கர்ச்சித்தான் ஆனந்தமூர்த்தி.

''சரி சரி, கிழிச்சது காணும். தம்புத்தடியைக் கொண்டுபோய் ஒழுங்காய் வீட்டை வையுங்கோ. நாளைக்குக் கூட்டவேணும்'' என்று கூறியவர் 'அலவாங்குப் பிறப்புக்கள்' என்று தனக்குள்ளே கூறியவாறு சற்று அப்பால் நின்றுகொண்டிருந்த அப்பாத்துரையை நோக்கி நடந்தார்.

''அப்பா, உவங்களைப் பார்த்தால் கோழி திருடின கள்ளர் மாதிரிக் கிடக்குது. உவங்களெங்கை கள்ளனைப் பிடிக்கப் போறாங்கள்?'' என்றார் சற்றே தணிந்த குரலில் 'அது சரி' என்றார் அப்பாத்துரை சிரித்தவாறு.

''அப்ப நான் கலியாணம் கட்டின நேரத்திலை கொஞ்ச ஆட்டுக்கள்ளர் பெரிசாய் அட்டகாசம் பண்ணித் திரிஞ்சவங்கள்'' என்று ஆரம்பித்தார் நாகமுத்தர். கதை கேட்கும் ஆர்வத்தில் தலையசைத்தார் அப்பாத்துரை.

''அப்ப நான் பொலிசு வேலைக்கு அப்பிளிக்கேசன் போட்டிட்டிருந்த காலம்'' முத்தர் தொடர்ந்தார்.

''என்ரை வீட்டையும் ஒரு பெரிய கிடாய் நிண்டது. ஒருநாளிரவு படுத்திருக்கிறன், ஆட்டிப்பக்கம் ஏதோ சத்தம் கேட்டுது. கவனிச்சுக் கேட்டன். ஆடும் ஒரு மாதிரி வெருண்டு கத்திச்சுது; எனக்கு விளங்கீட்டுது. படாரென்றெழும்பி, பாயைக் காலாலை தள்ளிப்போட்டு 'ஆரடா அவன் ... யிலை?' எண்டு ஒரு குரல் குடுத்தன்; அவ்வளவுதான் என்று சற்று நிறுத்தினார் நாகமுத்தர்.

அப்பால் நடந்ததை அறியும் ஆவலோடு வாயைப் பிளந்தபடி நின்றார் அப்பாத்துரை:

நாகமுத்தர் தொடர்ந்தார்.

''வந்த கள்ளன் கிடாயையும் அவிட்டுக்கொண்டு வறுகிட்டான். பிறகு அந்தப்பக்கம் வரேல்லை.'' என்று கூறி முடித்தார்.

''அப்பிடியெண்டால்பிறகு நீங்கள் ஆடு வளக்கேல்லையோ மாமா'' என்றான் அருகில் நின்ற அப்பாத்துரையின் மூத்த மகன்.

''இல்லையடா தம்பி அப்ப ஆவரங்காலிலை ஒரு விலாசமான சாத்திரி இருந்தவன். அவனிட்டைப் போய் கேட்டன், ஆடு போயிருக் காட்டில் என்ரை ஆவி போயிருக்குமெண்டு சொன்னான். அதோடை உங்களுக்கு ஆட்டுப் பொருத்தமில்லை. வேணுமெண்டால் நாய், பூனை வளர்க்கலாம் எண்டும் சொன்னான். அப்ப விட்டதுதான். பிறகு ஆட்டை நினைச்சுக்கூடப் பார்க்கேல்லை'' என்று நாகமுத்தர் கூறிமுடிக்கவும் வீட்டிலிருந்து அன்னம்மா பலமாய் கூப்பிடவும் சரியாயிருந்தது:

''இஞ்சாருங்கோ, நீங்கள் உங்கை விடுப்புப் பார்க்க உந்தக் கள்ளன் இஞ்சை வந்திட்டானென்டால் நாங்கள் என்ன செய்யிறது? பேசாமல் வாங்கோ கெதியாய்'' என்றுகத்தினாள் அன்னம்மா.

''அப்பப்பா அன்னத்துக்கும் மூளை அற்புதமாய் வேலை செய்யிது'' என்றவாறு வீட்டைநோக்கி நடந்தார் நாகமுத்தர்.

''இந்தக்காலத்துப் பொடியளுக்கொல்லாம் சும்மாய் றோட்டு றோட்டாய் பெட்டையளுக்குப் பின்னாலை சுத்தத்தான் தெரியுமே யொழிய வேறைஒரு இழவும் தெரியாது'' என்றவாறு படிகளைத் தாண்டி வீட்டுக்குள் ... நுழைந்து கொண்டார்.

(யாவும் கற்பனை) ★

# இந்த வார இராசி....

(VIII ஆம் பக்கத் தொடர்)

தொல்லை, உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கலாம். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி.

கன்னி: உங்கள் குடும்பத்தில் அதிகஅக்கறைகொண்டு செயற்படுவீர்கள். ஆயினும் உங்கள் அவசர புத்தியால் அடிக்கடி மிகவும் ஆத்திரம் மேலோங்கி பிறரைப்பேசி விடுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஒவ்வற்ற நிலை ஏற்படும். எதைப்பற்றியாவது அடிக்கடி கவலைப்பட்டபடி இருப்பீர்கள். கவலைகளை யாரிடமாவது பேசி ஆறுதல் பெறுங்கள். அதனால் மனச்சாந்தி பெறுவீர்கள். நரம்புப் பலவீனம், வாத, வாய்வு வருத்தங்கள், கை கால் உழைவு, நாரிநோ, நெஞ்சுச் சளி, காலில் காயம் என்பன வரலாம். வரும் காலங்களில் தகுந்த வைத்தியம் செய்து கொள்ளுங்கள். சனீஸ்வரன் தாக்கமாக இருப்பதனால் அடிக்கடி சிலர் உங்களைக் குறைகூறித் திரிவார்கள் குல தெய்வவழிபாடு செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்; வியாழன், வெள்ளி.

துலாம்: நீங்கள்திட்டமிட்டு எதையும் செயற்படுத்த முடியாது. தொழில் ஸ்தானத்தில் ஓய்வில்லாமல் அடிக்கடி அங்குமிங்குமாக ஓடி ஓடித் திரிவீர்கள். உங்கள் புத்திநுட்பத்தால் இக்காலத்தில் பல காரியங்களை அடக்கமாக இருந்து சாதிப்பீர்கள். வயிற்றில் வருத்தம், கிருமித்தாக்கம், விறைப்பு, தலைவலி, கைகாலில் பிடிப்பு, சீதோஷ்ண நிலைகளால் உடம் நிலைபாதிப்பு என்பன ஏற்பட இடம் உண்டு. நண்பர்களை நம்பிச்செயற்படாதீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் மிக அவதானமாக இருக்கவும்; அல்லது உங்களுடன் இருந்தவர்கள், தெரிந்தவர்களே உங்களைப் பற்றி பலவிதமாகப் பேசித் திரிவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன்.

விருச்சிகம்: நீங்கள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் மிகவும் கட்டுப்பாடாகவும், ஊக்கமாகவும் செயற்பட்டபடி இருப்பீர்கள். உங்களை எவரும் லேசில் அறியமுடியாதபடி நடந்து பல விஷயங்களை அறிந்துகொள்வீர்கள். உங்களுக்கு சக்தி, புத்தி, யுத்தி என்பன அதிகம். ஆயினும்அதிகவேகத்தில், ஆத்திர மேலீட்டால் எதையும் நிதானத்துடன் செய்து முடிக்க முடியாத நிலை ஏற்படும்; ஓய்வு அடிக்கடி முக்கியமாகும். நெஞ்சு வலி, இடுப்பு வலி, வாய்வு வருத்தங்கள், மல, சல வருத்தங்கள், கல்லீரல் நோய் என்பன சில வருத்தும். உடல் நிலையைக் கவனித்துக் கொள்ளவும். சிலர் ஆஸ்பத்திரிக்கும், சிலர் ஆலயங்களுக்கும் பலர் இரண்டும் அற்றநிலையில் அங்கும் இங்கும் சென்று வந்தபடி இருப்பார்கள். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்; புதன் (பிற்பகல்), வெள்ளி.

தனுசு: உங்களுக்கு கௌரவப்பிரச்சினை ஒன்று பெரிதாக தெரியப் போகின்றது. எதிலும் ஏட்டிக்குப் போட்டிகள் ஏற்பட்டபடி இருக்கும் காலமாகும். எதையும் சமாளித்து விலக்கி நடந்து கொள்ளவும். அதனால் மாற்றங்கள் கொடுக்கும்; தொழில் ஸ்தானத்தில் நண்பர்கள், மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். ஆயினும் இடைக்கிடை குழப்பநிலை ஏற்படத்தான் செய்யும். பொருளில் கவனமாக இருக்கவும். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்பட்டு மனவேதனைகளைக் கொடுக்கும். எதையும் மனதில் அதிக காலம் மறைத்து வைத்திருக்க மாட்டீர்கள். இடுப்புவலி, கைகால் உளைவு, வயிற்று நோ, வாய்வுத் தொல்லைகள் கொடுத்தபடி இருக்கும். வைத்திய உதவிகளால் நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

மகரம்: உங்களுக்கு எதிலும் ஒரு போட்டித்தன்மை வீட்டிலும் தொழில்ஸ்தானத்திலும் ஏற்படும். எந்த அலுவல்களையும் மெல்ல, மெல்ல செய்துவரவும்; அதனால் நன்மைகள் கொடுக்கும். எதிலும் திட்டமிட்டுப் படிப்படியாக முன்னேறி வரவும். சகோதரங்களுக்கு மாற்றங்கள் கொடுக்க இடம் உண்டு. வயிற்றுக்கோளாறு, மூட்டு வலிகள், அடிக்கடி மனக்குழப்பங்கள், நரம்புச் சோர்வு, வாய்வுப் பிடிப்பு, உஷ்ண பீடைகள் என்பன கொடுத்தபடி இருக்கும்; வீடு, மனைக்கு அதிக செலவுகள் சிலருக்கு ஏற்படலாம், இடமாற்றங்கள், பிரயாணங்கள் உங்களுக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுக்க இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்;

கும்பம்: எந்த விஷயத்திலும் நிதானமாக, அழகு, ஆறுதல் என்ற வார்த்தைகளைப் பிரயோகித்தபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் பலவித கருத்துக்களால் அடிக்கடி மனம் குழம்பியபடி இருப்பீர்கள். அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும். சந்தர்ப்பங்களைப் பாவித்து புகழும்—பதவியும் தேட முற்படும் காலமாகும். உங்களைச்சுற்றி உள்ளவர்கள் உங்களுக்குச் சாதகமாகக் கதைக்காமல் விட்டால் தனிமையை அடிக்கடி நாடி ஓடுவீர்கள். எந்த விஷயங்களையும் ஆழமாகச் சிந்திக்கும் உணர்வுகள் அடிக்கடி ஏற்பட்டபடி இருக்கும். எதையும் பின்போடாமல் உடனுக்குடன் செயற்படுங்கள். நன்மைகள் அதிகரிக்கும்; நரம்புச்சோர்வு, கைகால்வலிகள், நாரிநோ, வாய்வுக் குழப்பங்கள், உள் உறுப்புக்களால் தொல்லைகள் என்பன ஏற்படச் செய்யும். இடமாற்றங்கள் மன ஆறுதலைத் தரும்;

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

மீனம்: எதையும் தாங்கும் இதயம் வேண்டும். இரட்டை மனப் போக்கு அடிக்கடி ஏற்படும்; சிலரைப் பேசிவிடுவதனால் சில நல்ல காரியங்கள் தாமதமாகும். தொழில் ஸ்தானத்தில் மறைமுகமாக சில எதிர்ப்புக்கள் இருக்கும்; எதிலும் மனத்திருப்தி வராது; அடிக்கடி யாராவது இனஜனங்கள் உங்களைக் குறைகூறியபடிதான் இருப்பார்கள். அவர்களுடன் நிதானமாக இருக்கவும். நல்லவர்களுக்கு எதிர்ப்புக்கள் அதிகம் இருக்கும். குடும்பத்தில்எதிர்ப்பாலாரை அனுசரித்துப் போகவும்; விஷ பீடைகள், வாத, வாய்வுக் குழப்பங்கள், இடுப்புவலி, காயம், சளி, முட்டு, உஷ்ண பீடைகள் கொடுக்கும். இடமாற்றங்களால் பிடிபாடுகள் சிலருக்கு ஏற்பட்டுக் கஷ்டப்படுவார்கள்; தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ...நூலகம்.

# ஒழுங்கையிலே ஒரு கல்

| | | | |
|---|---|---|---|
| புல்லுக்கட்டினைத் | தலையில் | வைத்தே | நடக்கின்ற |
| செல்லாச்சி | இடுப்பாய் | செல்கின்ற | தோர்ஒழுங்கை |
| மிலாந்தி | மிலாந்தி | நடந்தால் | சடுதியிலே |
| விலாஎலும்பு | உடையும் | விபத்துக்கள் | நடக்குமதில் |
| பட்டென்று | திருப்பங்கள் | பலஉண்டு | இன்றதிலே |
| குட்டிப் | பாறாங்கல் | குந்தி | யிருக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| ஆத்திரத்தில் | நாய்க்கெறிந்த | கல்லோ | அடுத்தவனின் |
| வீட்டுக்கெறிய | வெளிக்கிட்டு | 'ரோச்' | தெரிய |
| போட்டோடிவிட்ட | கல்லோ | பொறிவெடிதான் | இதன்கீழே |
| மாட்டியிருக் | கிறதோ? | யாரறிவார் | ராவிருட்டில் |
| இக்கல்லால் | நடந்த | இடர்ப்பாடு | எத்தனையோ |

| | | | |
|---|---|---|---|
| விசிலோடு | சைக்கிளிலே | வலம்வந்து | இக்கல்லால் |
| உசிர்போக | ஓலமிட்டு | உருண்டவர்கள்; | மதிலோடு |
| கல்லில் | சறுக்கி | காற்றுப்போய் | நின்றவர்கள் |
| பல்லிழந்து | போனோர்; | பாதங் | கிழிபட்டோர் |
| பொல்லை | இதன்மேலூன்றி | புரண்டு | விழுந்தோர்என்று |
| தொல்லைப் | பட்டோர்பலபேர் | ஆனால் | விழுந்தெழும்பி |
| செல்வோரின் | வாயில் | தூசணங்கள் | வருமொழிய |
| கல்லை | நகர்த்த | எந்தக்கையும் | முனைவதில்லை |

| | | | |
|---|---|---|---|
| பகலில் | மனிசருக்குப் | பல | சோலி |
| அவசரங்கள் | நூறு; | ஆபீஸிற்கு | லேற்றாச்சு |
| கவனமாய் | போனால் | சரிதான் | என்றொருவர் |
| உவங்கள் | அரசாங்கம் | உதவாது | என்றொருவர் |
| மனிசருக்கு | நாட்டில் | மதிப்பில்லை | என்றொருவர் |
| முனிசிப்பாலிற்றி | ஆக்கள் | முசுடுகளே | என்றொருவர் |

| | | | |
|---|---|---|---|
| பெட்டிசன் | போடென் றொருவர்; | பலனில்லை | இதைச்சும்மா |
| விட்டுத்தள் | ளென்றொருவர் | விசர்த்தமிழர் | நிர்வகிச்சால் |
| இப்படித்தான் | என்றொருவர்; | இதுவிதிதான் | என்றொருவர் |
| கல்லாலே | பட்ட | காயங்கள் | மாறிவிட்டால் |
| எல்லாம் | மறந்தாச்சு; | என்றாலும் | மற்றொருநாள் |

| | | | |
|---|---|---|---|
| கல்லில் | இவர்பிள்ளை | காலிடறி | வீழ்ந்ததனால் |
| தையல் | நெற்றியிலே; | தறுதலையான் | நடுறோட்டில் |
| கல்லை | விட்டு | வச்சதெந்த | கழிசடையோ |
| உய்யாதின் | நாடு | உருப்படாதிச் | சனங்களென |
| வைகின்றார்; | வோட்டில் | வளர்த்திவிட்ட | பிள்ளையுடன்; |
| பையஅவன் | காயம் | பறந்துவிட | பழையபடி |
| உய்வார்இவர் | மீண்டும் | ஓடுகிறார் | ஆடுகிறார் |

— ச. முகுந்தன் —

# அன்னை ஓர் அதிசயப் புனிதை

அல்பேனிய நாட்டு
அருட்கன்னி மலரொன்று
இந்திய மண்ணை
இரக்கமுடன் நேசித்தது.
வெள்ளை நிலா ஒளிக்கீற்று
சேரிக்குளத்தை நிறைத்ததினால்
அநாதை அல்லிகள் மலர்ந்தன.
தெருவோரத்தின் காகிதக் குப்பைகள்
அன்னை இல்ல ஆலையில் சேர்த்து
அழகிய நூல்களாய் வெளிவந்தன.
விட்டில் பூச்சிகள் விளக்கை விடுத்து
ஒளிகொடுத்திடும் திரிமெழுகாகின,
மரணத்தைச் சுமந்த வீதி இல்லத்தோர்
''நிர்மல் கிருதாயில்'' நிம்மதியாய் மரித்தனர்.
குப்பைத் தொட்டில் பாலன்கள்
சிரித்து மகிழ்ந்தன ''சிசுபவனில்.''
தொழுநோய் கண்டு தூர ஒதுங்கியோர்
மறுவாழ்வு கண்டனர் ''சாந்தி நகரில்''
மணமாகாது தாய்மை யடைந்தோர்
மங்கையராகவே காலம் கழித்தோர்
மனம் நிறைந்தனர் அன்னையின் இல்லத்தில்.
இத்தனை பணிசெய்ய எப்படி முடிந்தது?
ஆரம்பப் பணிக்கே ஐந்து ரூபா தான்
ஆண்டவன் துணைதான் அவளின் வெற்றி!
காறி உமிழ்ந்தனர் கைகளில் கனவான்கள்
எதிர்ப்புக்கள் ஆயிரம் எதிர்வந்து நின்றன
கால கெதியில் பனிபோல் மறைந்தன
உதவிகள் ஆயிரம் குவிந்தன
உலகமே போற்றி வியந்தது
பரிசுகள் கொடுத்து மகிழ்ந்தனர்
இத்தனை பெருமைக்கும் யாரிவர்?
வாழ்வு கொடுக்கச் சாவைத்தேடிய
தெரேசா வென்ற 'பெலிக்கான் பறவை'

— அபீர்ராஜன் —

# மாரடைப்பும் அதன்...

(VII ஆம் பக்கத் தொடர்)

யாகவுள்ள உணவுகளும் (வெண்ணெய், பட்டர், நெய், பாற்கட்டி, கொழுப்பு நிறைந்த இறைச்சி, முட்டை மஞ்சட் கரு), செறிவேறிய (Saturated) கொழுப்புகளை யுடைய உணவுகளும் (தேங்காய் எண்ணெய்) குருதியிலுள்ள கொழுப்பின் அளவை உயர்த்துகின்றன. ஆனால் செறிவேறாத (Mono and Poly Unsaturated — நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், மரக்கறி எண்ணெய்) கொழுப்புகள் விளைவை ஏற்படுத்துவதில்லை. அத்துடன் நார்ப்பொருள் நிறைந்த மரக்கறி வகைகள், பழவகைகள் சிறந்தவை.

மீனில் இருக்கும் கொழுப்பு கொலஸ்திரோலைக் குறைப்பதாகத் தெரியவந்துள்ளது.

காபோவைதரேற்றுக்கள், புரதங்கள், கொழுப்புகள் போன்ற எந்த வகையிலாவது அளவுக்கு மீறிய கலோரிகளை உட்கொள்வது குருதியிலுள்ள கொலஸ்திரோலை அதிகப்படுத்துகிறது.

### புகைப்பிடித்தல்

மாரடைப்பு ஏற்பட்ட ஒருவர் தொடர்ந்து புகைப்பிடிப்பவராக இருந்தால் மீண்டும் மாரடைப்பு ஏற்படும் சாத்தியக் கூறுகள் அதிகம். புகையிலுள்ள முக்கிய பதார்த்தங்களான நிக்கொட்டினும் காபன் மொனோட்சைட்டும் இதயத்தைப் பாதிக்கின்றன. நிக்கொட்டின் அதிரீனல் சுரப்பியைத் தூண்டி அதிரீனலீனை சுரக்கச் செய்கிறது. இது இருதயத் துடிப்பையும் குருதி அமுக்கத்தையும் அதிகரிக்க வைக்கிறது. அத்துடன் காபன் மொனொட்சைட்டு குருதியிலுள்ள செவ்வணுக்களுடன் (ஈமோகுளோபினுடன்) சேர்ந்து ஒட்சிசனை இருதயத்திற்கும் உடலின் ஏனைய பாகத்திற்கும் கொண்டு செல்லும் அளவைக் குறைக்கிறது. இவை இரண்டும் குருதிக் குழாயில் குருதி உறைவதைத் தூண்டுவதுடன் கொழுப்பையும் படிவடையச் செய்கிறது.

### மன அழுத்தம்

மன அழுத்தம் இருதய நோயாளியை மிகவும் பாதிப்படையச் செய்யும். எனவே நோயாளி மன அழுத்தத்தை ஏற்படுத்தும் விடயங்களைத் தவிர்ப்பது நல்லது.

### உடற்பயிற்சி

மாரடைப்பு ஏற்பட்ட ஒருவர் மருத்துவரின் ஆலோசனையுடன் உடற்பயிற்சியினால் அவரின் இருதயத்தை வலுவாக்கலாம். நடத்தல், சைக்கிள் ஓடுதல் போன்ற உடற்பயிற்சிகளை குறைந்தளவில் ஆரம்பித்துப் படிப்படியாக அதிகரிக்கலாம்.

### மாரடைப்பின் பின் ஏற்படும் அறிகுறிகள்

(1) அஞ்சைனா (Angina):- இது முடியுரு நாடிகளில் அடைப்பு ஏற்படுவதனால்— இருதயத்திற்கு போதியளவு குருதியும் ஒட்சிசனும் வழங்கப்படுவது தற்காலிகமாக தடைப்படுவதால் —ஏற்படும் அசௌகரியமாகும். இதன் அறிகுறிகளும் மாரடைப்பின் போது ஏற்படும் அறிகுறிகளும் ஒரே மாதிரியானதாக இருக்கும். ஆனால் இங்கு ஏற்படும் நெஞ்சுநோ சில நிமிடங்களுக்கே இருந்து ஓய்வின் போது மறைந்து விடும்.

(2) மூச்சிளைப்பு (Breathlessness):-
மாரடைப்பு ஏற்பட்டதன் பின்னர் பொதுவாக மூச்சிளைப்பு ஏற்படும். இருதயத்தின் சுருங்கி விரியும் தன்மை குறைவதே இதற்குக் காரணம். இதனை உடற்பயிற்சி மூலம் அல்லது மாத்திரைகள் மூலம் தவிர்த்துக்கொள்ளலாம்.

(3) களைப்பும் சோர்வும் (Tiredness and Fatique):-
இது பொதுவாக நோயாளிக்கு இருதயத்தின் தொழிற்பாட்டுக் குறைவால் ஏற்படுவதைவிட மனநிலை பாதிக்கப்படுவதாலேயே ஏற்படுகிறது. நோயாளி பாவிக்கும் சில மாத்திரைகளினாலும் இது ஏற்படும் (B blockers)

4) இருதய படபடப்பு (Palpitation)

(5) தலைச்சுற்றும் மயக்கமும் (Faintness and Fainting).

சாதாரண ஒருவர் படுக்கையிலிருந்து எழும்பும்போது சில சமயங்களில் தலைச்சுற்று ஏற்படலாம். இது பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஆனால் மாரடைப்பு ஏற்பட்ட நோயாளி ஒருவர் படுக்கையில் அல்லது இருக்கையில் இருக்கும்போதே திடீரென மயக்கமுற்றால் அல்லது சுயநினைவு அற்றுப் போனால் சிகிச்சை அளிப்பது மிக அவசியம்.

எனவே மாரடைப்பு ஏற்பட்ட நோயாளிகள் வைத்தியரை நாடி அவரது ஆலோ[illegible] லது. ★

# அரசியல்...

(XII ஆம் பக்கத் தொடர்)

தற்பொழுது ஏற்பட்டுள்ள குழப்ப நிலை அமெரிக்காவுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

யெல்ட்ஸின் அரசைக் காப்பாற்றும் நோக்கத்துடன் ஏற்கனவே வெளிநாடுகள் 2640 கோடி டொலரை ரஷ்யாவுக்கு கடனாக தந்துள்ளன.

மேலும் உதவிகள் சாத்தியப்படாது என்றே கருதப்படுகிறது. கிளின்ரனின் ரஷ்ய விஜயமும் தற்போதைய நெருக்கடியில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் கொண்டுவரும் என்று சொல்வதற்கில்லை.

ரஷ்யாவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2 ஆயிரம் ஆண்டில் நடைபெற வேண்டும். 1993 அரசமைப்புப் படி ஜனாதிபதி ஒருவர் இருதடவைகள் மட்டுமே பதவியில் இருக்க முடியும்.

ஆனால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்று யெல்ட்ஸின் அறிவித்துள்ளார். யெல்ட்ஸினின் வாரிசாக தற்போது கருதப்படும் விக்ரர் செர்நோமைடின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்றே கருதப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் எப்படி இருந்தாலும் தற்போதைய அரசமைப்பு உள்ளவரை ரஷ்யாவில் அரசியல் சிக்கல் தீராது. ★

# சேவைக்கு முன்...

(I ஆம் பக்கத் தொடர்)

சேவை செய்வதற்காக பல் வேறுஏற்பாடுகளை இச்சபை செய்துள்ளது.

யாழ். ஆயரின் அழைப்பின் பேரில் இச்சபையைச் சேர்ந்த இரண்டு அருட் சகோதரிகள் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களைப் பார்வையிட்டதுடன் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு செய்து கொடுக்க வேண்டிய வசதிகள்—உதவிகள்—பற்றி நேரில் கேட்டறிந்தனர். விரைவில் யாழ்ப்பாணத்தில் இச்சபையின் கிளை ஒன்றும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

அன்னையின் பணிகள் யாழ்ப்பாணம் வரை விரிந்துள்ளன. அது நாடு முழுவதும் பரவ இறைவனிடம் நாமும் வேண்டிக்கொள்வோமாக. ★

# விடைகள்

IX ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:

### கண்டுபிடியுங்கள்

1. முதலாவது, ஐந்தாவது பழங்கள்.
2. மூன்றாவது, ஏழாவது சுண்டெலிகள்.

### வார்த்தை விளையாட்டு

பூ, பூதம், பூகம்பம், பூசை, பூரம், பூரணை, பூண், தினை, திகி, திசை, திணை, திடம், திண், திண்ணை, திதி, விதம், விழுதி, விதி, விம்பம், விசை, விரை, விரதம், விபரம், விடம், வின், விகடம், தக, தர, தம், தனி, தடை, தரம், தம்பம், தபம், தகரம், தடம், தண், தண்டனை, தண்டம், கபம், கதம், கனி, கம்பம், கதி, கசை, கனை, கரம், கரகம், கதம்பம், கணை, கடம், கடகம், கண், கண்டம், கபடம், பதி, பதம், பதிகம், பசை, பனை, பரதம், பம்பரம், பதவி, பகம், படம், பண், பண்ணை, பண்டம், பரன்.

### விடை தெரியுமா

1. மூன்று ரூபா முத்திரைகள் — 13; ஐந்து ரூபா முத்திரைகள் ஏழு.
2. ஒன்று, இரண்டு மூன்று.
3. ஆயிரத்து எண்ணூறு கன்றுகள்.
4. மூன்று ஆண்டுகள்; பதினைந்து பெண்கள்; இரண்டு சிறுவர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல், பொருளாதார நெருக்கடிகள்
# யெல்ட்ஸினின் பதவிக்கு அச்சுறுத்தல்

## கம்யூனிஸ்ட்டுகளுடன் உடன்பாடு காண்பதே பிரச்சினை தீர ஒரே வழி

உலக உலா

என்.பி.சீலன்

ரஷ்யா பெரும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது. யெல்ட்ஸினின் பதவிக்கே உலைவைக்கும் அளவுக்கு இவை பூதாகாரமாக உருவெடுத்துள்ளன.

கடந்த சில வாரங்களாக யெல்ட்ஸின் பதவி துறக்கலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. எனினும் தனது பதவிக்காலம் முடிவடையும் வரை—அதாவது 2 ஆயிரம் ஆண்டு வரை—தாம் பதவியில் இருக்கப் போவதாக யெல்ட்ஸின் தற்பொழுது அறிவித்துள்ளார்.

பதவி நீடிப்பதற்காக நாடாளுமன்றத்துடன் சமரசம் செய்து கொள்வாரா? அல்லது நாடாளுமன்றத்துடன் தொடர்ந்து அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடப்போகிறாரா என்பது தெரியவரவில்லை.

### கம்யூனிஸ்ட்டுகள் பெரும்பான்மை

யெல்ட்ஸினுக்கு எதிரான கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தோழமைக்கட்சிகளும் ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழ் சபையான டுமாவில் (Duma) பெரும்பான்மை பலம் பெற்றிருப்பதே ரஷ்யாவில் அரசியல் நெருக்கடி ஏற்படக் காரணம் ஆகும்.

நீண்ட நாள்களாக யெல்ட்ஸினுக்கு எதிரான போராட்டத்தில் நாடாளுமன்றம் ஈடுபட்டு வருகிறது. யெல்ட்ஸினின் திட்டங்களுக்குமுட்டுக்கட்டை போடுவதில் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளையும் அது ஈட்டி உள்ளது.

அரசியலுடன் பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து கொண்டது யெல்ட்ஸினுக்குப் பெரும் சவால் ஆகும். அவரை வீழ்த்த சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்த கம்யூனிஸ்ட்டுகளுக்கு இது அரிய வாய்ப்பு என்று அவதானிகள் கருதுகின்றனர்.

யெல்ட்ஸின் பதவி நீடிக்கப்போவதாக அறிவித்துள்ள போதிலும் இந்த நெருக்கடிகளில் இருந்து தப்பிப்பிழைப்பாரா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.



கிரியெங்கோ

1993 அரசமைப்பின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அளவுக்கு மிஞ்சிய அதிகாரங்களைப் பயன்படுத்தி கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான போராட்டத்தை யெல்ட்ஸின் நடத்தி வருகிறார். தனது திட்டங்களுக்கு நாடாளுமன்றம் முட்டுக்கட்டை போட்டபோது இரு தடவைகள் நாடாளுமன்றத்தைக் கலைத்தார். எனினும் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகள் மீண்டும், மீண்டும் பதவிக்கு வருவதை அவரால் தடுக்க முடியவில்லை.

நாடாளுமன்றத்துக்கு உள்ள ஆகக்குறைந்த அதிகாரங்களை இயலுமான வரை பயன்படுத்தி கம்யூனிஸ்ட்டுகள் யெல்ட்ஸினின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர்.

இவற்றில் பிரதானமானது யெல்ட்ஸினின் பொருளாதார சீர்திருத்த யோசனைகள். இவற்றை அமுல் செய்யாது ரஷ்யாவினால் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள முடியாது.

### நியமனங்களை அங்கீகரிக்க மறுப்பு


யெல்ட்ஸினினால் செய்யப்படும் நியமனங்களையும் நாடாளுமன்றம் ஏற்க மறுத்து வருகிறது.

ரஷ்யாவின் தற்போதைய அரசமைப்புப்படி யெல்ட்ஸினின் நியமனங்களை

வாரம் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பிரகாரம் யெல்ட்ஸினின் அதிகாரங்கள் சிலவற்றைக் கட்டுப்படுத்தும் உடன்பாடு ஒன்றில் கடந்த வாரம் ரஷ்ய அரசியல் தலைவர்கள்—பெரும்பாலும் கம்யூனிஸ்ட்டுகள்—கைச்சாத்திட்டனர்.

யெல்ட்ஸின் இந்த உடன்பாட்டுக்கு ஒப்புதல் அளிப்பாரானால் விக்ரர் செர்நோமைடினின் நியமனத்தையும், பொருளாதார சீர்திருத்த யோசனைகளையும் நாடாளுமன்றம் அங்கீகரிக்க வழி ஏற்படும். ஆனால் ரஷ்ய



யெல்ட்ஸினும் கிளின்ரனும்

இரண்டு தடவைகள் மட்டுமே நிராகரிக்க முடியும். மூன்றாவது தடவையும் நிராகரிக்கும் பட்சத்தில் யெல்ட்ஸின் நாடாளுமன்றத்தைக் கலைத்து மறு தேர்தலுக்கு உத்தரவிடலாம்.

கடந்த மார்ச் மாதம் 36 வயதுடைய இளம் அரசியல்வாதியான சேர்கி கிரியெங்கோவை (Sergei Kiriyenko) யெல்ட்ஸின் புதிய பிரதமராக நியமித்தபோது அவரது நியமனத்தை இரு தடவைகள் நாடாளுமன்றம் நிராகரித்தது.

நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக யெல்ட்ஸின் அச்சுறுத்தினார். மூன்றாவது தடவை இந்த நியமனம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட போது அங்கீகாரம் கிடைத்தது.

கடந்த வாரம் யெல்ட்ஸினினால் புதிய தற்காலிக பிரதமராக நியமிக்கப்பட்ட விக்ரர் செர்நோமைடினின் (Viktor Chernomyrdin) நியமனத்தையும் கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றம் நிராகரித்து விட்டது.

தற்போது யெல்ட்ஸின் உடனடியாக அவரை மீண்டும் பிரதமராக நியமித்துள்ளார்.

அங்கீகாரத்துக்காக இது மீண்டும்நாடாளுமன்றம்செல்ல இருக்கிறது. அதற்கு முதல் நாடாளுமன்றத்துக்கும் யெல்ட்ஸினுக்கும் இடையில் ஏதாவது ஓர் உடன்பாடு ஏற்பட்டுவிடுமானால் அங்கீகாரம் கிடைத்துவிடும்.

### இணக்கம் ஏற்படுத்த முயற்சி

யெல்ட்ஸினுக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகள் கடந்த

ஜனாதிபதி எதிர்காலத்தில் நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்டவராக நடக்கவேண்டி வரும். பதவிக்காலம் முடியும் வரை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கவும் முடியாது.

இந்த யோசனைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் அல்லது பதவி துறக்கவேண்டும் என்ற நிலைமையிலேயே தற்பொழுது யெல்ட்ஸின்இருந்து வருகிறார். விக்ரர் செர்நோமைடினின் நியமனத்துக்கு நாடாளுமன்றம் மூன்றாவது தடவையில் அங்கீகாரம் வழங்கினாலும் அரசின் பொருளாதார திருத்தத் திட்டங்களை அமுல் செய்வது தற்போதைய நிலையில் தவிர்க்கமுடியாத ஒன்றாகக் கருதப்படுகிறது. இதற்கு நாடாளுமன்றத்திலுள்ள கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவு தேவை.

### விக்ரர் செர்நோமைடின்

தற்பொழுது மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் விக்ரர்செர்நோமைடின் 1992 டிசம்பரில் முதல்தடவையாக யெல்ட்ஸினால் பிரதமராக நியமிக்கப்பட்டார். கடந்த ஆண்டுவரை ரஷ்யாவில்ரூபிள் நாணயத்தின் மதிப்பு ஸ்திரமாக இருந்தது. அதே சமயம் விலைவாசிகளும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

ஆனால் இந்த வருட முற்பகுதியில் இருந்து நிலைமை மாறியது. பொருளாதார நெருக்கடிகள் காரணமாக ரூபிள் நாணயத்தின் மதிப்பு ஆட்டம்காண ஆரம்பித்தது. போதாக்குறைக்கு யெல்ட்ஸினின் பொருளாதார சீர்திருத்த யோசனைகளுக்கு நாடாளுமன்றமும் முட்டுக்கட்டை போட்டது. பொருளாதார சீர்திருத்தங்களை

அமுல் செய்வதில் தீவிரம் போதாது என்று கூறி விக்ரர் செர்நோமைடினை கடந்த மார்ச் மாதம் யெல்ட்ஸின் பதவி நீக்கம் செய்தார். அவர் இடத்துக்கு சேர்கி கிரியெங்கோவை பிரதமராக நியமித்தார்.

கிரியெங்கோவுக்கு அரசியல் அனுபவம் குறைவு. ஆனால் பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொள்ளும் திறன் இருந்தது.

எனினும் அவரின் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. இதன் உச்சமாக ரூபிள் நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டது. கிரியெங்கோ பதவி இறக்கப்பட்டு மீண்டும் விக்ரர் செர்ரோமைடின் தற்காலிக பிரதமராக யெல்ட்ஸினினால் நியமிக்கப்பட்டார். ரூபிள் நாணயத்தின் மதிப்பைக் குறைத்தது கிரியெங்கோ செய்த பெரிய தவறுஎன்கிறார் யெல்ட்ஸின்.

சமீபகால வரலாற்றில் எந்த ஒரு ரஷ்யத் தலைவரும் இப்படியான பெரிய நெருக்கடியை எதிர் நோக்கவில்லை என்று அவதானிகள் கருதுகின்றனர்.

### நாணயமதிப்பு குறைப்பும் நெருக்கடியும்

ரூபிள் நாணயத்தின் மதிப்பை காப்பாற்றத் தவறியதே யெல்ட்ஸினுக்கு ஏற்பட்ட பெரிய தோல்வி என்று கருதப்படுகிறது. ரூபிளின் மதிப்பு மூன்றில் ஒன்றாக தற்பொழுது குறைந்து விட்டது. ரஷ்யாவின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு இது கவர்ச்சிகரமான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தினாலும் உள் நாட்டில் பெரும் தாக்கம் உருவாகி வருகிறது.

ரூபிளின் மதிப்பு இறக்கப்பட்ட பின்னர் உள்நாட்டில் விலைவாசிகள் 20 முதல் 50 சதவீதம் உயர்ந்துள்ளன. ரூபிள் நாணயத்தின் இருப்புக்களை வைத்திருந்த ரஷ்ய வங்கிகள் வெளிநாட்டுக் கடன்களை டொலரில் மீளளிக்கும் போது பெரும் இழப்புகளை எதிர்நோக்கின.

வங்கிகளில் மக்கள் நம்பிக்கை இழந்ததால், வைப்புக்களை மீளப்பெற ஆரம்பித்தனர்.

பணத்தை மீளளிக்க முடியாத நிலைமை வங்கிகளுக்கு ஏற்பட்டது.

இத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காக ஏற்கனவே ரஷ்யாவின் மூன்று வங்கிகள் இணைந்து விட்டன. 6 வங்கிகள் தமது மூலவளங்களை ஒன்றிணைத்துள்ளன. கடனை மீளளிக்கத் தவறிய ரஷ்யாவின் 13ஆவது பெரிய "ஏபி இம்பீரியல்" வங்கியின் லைசென்ஸை ரஷ்ய மத்திய வங்கி ரத்துச் செய்து விட்டது.

தற்போதைய நெருக்கடிக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ரஷ்ய மத்திய வங்கியையே பலரும் குறை கூறுகின்றனர்.

ரஷ்யாவுக்கு மேலும் 480 கோடி டொலர் கடன் வழங்குவது தொடர்பாக இம்மாதம் சர்வதேச நாணயச் சபை கூடி ஆராய இருக்கிறது.

சர்வதேச நாணயச் சபைத் தலைவர் மைக்கல் கன்டேகஸ் கடந்த வாரம் உக்ரைன் வந்தபோது தற்காலிக பிரதமர் விக்ரர் செர்நோமைடின் உக்ரைன் சென்று அவருடன் பேச்சு நடத்தினார். தற்போதைய நிலையில் கடன் உதவி தடைப்படக் கூடாது என்பதில் ரஷ்யா தீவிரம் காட்டி வருகிறது.

### "சார்" கால அதிகாரம்

1993 இல் யெல்ட்ஸினுக்கு எதிராக கம்யூனிஸ்ட்டுகள் மேற்கொண்ட "நாடாளுமன்றப் புரட்சி" தோல்வி அடைந்த பின்பே யெல்ட்ஸின் புதிய அரசமைப்பை உருவாக்கி சகல அதிகாரங்களையும் தம்வசம் எடுத்துக் கொண்டார்.



விக்ரர் செர்நோமைடின்

அப்புரட்சியை அடக்குவதற்கு அப்பொழுது நாடாளுமன்றத்துக்கு டாங்கிகள் கூட அனுப்பப்பட்டன.

ரஷ்யாவின் கடைசி மன்னர் சார் (Tsar) வைத்திருந்த அதிகாரங்களை ஒத்த அதிகாரங்களை புதிய அரசமைப்பு மூலம் யெல்ட்ஸின் பெற்றுக் கொண்டார்.

இதனால் யெல்ட்ஸினை பதவி விலக்குவது சுலபமான காரியம் அல்ல. நாடாளுமன்றத்தில் குற்றப் பிரேரணை (Impeachment) கொண்டுவர வேண்டும்.

குற்றப் பிரேரணை கொண்டு வந்தாலும் அதனை நிறைவேற்றி அமுல் செய்வது சாத்தியமானது அல்ல. இந்த வருட முற்பகுதியில் ரஷ்ய நாடாளுமன்றம் கூடி குற்றப்பிரேரணை கொண்டு வருவது குறித்து ஆராய்ந்தது.

இறுதியில் குற்றப் பிரேரணையை தயாரிப்பதற்காக ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. குற்றப் பிரேரணை கொண்டுவந்தாலும் அதனை செயற்படுத்துவது சாத்தியப்படாது என்று கருதப்படுவதாலேயே நாடாளுமன்றம் தற்பொழுது யெல்ட்ஸினின் நியமனங்களுக்கும் பொருளாதார சீர்திருத்த யோசனைகளுக்கும் முட்டுக்கட்டை போட்டு தனது போராட்ட வடிவை மாற்றிக் கொண்டுள்ளது.

### அமெரிக்காவின் நிலைப்பாடு

தற்போதைய நிலையில் யெல்ட்ஸின் பதவி விலகுவதையும் கம்யூனிஸ்ட்டுகளிடம் மீண்டும் ஆட்சி செல்வதையும் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் விரும்பவில்லை.

கம்யூனிஸத்தில் இருந்து ஜனநாயக பாதைக்கு ரஷ்யாவை இட்டுச் செல்வதே அமெரிக்காவின் நோக்கம்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org